# முன்னுரை

# 1 முன்னுரை

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகமானது தமிழக அரசால் 2012 ம் ஆண்டு (சட்டம் எண். 21, படி, 19 ஜீன் 2012) துவங்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம், நாகப்பட்டினத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. மேலும் இப்பல்கலைக் கழகமானது தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் என தமிழக அரசால் 16.02.2018 அன்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இப்பல்கலைக்கழகமானது மீன்வள அறிவியல் புலம், அடிப்படை அறிவியல் புலம், மீன்வளப் பொறியியல் புலம் மற்றும் உணவு மற்றும் ஊட்டச்சத்து புலம், என நான்கு புலங்களை கொண்டுள்ளது.

இப்பல்கலைக்கழகத்தின் அங்கமாக மூன்று மீன்வளக் கல்லூரிகள் (மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி, பொன்னேரி மற்றும் தலைஞாயிறு) மற்றும் நாகப்பட்டினத்தில் ஒரு மீன்வளப் பொறியியல் கல்லூரி, ஆகியவை இயங்கி வருகின்றன. இவை தவிர, முதுநிலை பட்டப்படிப்பு நிலையம், மீன்வள உயிர் தொழில்நுட்பவியல் மற்றும் மீன்வள வணிக பள்ளி ஆகியவை சென்னையில் உள்ள வாணியஞ்சாவடியில் இயங்கி வருகின்றன. மேலும், இப்பல்கலைக்கழகம் கீழே கொடுக்கப்பட்டுள்ள 5 தொழில் நுட்ப இயக்குனரகங்களையும் கொண்டுள்ளது.

- ஆராய்ச்சி இயக்குனரகம்
- விரிவாக்க கல்வி இயக்ககம்
- வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு இயக்குனரகம்
- மீன்வளர்ப்பு தொழிற்காப்பகம் மற்றும் தொழிற் பயிற்சி இயக்ககம்
- மீன்வள தொழிற் காப்பகம் மற்றும் தொழிற் பயிற்சி இயக்குனரகம்

தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு இயக்குனரகத்தின் கீழ் 7 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவையாவன; தஞ்சாவூர், பறக்கை மற்றும் கணபதிபுரம் (கன்னியாகுமரி), மண்டபம், (ராமநாதபுரம்) பாரூர் (கிருஷ்ணகிரி), பவானிசாகர் (ஈரோடு) மற்றும் திருச்சிராப்பள்ளி. மேலும் இப்போது நாகப்பட்டினம் மாவட்டத்தில் சிக்கலில் ஒரு வேளாண் அறிவியல் மையமும் (KVK) இப்பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்குகிறது. இந்த கல்லூரிகள் / நிலையங்கள் மற்றும் இயக்குனரகங்கள் அனைத்தும் சேர்ந்து தற்போது தமிழ்நாடு டாக்டர். ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தில் 30 அலகுகள் இயங்குகின்றன. இப்பல்கலைக்கழகம், மீன்வள அறிவியலில் தேசிய மற்றும் மாநில அளவில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், தேசிய மற்றும் சர்வதேச மனித வள மேம்பாடு மற்றும் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு நிலைகளில் மேம்பாட்டு பணிகளில் செயலாற்றி வருகிறது.

### தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் அடிப்படை நோக்கங்கள் கீழ்வருமாறு;

- மீன்வள அறிவியலின் பல்வேறு துறைகளின் கீழ் தரமான தொழில்நுட்பக் கல்வியை கற்பித்தல்;
- மீன்வள அறிவியலின் பல்வேறு முன்னோடி ஆராய்ச்சிகளை மேற்கொண்டு நவீன மீன்வளத் தொழில் நுட்பங்களை உருவாக்குதல்;
- மீன்வளப்போர், மீனவர், இளைஞர்கள் மற்றும் பிற தொழில் முனைவோர்களுக்கு மீன்வளத் தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி, தொழில்நுட்ப ஆலோசனை திட்ட அறிக்கை போன்ற விரிவாக்க சேவைகளை வழங்குதல்;
- தமிழகத்தின் பொருளாதார மேம்பாட்டை இலக்காகக்கொண்டு, மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கோடு மீன்வளக் கல்வி, மீன்வள ஆராய்ச்சி மற்றும் மீன்வள விரிவாக்கம் போன்றவற்றின் மூலம் முழுமையான மீன்வள மேம்பாட்டிற்கு உதவி செய்தல்; நீர்வாழ் உயிரின பல்வகை மற்றும் மீன்வள ஆதாரத் திறன் குறித்த அடிப்படைத் தகவல்களை சேகரித்தல்;
- இந்திய கால்நடை மருத்துவ முகமையின் விதிமுறைகளை முன் மாதிரியாகக் கொண்டு மீன்வள அறிவியலில் உயர்தர தொழில்நுட்ப வல்லுனர்களை உருவாக்குதல்;
- மீன் மற்றும் மீன்பொருட்களை மதிப்பு கூட்டி அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை உருவாக்கித் தருதல்;

- மாநிலத்தில் நீர்வாழ் உயிரினங்களின் நோய்களைக் கண்டறியவும், கண்காணிக்கவும், அமைப்பு ஒன்றினை உருவாக்குதல்; ஆகியவை ஆகும்.

## நிர்வாக கட்டமைப்பு

இப்பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டமைப்பானது மாநில வேளாண் பல்கலைக் கழகங்களின் நிர்வாக கட்டமைப்பின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக் கழகத்தின் செயல்பாட்டுக் கொள்கைகள், மீன்வள அறிவியல் சார்ந்த கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க செயல்பாடுகள் கீழ்வரும் குழுக்களால் மேலாண்மை செய்யப்படுகின்றன:

- மேலாண்மைக்குழு
- கல்விக்குழு
- திட்டக்குழு
- நிதிக்குழு
- ஆராய்ச்சிக் குழு
- விரிவாக்கக் கல்விக்குழு
- பாடக்குழுக்கள் (புலன் – வாரியாக)

இப்பல்கலைக்கழகத்தின் கொள்கைகளை வகுக்கும் செயற்குழுக்களில் முதன்மை வகிப்பது மேலாண்மை குழுவே ஆகும். கல்விக்குழுவானது இப்பல்கலைக்கழத்தின் கல்வித்திட்டம், கல்வி போதித்தல், தேர்வு சம்பந்தப்பட்ட காரியங்களை கட்டுப்படுத்தும் அதிகாரத்துடன் மற்றும், கல்வித்தரத்தினை மேம்படுத்தும் பொறுப்பையும் பெற்றது. திட்டக்குழுவின் பணியானது பல்கலைக்கழகத்தின் திட்டமிடுதல் மற்றும் மேம்பாடு ஆகியவற்றிற்காக ஆலோசனை வழங்குதல் ஆகும். பல்கலைக்கழகத்தின் நிதி மற்றும் கணக்குகளை மேற்பார்வையிடுவது நிதிக்குழுவின் பணி ஆகும். ஆராய்ச்சிக் குழுவானது பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி திட்டம் சார்ந்த கொள்கை குறிப்புகளை வகுக்கும் உரிமை பெற்றது. மீன்வளத்துறை சார்ந்த அரசு நிறுவனங்களின் பங்களிப்போடு இப்பல்கலைக்கழகம் செய்யவேண்டிய விரிவாக்க கல்வி பணிகளின் கொள்கை முடிவுகளை வரையறை செய்யும் பணியினை விரிவாக்க கல்விக்குழு மேற்கொள்ளும். பாடக்குழுவானது இளநிலை மற்றும் முதுகலை பட்டங்களுக்கான பாடத்திட்டங்களை தொகுக்கும் பணி மற்றும் புதிய துறைகளை உருவாக்குதல்/நீக்குதல்/ பிரித்தல் அல்லது இருக்கின்ற துறைகளை மறுசீர் அமைப்பதற்காக கல்விக்குழுவிற்கு பரிந்துரைக்கும் பொறுப்புகளைப் பெற்றுள்ளது.

பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி, கல்வி மற்றும் விரிவாக்கப் பணிகள் துணைவேந்தர் அவர்களின் மேற்பார்வையில், பதிவாளர், ஆராய்ச்சி இயக்குநர், விரிவாக்கக் கல்வி இயக்குநர், தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி, கல்லூரி முதல்வர்கள், நிதி அதிகாரி மற்றும் வளாக அதிகாரி ஆகியோர் உதவியுடன் மேலாண்மை செய்யப்படுகின்றன.

## பல்கலைக்கழக அதிகாரிகள்

| | |
|---|---|
| பதிவாளர் | முனைவர். அ. சீனிவாசன் |
| தேர்வுக் கட்டுப்பாட்டு அதிகாரி | முனைவர். ப. ஜவஹர் |
| ஆராய்ச்சி இயக்குநர் | முனைவர். ஜி. ஜெயசேகரன் |
| விரிவாக்கக் கல்வி இயக்குநர் | முனைவர். எம். ராஜ்குமார் |
| இயக்குநர்<br>வளங்குன்ற நீருயிரி வளர்ப்பு இயக்ககம், தஞ்சாவூர் | முனைவர். ஜா.ஸ்டிபன் சம்பத் குமார் |
| இயக்குநர் (பொ), பல்கலைக்கழக பயிற்சி நிலையம்,<br>மாதாவரம் பால்பண்ணை, சென்னை– 600 051 | முனைவர். ஆர். செந்திலதிபன் |
| உடைமை அலுவலர் (பொ) | பொறியாளர். டி. அசோகன் (24.03.2021 வரை)<br>முனைவர். எம். ராஜ்குமார் (25.03.2021 முதல்) |
| நிதி அலுவலர் (பொ) (08.01.2020 முதல்) | திரு. டி. கணேசன் (01.12.2020 வரை)<br>திரு. வி.எஸ். அன்பரசு (02.12.2020 முதல்) |
| முதல்வர், கல்விபுலம் (பொ)<br>தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்,<br>நாகப்பட்டினம் – 611 002 | முனைவர். எம். ராஜ்குமார் (21.10.2020 வரை)<br>முனைவர். ப. அகிலன் (22.10.2020 முதல்) |
| முதல்வர்<br>மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி– 628 008 | முனைவர். பா. சுந்தரமூர்த்தி |
| முதல்வர்<br>டாக்டர். எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,<br>பொன்னேரி– 601 204 | முனைவர். ப. அகிலன் |
| முதல்வர் (பொ), மீன்வளப் பொறியியல் கல்லூரி,<br>தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்<br>நாகப்பட்டினம் – 611 002 | முனைவர். இரா. இராஜேந்திரன் |
| முதல்வர்<br>டாக்டர். எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,<br>தலைஞாயிறு, நாகப்பட்டினம் – 611 001 | முனைவர். சு. பாலசுந்தரி |
| முதல்வர், மீன்வள முதுகலை பட்டபடிப்பு கல்வி நிலையம்,<br>வாணியஞ்சாவடி, சென்னை– 603 103 | முனைவர். சீ. ஆ. சண்முகம் |
| இயக்குநர்<br>நீருயிரி வளர்ப்பு தொழில் முனைவோர் மற்றும் தொழில் பயிற்சி இயக்ககம்,<br>முட்டுகாடு, சென்னை – 603 112 | முனைவர். நா. ஃபெலிக்ஸ் |
| இயக்குநர்<br>மீன்வள தொழில் முனைவோர் மற்றும் தொழில்முறை பயிற்சி இயக்ககம்,<br>இராமநாதபுரம் – 614 904 | முனைவர். ந. நீதிச்செல்வன் |

# மேலாண்மைக் குழு

**பிரிவு – I (பதவிவழி உறுப்பினர்கள்)**

| | |
|---|---|
| முனைவர். கோ. சுகுமார்<br>துணைவேந்தர்<br>தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்<br>நாகப்பட்டினம் – 611 002. | Ph. 04365-256444<br>Fax : 04365-256443<br>vc@tnfu.ac.in |
| முனைவர். கே. கோபால், இ.ஆ.ப<br>அரசு முதன்மைச் செயலர்,<br>கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை,<br>தலைமைச் செயலகம், சென்னை – 600 009 | Ph. 044-25672937<br>Fax : 044-25677590<br>ahsec@tn.gov.in |
| திரு. கே. சண்முகம், இ.ஆ.ப<br>கூடுதல் தலைமைச் செயலர், நிதித்துறை<br>தலைமைச் செயலகம், சென்னை – 600 009 | Ph. 044-25671173,<br>Fax : 044-25671252<br>finsec@tn.gov.in |
| திரு. எஸ். எஸ். பூவலிங்கம், பி.எஸ்.சி. பி.எல்,<br>அரசுச் செயலர், சட்டத் துறை,<br>தலைமைச் செயலகம், சென்னை– 600 009 | Ph. 044-25672920<br>Fax : 044-25679403<br>lawsec@tn.gov.in |
| திரு. ஜெ.ஜெயகாந்தன், இ.ஆ.ப<br>மீன்வளத்துறை ஆணையர்<br>மாநில மீன்வளத் துறை<br>கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளம் ஒருங்கிணைந்த<br>அலுவலகம் வளாகம், அண்ணாசாலை, நந்தனம், சென்னை – 35 | Ph. 044-29510390<br>coffisheries@gmail.com |
| முனைவர். அ. சீனிவாசன்,<br>பதிவாளர் மற்றும் உறுப்பினர் செயலாளர்<br>தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்<br>நாகப்பட்டினம் – 611 002. | Ph. 04365-256432<br>Fax : 04365-256433<br>registrar@tnfu.ac.in |

**பிரிவு – II (நியமன உறுப்பினர்கள்)**

| | |
|---|---|
| முனைவர். எஸ். கண்ணப்பன்<br>முதன்மை விஞ்ஞானி, இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம்<br>மத்திய உவர் நீர்மீன் வளர்ப்பு நிறுவனம், சென்னை – 28 | Ph. 044-24618817<br>தொலைநகல்: 044–24610311<br>kannappan.s@icar.gov.in |
| திரு. எ. வேலாயுதம்<br>அய்யாம்பேட்டை, கடலூர் | அலைபேசி : 9443182188<br>velayuthamathi@gmail.com |
| திரு. எஸ். தினகரன்<br>கொட்டிவாக்கம், சென்னை – 41 | அலைபேசி : 9087747918<br>sdpavithran18@gmail.com |
| திருமதி. வி. எஸ். குசலகுமாரி<br>இணைச் செயலாளர்,<br>பாரத் சேவாசங்கம், திருவாரூர் | அலைபேசி : 9942985621<br>kulasakumari63@gmail.com |
| முனைவர். ஜாய்கிருஷ்ண ஜெனா<br>இணை இயக்குனர் (மீன்வளம்)<br>இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் (ICAR), புதுடெல்லி – 110 012 | Ph. 011-25846738<br>Fax : 011-25841955/9453019735<br>ddgfisheries@gmail.com |
| திரு. எஸ். பவின்ராஜ்<br>பூம்புகார் சட்டப் பேரவை உறுப்பினர்,<br>தரங்கம்பாடி, தாலுக்கா, நாகப்பட்டினம் | அலைபேசி : 9443574056 |
| தலைமை நிர்வாக அதிகாரி<br>தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம்<br>கால்நடை பராமரிப்பு பால்வளம் மற்றும் மீன்வளத்துறை<br>இந்திய அரசின் வேளாண் அமைச்சகம்<br>ஹைதராபாத் – 500 052 | Ph. 040–24015553<br>Fax : 040–24015568/040–24015552<br>info.nfdb@nic.in /cenfdb@gmail.com |

## கல்விக்குழு

| | | |
|---|---|---|
| **பிரிவு – I (பதவிவழி உறுப்பினர்கள்)** | | |
| தலைவர் (துணைவேந்தர்) | முனைவர். கோ. சுகுமார்<br>துணைவேந்தர்<br>தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டினம் | Ph. 04365-256444<br>Fax : 04365-256443<br>அலைபேசி : **9486553374**<br>vc@tnfu.ac.in |
| உறுப்பினர் செயலர் (பதிவாளர்) | முனைவர். அ. சீனிவாசன்,<br>பதிவாளர்<br>தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டினம் | Ph. 04365-256432<br>Fax : 04365-256433<br>அலைபேசி : **9443032439**<br>registrar@tnfu.ac.in |
| **பிரிவு – II (பதவிவழி உறுப்பினர்கள்)** | | |
| உறுப்பினர்கள் | முனைவர். கோபால், இ.ஆ.ப<br>அரசு முதன்மைச் செயலர்,<br>கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை<br>தலைமை செயலகம் – சென்னை 600 009 | Ph. 044-25672937<br>Fax : 25677590<br>ahsec@tn.gov.in |
| | திரு. ஜெ. ஜெயகாந்தன், இ.ஆ.ப.,<br>ஆணையர், மீன்வளத்துறை<br>ஒருங்கிணைந்த மீன்வளத்துறை அலுவலக வளாகம், நந்தனம்,<br>சென்னை – 600 035 | Ph. 044-29510390<br>coffisheries@gmail.com |
| | முனைவர். பா. சுந்தரமூர்த்தி<br>முதல்வர்<br>மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்<br>தூத்துக்குடி – 628 008 | Ph. 0461-2340554<br>Fax : 0461-2340574<br>deanfcrituty@tnfu.ac.in |
| | முனைவர். ப. அகிலன்<br>முதல்வர்<br>டாக்டர். எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,<br>பொன்னேரி – 601 204 | Ph. 044-27971556<br>Fax : 044-27971555<br>deanfcriponneri@tnfu.ac.in |
| | முனைவர். சு. பாலசுந்தரி<br>முதல்வர்<br>டாக்டர். எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,<br>தலைஞாயிறு, நாகப்பட்டினம் – 611 001 | Ph. 9345718579<br>deanfcritnayeru@tnfu.ac.in |
| | முனைவர். இரா. இராஜேந்திரன், முதல்வர் (பொ)<br>மீன்வளப் பொறியியல் கல்லூரி<br>நாகப்பட்டினம் – 611 002 | Ph. 04365-256501<br>Fax : 04365-256502<br>deancofe@tnfu.ac.in |
| | முனைவர். சீ.ஆ. சண்முகம்<br>முதல்வர்<br>மீன்வள முதுகலை பட்டபடிப்பு கல்வி நிலையம்<br>வாணியஞ்சாவடி, சென்னை – 603 103 | Ph. 044-27470696<br>deanipgs@tnfu.ac.in |
| | முனைவர். உஷா ஆண்டனி (17.01.2021 வரை)<br>முனைவர். ஆர். செந்திலதிபன் (18.01.2021 முதல்)<br>முதல்வர், (பொ)<br>மீன் ஊட்டச்சத்து மற்றும் உணவு தொழில்நுட்பக் கல்லூரி,<br>மாதாவரம், சென்னை – 600 051 | Ph. 044-25550359<br>deancfnft@tnfu.ac.in |
| | கேப்டன். எஸ்.விஸ்வநாதன்<br>முதல்வர்<br>மீன்வள ஆழ்கடல் தொழில்நுட்ப கல்லூரி நிலையம்<br>மீன்பிடி துறைமுக வளாகம், தூத்துக்குடி – 01 | Ph.: 044-0461-2337566<br>deancfnt@tnfu.ac.in |

| | |
|---|---|
| முனைவர். ஜி. ஜெயசேகரன்<br>ஆராய்ச்சி இயக்குநர்<br>தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்,<br>நாகப்பட்டினம் – 611 002 | Ph. 04365-256437<br>Fax:04365-256438<br>dr@tnfu.ac.in |
| முனைவர். எம். ராஜ்குமார்<br>விரிவாக்கக் கல்வி இயக்குநர்<br>தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்,<br>நாகப்பட்டினம் – 611 002 | Ph. 04365-256434<br>Fax:04365-256436<br>dee@tnfu.ac.in |
| முனைவர். ப. ஜவஹர்<br>தேர்வுக் கட்டுப்பாட்டு அதிகாரி<br>தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்,<br>நாகப்பட்டினம் – 611 002 | Ph. 04365-256430<br>Fax:04365-256431<br>ce@tnfu.ac.in |

## பிரிவு – II (பதவிவழி உறுப்பினர்கள்)

| | |
|---|---|
| உறுப்பினர்கள்<br>(பேராசிரியர்களில் சுழற்சி முறைப்படி துணைவேந்தரால் நியமிக்கப்பட்ட நபர்கள்) | முனைவர். பி. வேலாயுதம்<br>பேராசிரியர் மற்றும் முதல்வர் (பொ)<br>மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பறக்கை, நாகர்கோவில் |
| | முனைவர். சி. ப. த. ராஜகோபாலசாமி<br>பேராசிரியர் மற்றும் தலைவர்<br>நீருயிரி வளர்ப்புத் துறை<br>டாக்டர். எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரி |
| | முனைவர். எஸ்.டேவிட் கிங்ஸ்ட்டன்<br>பேராசிரியர் மற்றும் தலைவர்<br>மீன்வள உயிரியல் மற்றும் வள மேலாண்மை துறை<br>மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி– 628 008 |
| | முனைவர். பி. பத்மாவதி<br>பேராசிரியர் மற்றும் தலைவர்<br>நீர்வளச் சூழலியல் மேலாண்மை துறை<br>மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி– 628 008<br>9994981493 padmavathy@tnfu.ac.in |
| நிபுணர்கள் | |
| துணைவேந்தரால் நியமிக்கப்பட்ட மீன்வள அறிவியலில் சிறந்த அனுபவம் வாய்ந்த நபர் ஒருவர் | முனைவர். என். பாஸ்கர்<br>ஆலோசகர் (அறிவியல் மற்றும் தரநிலைகள்)<br>இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம் (FSSAI)<br>சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் FDA பவன்<br>கோட்லாசாலை, புதுதில்லி – 110 002<br>Ph : 011-23237418 / 9448672408<br>bhasnarayan@gmail.com advisor.qa@fssai.gov.in |
| இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மீன்வளக் கல்லூரியின் முதல்வர் ஒருவர் | முனைவர். ஏ. செந்தில்வேல்<br>முதல்வர் (மீன்வளம்)<br>கர்நாடகா கால்நடை மருத்துவ மீன்வள அறிவியல் பல்கலைக்கழகம்<br>மீன்வளக் கல்லூரி, மங்களூர் – 575 002. கர்நாடகா<br>Ph : 0824-2248936, Fax : 0824-2248366<br>deanfisheries@gmail.com |

## ஆராய்ச்சிக் குழு

| | |
|---|---|
| தலைவர் (துணைவேந்தர்) | முனைவர். கோ. சுகுமார்<br>துணைவேந்தர்<br>தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்<br>நாகப்பட்டினம் |
| பதிவாளர் | முனைவர். அ. சீனிவாசன்,<br>பதிவாளர்<br>தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்<br>நாகப்பட்டினம் |
| மாநில மீன்வளத்துறை ஆணையாளர் (அல்லது) பிரதிநிதி | திரு. ஜெ. ஜெயகாந்தன், இ.ஆ.ப.,<br>ஆணையர் மீன்வளத்துறை<br>ஒருங்கிணைந்த மீன்வளத் துறை அலுவலக வளாகம், நந்தனம்,<br>சென்னை – 600 035 |
| ஆராய்ச்சி இயக்குநர் – உறுப்பினர் செயலர் | முனைவர். ஜி. ஜெயசேகரன்<br>ஆராய்ச்சி இயக்குநர்<br>தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்<br>நாகப்பட்டினம் – 611 002 |
| பல்கலைக்கழக முதல்வர் மற்றும் இயக்குநர்கள் | அனைத்து கல்லூரி முதல்வர்கள் மற்றும் பல்கலைக்கழக இயக்குநர்கள் |
| பல்துறைத் தலைவர்கள் | நியமனம் செய்யப்பட உள்ளது. |
| வெளிவாளாகதலைவர்கள் | அனைத்து வெளிவளாக தலைவர்கள் |
| மத்திய / மாநிலதிட்ட ஒருங்கிணைப்பாளர் | ஆராய்ச்சி குழு கூட்டத்தின் போது நியமனம் செய்யப்படும் |
| இரண்டு பேராசிரியர்கள் சுழற்சி முறையில் துணைவேந்தர் அவர்களால் நியமனம் செய்யப்படுவர் | ஆராய்ச்சி குழு கூட்டத்தின் போது நியமனம் செய்யப்படும் |
| இரண்டு மீன்வள விஞ்ஞானிகள் துணைவேந்தர் அவர்களால் நியமனம் செய்யப்படுவர் | 1. முனைவர். ஜி. ஆனந்தராமதாஸ்<br>விஞ்ஞானி<br>ஆழ்கடல் தொழில்நுட்பம், தேசிய கடல் சார் தொழில்நுட்ப நிலையம்,<br>தாம்பரம் ரோடு, நாராயணவரம் பள்ளிக்கரணை, சென்னை<br>2. முனைவர். வி. அருள்<br>பேராசிரியர் மற்றும் தலைவர்<br>உயிர் தொழில்நுட்பவியல்துறை, வாழ்க்கை அறிவியல் பள்ளி<br>பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், பாண்டிச்சேரி – 605 014 |
| மீன் வளர்ப்பு / பதப்படுத்தும் துறையில் உள்ள மூன்று தொழில் அதிபர்கள் துணைவேந்தர் அவர்களின் பரிந்துறையின்படி பல்கலைக்கழக இணைவேந்தர் அவர்கள் நியமிப்பார் | திருமதி. எமிலிசுர்ஜித்தாடைட்டஸ்<br>எண்.50, ஏ, சபாபதி குறுக்கு தெரு, அயனாவரம், சென்னை – 600 023.<br><br>முனைவர். எம். இராஜலெட்சுமி<br>கெமின் இன்டஸ்ட்ரீஸ் சவுத் இந்தியா பிரைவேட் லிமிடெட்<br>அம்பத்தூர் தொழிற் பேட்டை, சென்னை – 600 058<br><br>திரு. சீனிவாசன், எம். எஸ்.சி<br>போசிடியோன் பயோடெக்<br>பிசி–1 I & II தளம், முகப்பேர் மேற்கு, சென்னை – 600 058 |
| வெளிநிதி நிறுவனங்களின் ஒரு பிரதிநிதி துணை வேந்தர் அவர்களால் நியமிக்கப்படுவார்கள் | ஆராய்ச்சி குழு கூட்டத்தின் போது நியமனம் செய்யப்படும் |

## விரிவாக்க கல்விக்குழு

| | |
|---|---|
| தலைவர் (துணைவேந்தர்) | முனைவர். கோ. சுகுமார்<br>துணைவேந்தர்<br>தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்<br>நாகப்பட்டினம் |
| பதிவாளர் | முனைவர். அ. சீனிவாசன்,<br>பதிவாளர்<br>தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்<br>நாகப்பட்டினம் |
| மீன்வள இயக்குநர் (அல்லது) பிரதிநிதி | திரு. ஜெ. ஜெயகாந்தன், இ.ஆ.ப.,<br>ஆணையர், மீன்வளத்துறை<br>ஒருங்கிணைந்த மீன்வளத் துறை அலுவலக வளாகம், நந்தனம்,<br>சென்னை – 600 035 |
| விரிவாக்கக் கல்வி இயக்குநர்<br>(உறுப்பினர் செயலர்) | முனைவர். எம். ராஜ்குமார்<br>விரிவாக்கக் கல்வி இயக்குநர்<br>தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்<br>நாகப்பட்டினம் – 611 002 |
| முதல்வர் மற்றும் பல்கலைக் கழக இயக்குநர்கள் | அணைத்து கல்லூரி முதல்வர்கள் மற்றும் மைய இயக்குநர்கள் |
| மீன்வளத்துறை மண்டல இணை இயக்குநர் துணைவேந்தர் அவர்களால் விரிவாக்க கல்விக்குழு கூட்டத்தின் போது நியமிக்கப்படுவார்கள் | விரிவாக்க கல்விக் குழு<br>கூட்டத்தின்போது நியமணம் செய்யப்படும் உறுப்பினர்கள் |
| துணைவேந்தர் அவர்களால் நியமிக்கப்படும் பல்கலைக்கழகத்தின் இரண்டு பேராசியர்கள் | விரிவாக்க கல்விக் குழு<br>கூட்டத்தின்போது நியமணம் செய்யப்படும் உறுப்பினர்கள் |
| மீன்வள விரிவாக்கதுறைத் தலைவர் | விரிவாக்க கல்விக் குழு<br>கூட்டத்தின்போது நியமணம் செய்யப்படும் உறுப்பினர்கள் |
| துணைவேந்தர் அவர்களால் அவ்வபோது நியமிக்கப்படும் பல்கலைக்கழகத்தின் வெளியே உள்ள விரிவாக்க கல்வித்துறையில் சிறந்து விளங்கும் இரண்டு நபர்கள் | விரிவாக்க கல்விக் குழு<br>கூட்டத்தின்போது நியமணம் செய்யப்படும் உறுப்பினர்கள் |
| துணைவேந்தர் அவர்களின் பரிந்துறையின்படி இணைவேந்தர் அவர்களால் நியமிக்கப்பட்ட மீன் வளர்ப்பு / பதப்படுத்தும் துறையில் உள்ள மூன்று தொழில்அதிபர்கள் | திருமதி. மதுசரண்<br>தலைமை நிர்வாக அதிகாரி<br>எஸ்.டீசி குழும நிறுவனங்கள் மற்றும் ஏ.பி.சி. மருத்துவமனை<br>எண்.3, சி.எம்.எம். தெரு, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034<br>Mob:9176644536 info@riverwomen.in<br><br>முனைவர். எஸ். சந்தானகிருஷ்ணன்<br>தலைமை நிர்வாக அதிகாரி<br>மரைன் டெக்னாலஜீஸ்<br>56. எம்.ஜீ.ரோடு, சாஸ்திரிநகர், திருவன்டியூர், சென்னை – 600 041<br><br>பொறியாளர். ஆர். குலசேகரன்<br>எஸ்2, அச்சுதன் ராமனுஜா அபார்ட்மென்ட்<br>ட்ரஸ்ட்புரம், 33வது குறுக்குத் தெரு, கோடம்பாக்கம், சென்னை – 600 024 |

## நிதிக் குழு

| | |
|---|---|
| தலைவர்<br>(துணைவேந்தர்) | முனைவர். கோ. சுகுமார்<br>துணைவேந்தர்<br>நிதிக் குழுவின் தலைவர்<br>தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்<br>நாகப்பட்டினம் |
| செயலர் | நிதிஅலுவலர்<br>தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்<br>நாகப்பட்டினம் – 611 002 |
| உறுப்பினர்<br>(பதவிவழி உறுப்பினர்கள்) | அரசுச் செயலர்,<br>கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, சென்னை |
| | அரசுச் செயலர், நிதித்துறை, சென்னை |
| பதவிசாரா மேலாண்மைக் குழு உறுப்பினர் | திரு. எஸ். தினகரன்<br>3/275, பஜனைக் கோவில் தெரு, கொட்டிவாக்கம், சென்னை– 600 041 |

# ஆராய்ச்சிகள்

# ஆராய்ச்சிகள் 2

## 2.1. நடைமுறையில் உள்ள திட்டங்கள் (2020 – 2021)

### a. இந்திய அரசின் நிதியுதவி திட்டங்கள்

1. நீர்வாழ் உயிரினங்களின் நோய்களைக் கண்காணிக்கத் தேசிய அளவிலான திட்டம்– இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், புதுதில்லி மற்றும் தேசிய மீன்வள அபிவிருத்தி ஆணையம், ஐதராபாத்– ரூ. 95.312 இலட்சம் - முதன்மை ஆய்வாளர்–முனைவர். மு. ரோசலிண்ட் ஜார்ஜ்.

2. மன்னார் வளைகுடா பகுதியிலிருந்து தனித் –தெடுக்கப்பட்ட *பியோடெக்டைலம்ட்ரைகார்னுட்டம்* எனப்படும் கடற் நுண்பாசியிலிருந்து இக்கோசா பெண்ட்டா ஈனாயிக் கொழுப்பு அமில உற்பத்தி – டி.எஸ்.டி. எஸ்இஆர்பி, இந்திய அரசு, புதுடெல்லி–ரூ.41.85 இலட்சம் – முதன்மை ஆய்வாளர் – முனைவர். வே.இராணி.

3. காலநிலை மாற்றத்தின் விளைவாக கடல் உணவின் பாதுகாப்பில் நச்சு நுண்ணுயிரி *விப்ரியோ வல்னிஃபிகஸின்* மறு எழுச்சியினால் ஏற்படும் அச்சுறுத்தல் – டி.எஸ்.டி. எஸ்இஆர்பி, புதுடெல்லி ஆராய்ச்சி – ரூ. 39.67 இலட்சம் – முதன்மை ஆய்வாளர் – முனைவர். வெ.அலமேலு.

4. கடல்சார் உணவுப் பொருட்கள் வணிக மையம்– இந்திய தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்– ரூ. 250 இலட்சம்– முதன்மை ஆய்வாளர்– முனைவர். பா. கணேசன்.

5. தூத்துக்குடி மற்றும் தூத்தூரில் ஆழ்கடல் மீன்பிடித் தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் மேலாண்மை மையங்கள் நிறுவுதல் (அ. எண். 14–124–01 ) – கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, தமிழ்நாடு அரசு – ரூ. 382.00 இலட்சம் – முதன்மை ஆய்வாளர்–முனைவர். நீ.நீதிச்செல்வன்

6. மீன் பதனக் கழிவுகளிலிருந்து பெறப்படும் மூலக்கூறுகள் மற்றும் கடல் உயிரினங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மீன்களை கவரும் பொருட்களைக் கொண்டு ஆயிரங்கால் தூண்டில்களுக்கான செயற்கை மீனிரைகளை உருவாக்குதல் (அ. எண். 14–124–02) – பயோடெக்னாலஜி துறை–ரூ.44.56 இலட்சம் – முதன்மை ஆய்வாளர்– முனைவர். நீ.நீதிச்செல்வன்

7. தமிழ்நாட்டின் ராமநாதபுரம் மாவட்டத்தின் கடற்கரையோரத்தில், கடல் மீன்களின் திறந்த கடல் கூண்டு வளர்ப்பு–தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவி–ரூ. 267.6 – இலட்சம் முதன்மை ஆய்வாளர்– முனைவர். ச. ஆனந்த்.

8. தமிழ்நாட்டின் மண்டபம் பகுதியில் உள்ள கடலோர மீனவர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பாக கடற்பாசி வளர்ப்பு தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல் மற்றும் மாற்றுதல்– தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவி ரூ. 251.1 லட்சம்–முதன்மை ஆய்வாளர்– முனைவர். ச. ஆனந்த்.

9. தமிழ்நாட்டில் மீன்வளர்ப்பில் உற்பத்தியைப் பெருக்க மின்னணு தொழில்நுட்ப அடிப்படையிலான உத்திகளின் மூலம் வளர்ப்பு மீன்களில் ஆரோக்கிய நிலையை அறிவதற்கான தொடர் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை கூட்டமைப்பு ஏற்படுத்துதல் தமிழ்நாடு அரசின் புதுமையான திட்டங்களுக்கான நிதியுதவி – ரூ. 59.0 இலட்சம் – முதன்மை ஆய்வாளர் – முனைவர். ஆ. உமா.

10. மீன்வளத் துறைசார் தொழில்களில் உற்பத்தி அபிவிருத்திக்கான புதுமையான மீன்வள பொறியியல் சாதனங்கள் கண்டுபிடிப்பு, உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் – தமிழ்நாடு அரசின் புதுமையான திட்டங்களுக்கான நிதியுதவி – மாநில வளர்ச்சி கொள்கை குழு – ரூ. 75.2 இலட்சம் – முதன்மை ஆய்வாளர்–முனைவர். ம. சிவக்குமார்

11. தமிழ்நாட்டில் மீன்வளர்ப்பில் உற்பத்தியைப் பெருக்க மின்னணு தொழில்நுட்ப அடிப்படையிலான உத்திகளின் மூலம் வளர்ப்பு மீன்களில் ஆரோக்கிய நிலையை அறிவதற்கான தொடர் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை கூட்டமைப்பு ஏற்படுத்துதல் – தமிழ்நாடு அரசின் புதுமையான திட்டங்களுக்கான நிதியுதவி – ரூ. 590.4 இலட்சம் – முதன்மை ஆய்வாளர்–முனைவர். டி .ஆனந்த்

12. செயற்கை பவளப்பாறைகள் மற்றும் மீன்களை கவரும் செயற்கை பாறைகளை பழவேற்காடு ஏரிக்கு அருகில் உள்ள கடற்பகுதியில் நிறுவுவதன் மூலம் மீன்களின் இருப்பளவை அதிகரித்து பழவேற்காடு மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்–

தமிழ்நாடு அரசின் புதுமையான திட்டங்கள்– ரூ. 430.66 இலட்சம் – முதன்மை ஆய்வாளர்– முனைவர். த. மணிகண்டவேலு.

13. ஒருங்கிணைந்த பல்அடுக்கு உணவுசார் நீர்வாழ் உயிரின வளர்ப்பு தொழிற்நுட்பம் வாயிலாக மீன் உற்பத்தியினை மேம்படுத்துதல் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், தருவைக்குளம் மீனவமக்களுக்கு மாற்று வாழ்வாதாரம் அளித்தல்– தேசியவேளாண் மேம்பாட்டுத் திட்டம்– ரூ. 100.00 இலட்சம் – முதன்மை ஆய்வாளர்–திரு.க.சே. விஜய்அமிர்தராஜ்

14. குறைந்த நீர் பயன்படுத்தி வருமானத்தை இரட்டிப்பாக்க நீர் மறுசுழற்சி முறையில் கொடுவா மீன்வளர்ப்பு தொழில்நுட்ப பூங்கா அமைத்தல் –தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம்–ரூ.350.00 இலட்சம் – முதன்மை ஆய்வாளர்–முனைவர். ப. அகிலன்.

15. சென்னை வாணியஞ்சாவடியில் உள்ள ஒ.எம். ஆர் வளாகத்தில் உள்ள மீன்வளப் பட்ட மேற்படிப்பு நிலையத்தில் மீன் தீவன பரிசோதனை மற்றும் தர சான்றிதழுக்கான மாநில பரிந்துரை ஆய்வகத்தை நிறுவுதல்–தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம்–ரூ.250.00 இலட்சம் - முதன்மை ஆய்வாளர்-முதல்வர், முனைவர். எஸ்.ஏ. சண்முகம்.

16. ஈரோடு மாவட்டத்தில் உள்நாட்டு மீன்வளர்ப்போருக்காக ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு மற்றும் விவசாய மாதிரி அமைப்புகள் – தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் – ரூ.138.50 இலட்சம் - முதன்மை ஆய்வாளர் – முனைவர். எஸ்.ஆனந்த்

17. இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் மீன்வள பயிற்சி நிலையம் நிறுவுதல் (அ. எண். 20–101–01)– தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம்–ரூ.450.00 இலட்சம் – முதன்மை ஆய்வாளர்– முனைவர். நீ.நீதிச்செல்வன்.

18. கன்னியாகுமரி மாவட்டம், பறக்கையில் அயிரை மீன் இனப்பெருக்க மையம் அமைத்தல்–தேசிய வேளாண் மேம்பாட்டு திட்டம் – ரூ.125.00 இலட்சம் –1. முனைவர். ஜே. ஸ்டீபன் சம்பத்குமார், இயக்குனர் (PI) திரு.ப.வேல்முருகன் உதவிப் பேராசிரியர். (CO-PI) திரு. ந. டேனியல்; உதவிப் பேராசிரியர் (CO-PI).

19. அக்வா ஒன் மையம்– தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவி–ரூ. 20.00 லட்சம் முதன்மை ஆய்வாளர்– முனைவர். ச. ஆனந்த்.

20. சென்னை வாணியஞ்சாவடியில் மீன்வள முதுநிலை பட்டப் படிப்புகளுக்கான கூடுதல் கல்விக்கூட வசதிகளை உருவாக்குதல்–விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி–ரூ.635.00 இலட்சம் – முதன்மை ஆய்வாளர்–முதல்வர்

21. தொழில்சார் மீன்வளர்ப்பு இணை தொழில்நுட்ப நிலையம்–தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி (நபார்டு) வங்கி–ரூ.880.00 இலட்சம் – முதன்மை ஆய்வாளர்–முனைவர். நா. ஃபெலிக்ஸ்

22. கடல் மெல்லுடலிகளின் இணைஉயிர் ஆக்டினோமைசீட்களிலிருந்து ஆண்டிஃபுல்லிங் சேர்மங்களை தனிமைப்படுத்துதல் மற்றும் வகைப்படுத்துதல்–தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கவுன்சில்–ரூ.18.87 இலட்சம் – முதன்மை ஆய்வாளர்–எஸ்.பிரகாஷ்

23. கடற்பாசி மற்றும் கடற்புற்களுடன் தொடர்புடைய எண்டோஃபைடிக் ஆக்டினோமைசீட்களிலிருந்து சுற்றுச்சூழல் – பாதிக்காத ஆண்டிஃபுல்லிங் சேர்மங்களை தனிமைப்படுத்துதல்–இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி கவுன்சில்– ரூ. 7.35 இலட்சம் – முதன்மை ஆய்வாளர்–எஸ்.பிரகாஷ்.

24. நன்னீர் மீன்வளர்ப்பிற்கு உகந்த புதியரக மீன் தயாரிப்பு–உலக வங்கி–ரூ.40.33 இலட்சம் – முதன்மை ஆய்வாளர்–முனைவர். ஜா. ஸ்டிபன் சம்பத் குமார்

25. குறைந்த விலை மீன் உணவு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி மீன் தீவனத்தை உருவாக்குதல்– தமிழ்நாடு – நீர்பாசன விவசாய நவீனமயமாக்கல் திட்டம்– ரூ. 34.80 இலட்சம்– முதன்மை ஆய்வாளர்– முனைவர். நா. ஃபெலிக்ஸ்.

26. மரபணு மேம்படுத்தப்பட்ட திலேப்பியா (GIFT) மற்றும் கெண்டை மீன் வளர்ப்பின் மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பின் தங்கிய தொகுதிகளில் உள்ள பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல்–தமிழ்நாடு திட்டக் குழுவின் மாநில சம வளர்ச்சி நிதி – ரூ.30.00 இலட்சம் – முதன்மை ஆய்வாளர் – முனைவர். ரா. சோமுசுந்தர் லிங்கம்.

### b . தனியார் நிதியுதவி திட்டங்கள்

27. தமிழ்நாட்டின் கடல்மீன்களின் மதிப்பீடு–ஹாண்டி வாட்டர்பேஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சிப்காட் தொழில் துறை வளாகம், மடத்தூர் போஸ்ட், தூத்துக்குடி, தமிழ்நாடு பல்கலைக்கழக விதிமுறைகளின் படி நிறுவன கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட திட்டத்திற்கான வருடாந்திர கணக்கு (2020–21) தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது –ரூ.8.33 இலட்சம் – முதன்மை ஆய்வாளர்–முனைவர். பா. ஜவஹர்.

28. பினேயஸ் வனாமி இறால் வளர்ப்பில் கடற்பாசி சார்ந்த உணவுப் பொருட்களை ஒருதுணை கலந்து அளிக்கும் பொருளாக அளிப்பதால் வளர்ச்சியில் ஏற்படும் விளைவு –“சீ 6” எனர்ஜி பெங்களூர், கர்நாடகா – ரூ. 6.95 இலட்சம் – திரு.க.சே. விஜய்அமிர்தராஜ்

### C. பல்கலைக்கழக நிதியுதவி திட்டங்கள்

29. தருவைக்குளத்தில் கடற்சார் உயிரின வளர்ப்பு ஆராய்ச்சி பண்ணை வசதியில் வனாமி இறால் பண்ணை செயல்முறை விளக்கம் – தமிழ்நாடு டாக்டர்.ஜெ.ஜெயலலிதா மீன்வளப்பல்கலைக்கழகம், நாகபட்டினத்தின் சுழற்நிதி – ரூ.2.50 இலட்சம் – முதன்மை ஆய்வாளர் –திரு.க.சே.விஜய்அமிர்தராஜ்

30. உயிரி பண்பேற்றப்பட்ட கைட்டோசனிலிருந்து ஊட்டச்சத்து பானத்தை உருவாக்குதல் மற்றும் மதிப்பீடு செய்தல்–பல்கலைக்கழக ஆராய்ச்சித் திட்டம், டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்– ரூ.2.0 இலட்சம் – முதன்மை ஆய்வாளர் –திருமதி. சே.விமலாதேவி.

31. ஐ.ஓ.டீ அடிப்படையிலான நீர்த்தரக் கண்காணிப்பு அமைப்பை உருவாக்கல் மற்றும் செயல்படுத்தல் – த.நா.ஜெ.மீ.ப. இளம் ஆசிரியர்களுக்கான ஆராய்ச்சி நிதி – ரூ.2.0 இலட்சம் – முதன்மை ஆய்வாளர் – சி.மெர்சி அம்ரிதா

32. கோரமண்டல் கடற்பகுதியிலுள்ள பழவேற்காடு பகுதியின் பாரம்பரிய மீனவர்களுக்காக மேல்பட்ட மீன்களை பிடிக்கும் திறனுடைய ஆயிரங்கால் தூண்டில்களுடன் கூடிய செவுல் வலையின் உருவாக்கம் மற்றும் அதன் செயல் திறன் மதிப்பீடு –பல்கலைக்கழக ஆராய்ச்சி திட்டம் – முதன்மை ஆய்வாளர் – ரா. வேல்முருகன்

33. *உல்வா* கடற்பாசிகள் மூலம் தயாரிக்கப்படும் கூழ்மப் பொருட்கள்–பல்கலைக்கழக ஆராய்ச்சித் திட்டம், டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்–முதன்மை ஆய்வாளர் – திரு.வி.விஜயராகவன்

## 2.2 முடிவடைந்த திட்டங்கள் (2020 – 2021)

### a. இந்திய அரசின் நிதியுதவி திட்டங்கள்

1. மீன் எலும்புகளிலுள்ள பெப்டைடுகளின் எலும்பு திசு இழப்பின் மாற்றுதிறன் எதிர்பார்ப்பு – உயிரியல் தொழில் நுட்ப துறை – ரூ.36.0705 இலட்சம் – முதன்மை ஆய்வாளர் – முனைவர். இரா. ஜெய ஷகிலா.

2. இறால் பண்ணைகளில் சூரிய ஆற்றல் மூலம் இயக்கப்படும் ஏரேட்டர்கள் உருவாக்குதல் – இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் –ரூ. 21.25 இலட்சம்– முதன்மை ஆய்வாளர் – திருமதி. டி.பாபியோலா

3. இந்திய கடற்கரையில் மீன் மற்றும் கணுக்காலிகளில் உள்ள கன உலோகங்களை கண்காணித்தல் மற்றும் அவற்றை குறைக்கும் நடவடிக்கைகள்–இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம்– முதன்மை ஆய்வாளர் –முனைவர். இரா. ஷாலினி

4. “கயலகம்: தமிழ்நாட்டில் மதிப்பூட்டப்பட்ட மீன் பொருட்களின் சந்தைப்–படுத்துதலை அதிகரிப்பதற்கான ஓர் எதிர்கால விற்பனை நிலையம்” – தேசிய வேளாண் மேம்பாட்டு திட்டம்– ரூ.250.00 இலட்சம் – முதன்மை ஆய்வாளர் –திருமதி. நிமிஷ் மோல் ஸ்டீபன்

5. துடுப்பு மற்றும் ஓட்டுடலிகளின் மீன்களின் ஆரோக்கியத்தினை உறுதி செய்து சான்றளித்தல் மற்றும் நோய் கண்காணிப்புக்கான ஆய்வகம் அமைப்பதன் மூலம், தமிழ்நாட்டின் மீன்வள உற்பத்தியை மேம்படுத்துதல்”- தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம்– ரூ.242.275 இலட்சம் –முனைவர். ஆ.உமா (துணை ஆராய்ச்சியாளர்)

### b. தனியார் நிதியுதவி திட்டங்கள்

6. கெமின் நிறுவனத்தின் கண்டறியப்பட்ட மூல முன் மாதிரிகளில் *என்டிரோசைட்டோசோவன் ஹெப்பாட்டோபினேயி* (ஈ.எச்.பி) நோய் காரணியால் பாதிக்கப்பட்ட *பினேயஸ் வனாமி* இறால்களில் நோயை குணமாக்கும் செயல்திறனை மதிப்பீடு செய்தல்–கெமின் தொழிற்சாலை தென்னாசியா பிரைவேட் லிமிடெட்–ரூ.4.795 இலட்சம் – முதன்மை ஆய்வாளர் –முனைவர். ஆ.உமா.

7. பசிபிக் வெள்ளைக் கால் இறாலின் *(பினேயஸ் வனாமி)* தீவனத்தில் கோலினுக்கு மாற்றாக மூலிகை உபப்பொருள் சேர்ப்பதினால் வளர்ச்சியில் ஏற்படும் விளைவுகள்–நேச்சுரல் ரெமெடீஸ், பெங்களூரு–ரூ.5.42 இலட்சம் – முதன்மை ஆய்வாளர் –முனைவர். நா. ஃபெலிக்ஸ்

### C. பல்கலைக்கழக நிதியுதவி திட்டங்கள்

8. கோய் கெண்டையில் உயிரணுக்கள் தரம் மற்றும் செயற்கை கருத்தரித்தல் ஆகியவற்றை பாதிக்கும் ஊட்டச்சத்து காரணிகள்–தமிழ்நாடு டாக்டர். ஜெ.ஜெயலலிதா மீன்வள பல்கலைக்கழகம்– ரூ.2.0 இலட்சம் – முதன்மை ஆய்வாளர் – முனைவர். சா. பெட்ஸி

9. உறையிடப்பட்ட வஞ்சிரம் மீனின் சிதைவை நிகழ் நேரத்தில் கண்காணிக்க உதவும் நவீன உணரிகள் உருவாக்கம் – த.நா.ஜெ.மீ.ப. இளம் ஆசிரியர்களுக்கான ஆராய்ச்சி நிதி – ரூ. 2.0 இலட்சம் – முதன்மை ஆய்வாளர் – முனைவர். தே.கேசவன்

10. பல்கலைக்கழக ஆராய்ச்சி திட்டம் – தூத்துக்குடி கடற்கரையில் இருந்து பெறப்படும் நெத்திலி மீனின் எலும்பு மாதிரிகளை ஒப்பிடுதல்–தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கைலைக்கழகம், நாகப்பட்டினம்– முதன்மை ஆய்வாளர் – திரு. ரா.துரைராஜா

11. தூத்துக்குடி கடற்கரை பகுதியில் மோட்டார் எஞ்சின் பொருத்தப்பட்ட மீன்பிடி படகுகளிலிருந்து வெளியேறும் $CO_2$ தொடர்பான ஆய்வு– தமிழ்நாடு டாக்டர். ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்– முதன்மை ஆய்வாளர் – த. ரவிக்குமார்

### 2.3. புதிதாகப் பெறப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்கள் 2020 – 2021

#### a. இந்திய அரசின் நிதியுதவி திட்டங்கள்

1. தட்பவெப்ப நிலைக்குத் தாங்கக்கூடிய மீன்வளர்ப்புக்கான *எட்ரோபிளஸ் சுராடென்சிஸ்* (கறி மீன்) தொடர்புடைய மரபணு நுண்ணறிவுகளை புரிந்துகொள்வதற்கான ஆராய்ச்சி – ICAR-NICRA- ரூ.33.5 இலட்சம் (நிறுவன கட்டணங்கள் @ 10% தவிர)– முதன்மை ஆய்வாளர் –முனைவர். தீபக் அகர்வால்

2. குறைந்த நீரில் நவீன மீன் வளர்ப்பு முறைகள்–தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம்–ரூ.187.40 இலட்சம் – முதன்மை ஆய்வாளர் –முனைவர். ப. அகிலன்

3. ஒருங்கிணைந்த விவசாய மேம்பாட்டிற்காக தனியார்–பொது கூட்டாண்மை மூலம் செயல்பட தமிழ்நாடு டாக்டர். ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் நிலையான மீன்வளர்ப்பு உற்பத்தி மையங்களை மேம்படுத்துதல் – தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் – ரூ.328.409 இலட்சம் – முதன்மை ஆய்வாளர் – முனைவர். ஜா. ஸ்டிபன் சம்பத் குமார்.

4. மண்டபம் மீன்வளத் தொழில்காப்பகம் மற்றும் தொழில்சார் பயிற்சி இயக்குனரகத்தில் கடலில் மீனர் பாதுகாப்பிற்கான பயிற்சி வசதிகளை நிறுவுதல்–தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம்– ரூ.120.0 இலட்சம் – முதன்மை ஆய்வாளர் – திரு. மு.கலையரசன்

5. தலைவாசலில் மீன்பிடி செயல் விளக்க வளாகம் அமைத்தல்–தேசிய விவசாய மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி –ரூ.267.00 இலட்சம் – முதன்மை ஆய்வாளர் –முனைவர். பி.சிதம்பரம்

#### b. தனியார் நிதியுதவி திட்டங்கள்

6. கெமின் நிறுவனத்தின் மூல முன் மாதிரிகளினால் ஆராய்ச்சிக்கென நோய் உண்டாக்கப்பட்ட *பினேயஸ் வனாமி* இறால்களின் பிழைப்புத் தன்மை மற்றும் நோய் எதிர்ப்புத் தன்மையில் ஏற்படும் மாற்றங்களை மதிப்பீடு செய்தல்–கெமின் தொழிற்சாலை தெற்காசியா பிரைவேட் லிமிடெட்–ரூ.8.92 இலட்சம் – முதன்மை ஆய்வாளர் –முனைவர். ஆ.உமா

7. கெமின் நிறுவனத்தின் மூல முன் மாதிரிகளில் *என்டிரோசைட்டோசோவன் ஹெப்பாட்டோபினேயி* (ஈ.எச்.பி) நோய் மற்றும் விப்ரியோ காரணியால் பாதிக்கப்பட்ட *பினேயஸ் வனாமி* இறால்களில் நோயை குணமாக்கும் செயல்திறனை மதிப்பீடு செய்தல்–கெமின் தொழிற்சாலை தெற்காசியா பிரைவேட் லிமிடெட்–ரூ.11.31 இலட்சம் – முதன்மை ஆய்வாளர் –முனைவர். ஆ.உமா

8. பசிபிக் வெள்ளைக் கால் இறாலின் *(பினேயஸ் வனாமி)* தீவனத்தில் மீன் தூளுக்கு மாற்றாக ஸ்ட்ரிங் புரதம் அளிப்பதனால் வளர்ச்சி, தீவன உட்கொள்ளளவு மற்றும் உடலியலில் ஏற்படும் விளைவுகள்–ஸ்ட்ரிங் பையோ, பெங்களூரு–ரூ.7.56 இலட்சம் – முதன்மை ஆய்வாளர் –முனைவர். நா. ஃபெலிக்ஸ்

#### C. பல்கலைக்கழக நிதியுதவி திட்டங்கள்

9. திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு கடற்பகுதியில் சிகானஸ் இன மீன்களின் இருப்பை மதிப்பீடு செய்தல்–பல்கலைக்கழக ஆராய்ச்சி திட்டம்– முதன்மை ஆய்வாளர் –திரு. ப. பவின்குமார்

## 2.4. சுய நிதித் திட்டங்கள்

| வ. எண். | திட்டங்களின் தலைப்பு | நிலையங்கள் | சேவைகள் | ஆண்டு வருவாய் (ரூ. இலட்சங்களில்) |
|---|---|---|---|---|
| 1 | நீர்வாழ் உயிரினங்களின் சுகாதார மேலாண்மைக்கான பரிந்துரை ஆய்வகச் சுயநிதியுதவி திட்டம் | மீன் நோயியல் மற்றும் சுகாதார மேலாண்மைத் துறை, மாதவரம், சென்னை | ஆய்வக சோதனை கட்டணங்கள் | – |
| 2 | மீன் மாதிரியின் தரம் மற்றும் பகுப்பாய்வு | மீன் தர உறுதிப்பாடு மற்றும் மேலாண்மை துறை, மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி | தர ஆய்வு மற்றும் சான்றிதழ் | 2.03 |
| 3 | இறால்களைத் தாக்கும் பாக்டீரியா மற்றும் நச்சுயிரி நோய்களை துரித முறையில் மூலக்கூறு அடிப்படையில் கண்டறியும் திட்டம் | நீர்வாழ் உயிரின நல மேலாண்மைத் துறை டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரி | பாக்டீரியாலஜி – இறால் பண்ணை மற்றும் பொரிப்பக நீர் மாதிரிகளில் விப்ரியோ பகுப்பாய்வு வைரஸ் நோய்க்கிருமிகளின் பி.சி.ஆர் நோயறிதல் | 0.054 |
| 4 | மீன் பண்ணைகளுக்கான நீர்தரபரிசோதனை ஆய்வகம் | - | நீர் மற்றும் மண் பரிசோதனை | 0.40 |
| 5 | பி.டெக்(ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல்) | மீன்வளப் பொறியியல் கல்லூரி, நாகப்பட்டினம் | இளநிலை பி.டெக் பட்டபடிப்பு | 13.75 |
| 6 | இறால் நோய் சோதனைக்கூடம் | நீர்வாழ் உயிரின ஆரோக்கியத்திற்கான மாநில அளவிலான பரிந்துரை ஆய்வகம், மாதவரம், சென்னை | • மீன்/இறால்களில் நோயறிதல்<br>• நீர் தரமறிதல்<br>• பண்ணையாளர்களுக்கு நோய் மேலாண்மையில் பயிற்சி<br>• மாணவர்களுக்கான பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் திட்டங்கள் | 13.78 |

# ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள் 2.5

## மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி

### I. மீன் வளர்ப்பு துறை

#### 1. இள ஆசிரியர்களுக்கான ஆராய்ச்சி திட்டம்–கோய் கெண்டையில் உயிரணுக்களின் தரம் மற்றும் செயற்கை கருத்தரித்தல் ஆகியவற்றை பாதிக்கும் காரணிகள்

- ஆண் மற்றும் பெண் கோய் கெண்டை தீவனம், வைட்டமின் ஈ (200 மி.கி. / கிலோ) கொண்ட ஊட்ட உணவளிக்கும்போது அதிக வளர்ச்சி செயல்திறன் குறியீடுகளை வெளிப்படுத்தியது.
- வைட்டமின் சி மற்றும் ஈ இரண்டும் கொடுக்கப்பட்ட ஆண் மீன்களில் அதிக ஜி. எஸ்.ஐ. பதிவு செய்யப்பட்டது. பெண் மீன்களில், வைட்டமின் ஈ–யை 400 மி.கி / கிலோ தீவனத்துடன் உணவளிக்கும் போது அதிக ஜி.எஸ்.ஐ பதிவு செய்யப்பட்டது.
- உறைபனி நெறிமுறை I, இதர நெறிமுறை உடன் ஒப்பிடும் போது சிறந்த முடிவை அளித்தது. இதில் 200 மற்றும் 600 மி.கி. / கிலோ உணவில் வைட்டமின் ஈ உடன் வழங்கப்பட்ட மீன்களின் விந்தணுக்கள் உறைபதனத்தின் போது அதிக இயக்கம் காணப்பட்டது.



மேலே – மூன்று வெவ்வேறு செறிவுகளில் வைட்டமின் சி மற்றும் ஈ கொண்ட உணவு கொடுக்கப்பட்ட ஆண் மீனின் விந்தகம்
கீழ் – மூன்று வெவ்வேறு செறிவுகளில் வைட்டமின் சி மற்றும் ஈ கொண்ட உணவு கொடுக்கப்பட்ட பெண் மீனின் கருமுட்டை

#### 2. முதுகலை மாணவர் ஆராய்ச்சி –கடல் விரால் மீனின் விந்தணு பண்புகள் மற்றும் விந்து உறை பதனமுறையில் தரப்படுத்துதல் குறித்த ஆய்வு கண்டுபிடிப்புகள்

- விரால் மீனின் விந்தின் நகரும் காலம் 58 நொடிகளும், நகரும் திறன் 9 ஆகவும் இருந்தது. இவை முன் நோக்கிய மற்றும் வட்ட வடிவிலான நகருதலை வெளிப்படுத்தியது. விரால் மீனிலிருந்து எடுக்கப்பட்ட விந்து திரவத்தின் விந்தணு அடர்த்தி 1:40, 1:80 & 1:120 என்கிற கலக்கும் விகிதத்தில் 3.04 x $10^9$ உயிரணு / மிலி, 2.51 x $10^9$ உயிரணு / மிலி, மற்றும் 1.96 x $10^9$ உயிரணு / மிலி, என்ற முறையில் இருந்தது.
- 0.85% உப்பு கரைசல் 10% டைமித்தேல் சல்ஃபாக்ஸைடு (DMSO) உடன் விரால் மீனின் விந்தானது 1:40 என்றளவில் கலக்கப்பட்டு உறை பதனம் செய்த போது, அதிகபட்ச சராசரி நகரும் நேரம் மற்றும் அதிகபட்ச நகரும் இருந்தது. இதில் 89 % உயிரணுக்கள் முன் மற்றும் வட்ட வடிவிலான நகருதலை வெளிப்படுத்தின.



கடல்விராலில் துளைக்கருவி பயன்படுத்துதல்



நுண்ணோக்கியில் கடல்விராலின் விந்தணுவை நோக்குதல்

#### 3. முதுகலை மாணவர் ஆராய்ச்சி –கூண்டு அமைப்பில் இருப்படர்த்தியை பொறுத்து பங்கேசியஸ் ஹைப்போத்தாலமஸ் மீனின் வளர்ச்சி, பிழைப்புத்திறன் மற்றும் உற்பத்தியைக் கண்டறிதல்

- முதற்கட்ட சோதனை முடிவில் அதிகபட்ச இறுதி சராசரி எடை (110.03 ± 0.11 கி), எடை அதிகரிப்பு (10.03 ± 0.54 கி) அன்றாட எடை அதிகரிப்பு (1.08 ± 0.17 கி) மற்றும் குறிப்பிட்ட வளர்ச்சி வீதம் (4.07 ± 0.17 கி) ஆகியவை குறைந்த இருப்படர்த்தியில் (20 மீன்கள்/மீ$^3$) பதிவு செய்யப்பட்டது.
- சிறந்த தீவன மாற்று வீதம் மற்றும் தீவன மாற்றுத்திறன் ஆகியவைகள் குறைந்த அளவிலான இருப்படர்த்தியில் பதிவு செய்யப்பட்டது. நிகர உற்பத்தி அளவானது (21.42 ± 0.02 கி.கி) இருப்படர்த்திக்கு நேர் விகிதத்தில் காணப்பட்டது. இவை அதிகமாக அதிக இருப்படர்த்தி அளவில் (60 மீன்கள் /மீ$^3$) காணப்பட்டது.

- இரண்டாவது சோதனை முடிவில் – எடை அதிகரிப்பு (58.19 ± 0.18 கி) , அன்றாட எடை அதிகரிப்பு (0.97 ± 0.0 கி) மற்றும் குறிப்பிட்ட வளர்ச்சி வீதம் (5.42 ± 0.04 கி) குறைந்த இருப்படர்த்தியில் (20 மீன்கள்/மீ$^3$) பதிவு செய்யப்பட்டது. மேலும் இந்த அமைப்பில் பிழைப்புத்திறன் அதிகபட்சமாக (98.75%) காணப்பட்டது.
- குறைந்த இருப்படர்த்தியில் கூண்டு அமைப்பில் (20 மீன்கள்/மீ$^3$) *பங்கேசியஸ் ஹைப்போத்தால்மஸ்* நல்ல வளர்ச்சி மற்றும் பிழைப்புத்திறன் ஆகியவற்றை வெளிப்படுத்தியது.

### 4. முதுகலை மாணவர் ஆராய்ச்சி – சிவப்பு கடற்பாசி *கிரேஸிலேரியா எடுலிஸ்* (எல்.ஜி. ஜெமலின்) மற்றும் *பினேயஸ் வனாமி* (பூன், 1931) ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பியலில் ஒரு வளங்குன்றா மாற்று

- கடற்பாசி *(கிரேஸிலேரியா எடுலிஸ்)* இறால் உற்பத்தியில் எந்த வித எதிர் மறை விளைவுகளையும் உண்டாக்கவில்லை மாறாக, இடைவெளியை சரியாக பயன்படுத்துவதன் மூலம் நீரின் தரத்தை உயர்த்துகிறது. இதன் விளைவாக சிறந்த மேலாண்மைக்கு வழி வகுக்கிறது.
- *கிரேஸிலேரியா ஸ்லிகடம்* உயிரில் வடிகட்டித்திறன் வனாமி வளர்ப்பில் சிறந்த நீர் தர மேலாண்மைக்கு வழி வகுக்கும் என்பதை இந்த ஆய்வு உறுதி செய்கிறது.
- ஆய்வின் இறுதியில் சராசரியாக அறுவடை செய்யப்பட்ட கடற்பாசியின் அளவு 12.59±0.39 கிகி / மிதவை ஆகும். மிதவை 1 மற்றும் மிதவை 2ன் சராசரி அன்றாட வளர்ச்சி முறையே 0.156 மற்றும் 0.165, அன்றாட வளர்ச்சி வீதங்கள் முறையே 1.77% மற்றும் 1.82% ஆகும்.
- சோதனைக்குளங்களில் கடற்பாசி பயிரிடுவதற்கு முன்னும் மற்றும் அறுவடைக்குப் பின்னும் அவற்றின் கார்பன் : நைட்ரஜன்: பாஸ்பரஸ் விகிதங்களை ஆராய திசு பகுப்பாய்வு சோதனை நடத்தப்பட்டது, அதன் முடிவுகள் முறையே 29.99:1.94:0.37 மற்றும் 27.26:1.26:0.27 ஆகும்.









### 5. முதுகலை மாணவர் ஆராய்ச்சி – உட்புற நாற்றாங்கால் வளர்அமைப்பின் வடிவமைப்பு மற்றும் இருப்படர்த்தியை பொறுத்து வெள்ளை பாறை மீனின் *(டிராச்சினோடஸ் ப்ளாச்சி)* வளர்ச்சி, உயிர் பிழைப்புத்திறன் மற்றும் இறைச்சியின் தரத்தினை கண்டறிதல்

- உடைந்த பவளப்பாறைகள், பீங்கான் வளையங்கள், குவார்ட்ஸ் மணல், கார்பன் குறுணைகள் மற்றும் மட்டி ஓடுகளின் மூலம் செலவு குறைந்த உயிரியல் வடிகட்டியானது உருவாக்கப்பட்டது.
- அதிக பட்ச சராசரி எடை (5.90±0.10), எடை அதிகரிப்பு (5.47±0.07), எடை அதிகரிப்பு வீதம் (1298.76±91.56), அன்றாட எடை அதிகரிப்பு (0.12±0.001) மற்றும் குறிப்பிட்ட வளர்ச்சி வீதம் (5.886±0.15) ஆகியவை இருப்படர்த்திக்கு எதிர் விகிதத்தால் இருந்தது. உயிரியல் வடிகட்டி பொருத்தப்பட்டு, குறைந்த அளவிலான இருப்படர்த்தி (20 மீன்கள்/200லி) கொண்ட அமைப்புகளில் அதிகளவிலான மதிப்புகள் பதிவு செய்யப்பட்டது.
- சிறந்த தீவன மாற்று வீதம் மற்றும் தீவன மாற்றுதிறன் ஆகியவை குறைந்த அளவிலான இருப்படர்த்தி (20 மீன்கள்/200லி) மற்றும் நடுத்தர அளவிலான இருப்படர்த்தி (40 மீன்கள்/200லி) கொண்ட அமைப்பில் பதிவு செய்யப்பட்டது.
- இருப்படர்த்தி (16 மீன்கள்/மீ$^3$) கொண்ட தொட்டிகளில் அதிகளவு புரத உட்கிரகித்தல் காணப்பட்டது. தற்போதைய ஆய்வில் புரதம் மற்றும் ஈரப்பதத்திற்கும் இடையில் தலை கீழ் உறவு இருப்பது கண்டறியப்பட்டது. அதிகப்படியான இருப்படர்த்தி சாம்பல் மற்றும் கொழுப்புச் சத்துகளைக் குறைக்கிறது. குறைந்தளவிலான இருப்படர்த்தியில் (8 மீன்கள்/மீ$^3$) அதிகளவு அமில காரத்தன்மை (6.55) மற்றும் குறைந்த நீர் பிடிப்புத் திறன் (2.63கி/கி) ஆகியவை பதிவு செய்யப்பட்டது.
- குறைந்த இருப்படர்த்தியில் வளர்க்கப்பட்ட வெள்ளை பாறை மீன்களில் நொதிகளின் செயல்பாடுகளான கேட்டலேஸ் மற்றும் லேக்டேட் டீஹைட்ரஜனேஸ் செயல்பாடு குறைந்த அளவில் இருந்தது. மாறாக அதிக இருப்படர்த்தியில் வளர்க்கப்பட்ட வெள்ளை

பாறை மீன்களில் இந்த அழுத்த நொதிகளின் செயல்பாடு அதிகளவில் இருந்தது.



### II. மீன் நோயியல் மற்றும் சுகாதார மேலாண்மைத் துறை

#### 1. நீர்வாழ் உயிரினங்களின் நோய்களைக் கண்காணிக்கத் தேசிய அளவிலான திட்டம்

- 2020–2021 காலத்தில் தமிழ்நாட்டில் மூன்று மாவட்டங்களான நாகப்பட்டினம், (தெற்கு காரைக்கால்) புதுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள இறால் வளர்ப்பு பற்றி நேரடி கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. மேலும் தூத்துக்குடி இராமநாதபுர மாவட்டங்களில் இறால் வளர்ப்பு பற்றிய பொதுவான நோய் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது.
- 30 இறால் பண்ணைகள் மற்றும் ஒரு இறால் பொறிப்பகத்திலிருந்து 89 மாதிரிகள் *(பினேயஸ் வெனாமி)* சேகரிக்கப்பட்டன.
- சேகரிக்கப்பட்ட இறால் மாதிரிகளின் வளர்ப்பு நாட்கள் வீதம் 8 முதல் 110 நாட்கள் வரையிலான 461 மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. அதில் 261 மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இறால் மாதிரிகளில் WSSV, IHHNV, MBV, BP, TSV, YHV, IMNV, EHP மற்றும் AHPND நோய்தாக்கங்கள் உள்ளனவா என ஆய்வு செய்யப்பட்டன.
- 89 மாதிரிகள் ஆய்வு செய்ததில் 3 மாதிரிகளில் WSSV அமைந்திருப்பதாக கண்டறியப்பட்டது. 89 மாதிரிகளில் கூட்டு பலபடியாக்கல் வினை மூலம் *என்டிரோசைட்டோசோவன் ஹெப்பட்டோ பின்னேயி* உள்ளதா என ஆய்வு செய்ததில், 38 மாதிரிகளில் இவ்வகையான பாதிப்பை கண்டறியப்பட்டது. அனைத்து மாதிரிகளும் IHHNV, MBV, BP, TSV, IMNV மற்றும் YHV போன்ற எந்தவொரு நோய்க்கிருமியும் இல்லை என உறுதி செய்யப்பட்டது.

#### மீன் மாதிரிகள்

- தென்காசியில் இருந்து சேகரிக்கப்பட்ட விரால் மீன்களில் விரால் ராப்டோவைரஸ் உள்ளதா என ஆய்வு செய்ததில் அவற்றில் அந்த வைரஸ் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டது.
- கட்லா, ரோகு, மிர்கால், சாதா கெண்டை மீன் மாதிரிகளில் கொய் ஹெர்பஸ் வைரஸ் மற்றும் *அபனோமைசிஸ் இன்வடேன்ஸ்* தொற்று மாதிரிகளில் கண்டறியப்பட்டது.
- திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட கட்லா மீன் மாதிரிகளில் செவுள் புழுக்கள் பாதிப்பு உள்ளதைக் கண்டறியப்பட்டது.
- இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த, திருப்புலாணியில் திறந்தவெளி கடற்பரப்பில் வளர்க்கப்பட்ட கொடுவாய் மீன்களில் அசாதாரண இறப்பு காணப்பட்டதை தொடர்ந்து மீன் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. அந்த கொடுவாய் மீன் மாதிரிகளில் நோடா வைரஸ் மற்றும் இரிடோ வைரஸ் இல்லை என உறுதி செய்யப்பட்டது.
- நோய் தாக்கமடைந்த கொடுவா மீன்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட பாக்டீரியா பகுப்பாய்விற்கு உட்படுத்தும்போது *போட்டோபாக்டிரியம் டேம்சேலே* உள்ளது என உறுதி செய்யப்பட்டது.
- நோய் தாக்கமடைந்த விறால் மீன் மாதிரிகள் மயிலாடுதுறையில் இருந்து சேகரிக்கப்பட்டு அவற்றில் அபனோமைசிஸ் இன்வடேன்ஸ் அமைந்திருப்பது உறுதி செய்யப்பட்டது,

#### 2. முதுகலை மாணவர் ஆராய்ச்சி – ஃபோட்டோ பாக்டீரியம் டாம்செல்லே துணைசிற்றினம் டாம்செல்லே நோய் கிருமியை துடுப்புடைய கடல் மீன்களுக்கு உட்செலுத்தி நோய் தடுப்பு முறையை கண்டறிதல்

- நுண்ணுயிர் கொல்லிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட எதிர்திறன் சோதனை மூலம் இந்நுண்ணுயிர் பெனிசிலினை எதிர்க்கும் தன்மையையும் குளோரோம்பெனிகல், எரித்ரோமைசின், ஃபுரோசோலிடோன், சிப்ரோஃபிளாக்சின், ஜென்டாமைசின், ட்ரைமெத்தோபிரம், ஆஃப்லோக்சசின், செஃபிக்சைம், சல்பமெதிசோல், ஆக்ஸிடெட்ராசைக்கிளின், மற்றும் செஃபாக்ளோர் போன்றவற்றிற்கு எதிர்திறன் அற்றதாகவும் உள்ளது என கண்டறியப்பட்டது.
- நோய்த்தாக்க பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட டாம்செல்லே மீன்களில் தோல் வறண்டு

காணப்பட்டது. மேலும் அவைகளின் வால்துடுப்பு, பக்கவாட்டு துடுப்பு மற்றும் மேல்துடுப்பு பகுதிகளில் இரத்தகசிவும் காணப்பட்டது.

- தடுப்பூசி ஆய்வின் 45வது நாள் தடுப்பு மருந்து செலுத்தப்பட்ட மற்றும் தடுப்பு மருந்து செலுத்தப்படாத குழு ஆகிய இரண்டு குழுக்களுக்கும் 1.3 X $10^{35}$ CFU/மீன் வீரியம் கொண்ட பிடிடி தாக்கத்திற்கு உட்படுத்தப்பட்டன. இறந்த மற்றும் இறக்கும் தருவாயில் இருந்த மீன்களில் செவுள், ஈரல், மண்ணீரல், சிறுநீரகம் ஆகியவற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பாக்டீரியாக்கள் பிடிடி என கூட்டு பி.சி.ஆர் மூலம் உறுதி செய்யப்பட்டது.

- தடுப்பு மருந்து போடப்பட்ட மீன்களின் இறப்பு விகிதம் 13.40% எனவும் தடுப்பு மருந்து போடப்படாத மீன்களின் இறப்பு விகிதம் 39.42% எனவும் கண்டறியப்பட்டது. இதன் மூலம் தடுப்பு மருந்து போடப்பட்ட மீன்களின் உயிர்பிழைப்பு திறனானது 67% என கண்டறியப்பட்டது.




### 3. முதுகலை மாணவர் ஆராய்ச்சி – *ஓரியோக்குரோமிஸ் நிலோடிகஸில்* (லின்னேயஸ், 1758) மீனில் திலேபியா லேக் வைரஸின் மூலம் நோய்த் தொற்றினை ஏற்படுத்தி அதனில் நோயெதிர்ப்பு மரபணு வெளிப்பாடு பற்றிய ஆய்வு

- திலேபியா லேக் வைரஸ் (TLV) EPC மற்றும் SSN–1 செல்கள் இரண்டிலும் 27° செல்சியஸ் வெப்பநிலையில் நன்றாக வளர்ந்தது. வைரஸ் தொற்று ஏற்பட்டவுடன் EPC மற்றும் SSN–1 செல்கள் நோய் தாக்கத்தை 3 – 6 நாட்களில் ஏற்படுத்தியது.

- திலேபியா இளம் மீன்களில் TLVயின் நோய் தொற்று பற்றி ஆய்வு செய்ததன் மூலம் முந்தைய அறிக்கைகளுக்கு ஒத்த மருத்துவ அறிகுறிகளை வெளிப்படுத்தியது. மருத்துவ அறிகுறிகளில் மீன்களின் நீந்தும் தன்மையில் வேறுபாடு, மீன்களில் தோல் மற்றும் துடுப்பு இழப்பு, தோல் நிறமாற்றம், திறந்த புண்கள், துடுப்பு அழுகல், வயிற்று வீக்கம் மற்றும் இருகண்களில் வீக்கம் ஆகியவை ஆகும்.

- நோயெதிர்ப்பு மரபணு வெளிப்பாடு ஆய்வில், மூளை, சிறுநீரகம், கல்லீரல் மற்றும் மண்ணீரல் திசு ஆகியவற்றில் ஐ.பி.எஸ்–1 மற்றும் டி.எல்.ஆர்–7 ஆகிய இரண்டு மரபணுக்களின் வெளிப்பாடு காணப்பட்டது.




ஆய்வில் பயன்படுத்தப்பட்ட SSN 1 செல் வரிசையில் TiLV ஆல் தூண்டப்பட்ட சைட்டோபதிக் விளைவு
(A) SSN 1 செல் வரிசை (B) TiLV பாதிக்கப்பட்ட SSN 1 செல் வரிசை

### கடற்சார் உயிரின வளர்ப்பு ஆராய்ச்சி பண்ணை வசதி, தருவைக்குளம்

#### *பினேயஸ் வனாமி* இறால் வளர்ப்பில் கடற்பாசி சார்பொருட்களை தீவனத்துடன் கலந்து அளிக்கும் பொருளாக அளிப்பதால் வளர்ச்சியில் ஏற்படும் விளைவு பற்றிய ஆய்வு

- கடற்பாசி கலந்த உணவு அளிக்கப்பட்ட ஆராய்ச்சி குளத்தில் உணவு மாற்று விகிதம் சிறந்து காணப்பட்டது. (ஆராய்ச்சி குளம் – 2.03 கட்டுப்பாட்டுக் குளம் –2.77)

- கடற்பாசி கலந்த உணவு அளிக்கப்பட்ட ஆராய்ச்சி குளத்தில் பிழைப்புத் திறன் 68% மற்றும் கட்டுப்பாட்டுக் குளத்தில் 57% ஆக காணப்பட்டது.



வனாமி இறால்களை அறுவடை செய்தல்

## III. நீர்வளச் சூழலியல் மேலாண்மைத்துறை

### 1. DST – SERB - மன்னார் வளைகுடா பகுதியிலிருந்து தனித்தெடுக்கப்பட்ட *பியோடெக்டைலம் ட்ரைகார்னுட்டம்* எனப்படும் கடற்நுண்பாசியிலிருந்து இக்கோசா பெண்ட்டா ஈனாயிக் கொழுப்பு அமில உற்பத்தி

- இலக்கு வைக்கப்பட்ட இனங்கள் *பியோடாக்டைலம் ட்ரைகோர்னுட்டம்* 10–20மீ ஆழமான கடல்பகுதி வரம்பில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட நடுப்பகுதி நீர் நுண்பாசி சேகரிப்பு வலையை பயன்படுத்தி சேகரிக்கப்பட்டு அடையாளம் காணப்பட்டது.
- மொத்தம் 16 இனங்கள் அடையாளம் காணப்பட்டு நுண்பாசிகள் பிரித்தெடுக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.
- பின்வரும் இனங்களுக்கு மரபணுவங்கி அணுகல் எண் பெறப்பட்டது

  1. *சிலிண்ட்ரோதீகா* இனம் என்.சி.பி.ஐ மெகாவாட் 828324
  2. ஆம்போரா இனம் என்.சி.பி.ஐ. மெகாவாட் 888414
  3. *நேவிகுலா கிளாவட்டா* என்.சி.பி.ஐ. மெகாவாட் 888464 மற்றும்
  4. *நானோகுளோரோப்சிஸ் சலினா* என்.சி.பி.ஐ. மெகாவாட் 888454

- பரிசோதனையின் முடிவு தனிமைப்படுத்தப்பட்ட நுண்பாசிகளுக்கு பொருத்தமான உப்புத்தன்மை வரம்பு 30 முதல் 35 பிபிடி வரை எனவும் பொருத்தமான வளர் ஊக்கிகள் இனங்களுக்கு ஏற்ப மாறுபடும் என ஆராய்ச்சி முடிவு தெரிவிக்கிறது.




### முதுகலை மாணவர் ஆராய்ச்சி – சாதாகெண்டை மீனில் சைபர்மெத்ரின் மற்றும் மோனோக்ரோடோபோஸ் என்னும் பூச்சிக்கொல்லிகளினால் திசு மற்றும் நொதிகளில் ஏற்படும் விளைவு

- 9–12 செ.மீ. நீளம் மற்றும் 10–12 கிராம் எடைகொண்ட 500 மீன்கள் மீன் பண்ணையிலிருந்து பெறப்பட்டு, சோதனைக்காக எஃப்.ஆர்.பி. தொட்டிகளில் 10 மீன்கள் எடுக்கப்பட்டு மோனோக்ரோடோபோஸ் மற்றும் சைபர்மெத்ரின் ஐந்து விதமான செறிவுகளில் வழங்கப்பட்டது. இந்த சோதனை 48 மணி நேரத்திற்கு நடத்தப்பட்டு, ஒவ்வொரு 2–3 மணி நேரத்திற்கும் மீன்களின் இறப்பானது முறையே கண்காணிக்கப்பட்டது.
- கடுமையான நச்சுத்தன்மைக்கு, இரண்டு 48 மணிநேர எல்.சி.50–லிருந்து ஐந்து செறிவுகள் கட்டுப்பாட்டுடன் கணக்கிடப்பட்டன. எஃப்ஆர்பி தொட்டிகளில் வெளிப்படுத்திய 10 மீன்களுடன் 96 மணி நேரம் சோதனை நடத்தப்பட்டது. மோனோக்ரோட்டோபோஸிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட செறிவுகள் 0.095, 0.191, 0.382, 0.768 மற்றும் 1.528 பி.பி.எம். மற்றும் சைபர்மெத்ரின்கு 0.5, 1.0, 2.09, 4.0 மற்றும் 8.0 பிபி ஆகும்
- சாதாகெண்டை கட்டுப்பாட்டு மீன்களின் தசையில் உள்ள புரத அளவானது 37.21±0.08 மி.கி/கி என்று கண்டறியப்பட்டது. 96 மணிநேர சோதனையில் செறிவுகளின் அதிகரிப்புடன் தசைகளில் புரதத்தின் அளவு குறைந்தது. 0.095, 0.191, 0.328 மற்றும் 0.768 செறிவுகளில் உள்ள மோனோக்ரோட்டோபோஸிக்கு புரத அளவு 25.20±0.05, 25.18±0.12, 23.97±0.11 மற்றும் 20.81±0.03 மி.கி/கி. 0.5, 1.0, 2.0 மற்றும் 4.0 பிபிபி செறிவுகளில், சைபர்மெத்ரின் வெளிப்படும் மீன்களின் புரத உள்ளடக்கம் முறையே 26.17±0.02, 25.07±0.01., 22.48±0.06 மற்றும் 20.33±0.23 மிகி/கி ஆகும்.
- நாள்பட்ட நச்சுத்தன்மையின் போது, 14 மற்றும் 28வது நாளில் *சிப்ரினஸ் கார்பியோவின்* கட்டுப்பாட்டு குழுவில் சராசரி புரத உள்ளடக்கம் முறையே 37.12±0.04 மற்றும் 36.72±0.06 மி.கி/கி ஆகும்.
- 28வது நாளில் 0.115, 0.057 மற்றும் 0.029 பிபிஎம் செறிவுகளுக்கு மோனோக்ரோடோபோஸ் கிடைக்கப்பெற்ற மீன்களின் புரத உள்ளடக்கம் ஆகியவை முறையே 25.0±0.23, 25.15±0.03 மற்றும் 26.04±0.06 மிகி/கி ஆகும். 28வது நாளில் 0.44, 0.25 மற்றும் 0.11 பிபி செறிவுகளில் சைபர்மெத்ரினுக்கு கிடைக்கப்பெற்ற மீன்களின் புரத உள்ளடக்கம்

முறையே 22.09±0.04, 25.34±0.12 மற்றும் 27.05±0.07 மி.கி/கி ஆகும்.



சைபர்மெத்ரின்




சூமானோக்ரோடோபஸ்



10–12 கிராம் எடை



மீனை வெட்டுதல்



மூளை



கல்லீரல்



செவுள்



சதை

**முதுகலை மாணவர் ஆராய்ச்சி – மன்னார் வளைகுடாவின் கடலோர பகுதிகளான உப்பளங்கள் மற்றும் கழிமுக நீர் பகுதியில் காணப்படும் நுண்நெகிழிகளின் இடஞ்சார்ந்த தற்காலிக வேறுபாடுகள்**

- உப்பளத்தின் வெப்பநிலை (28–32°செ), உப்புத் தன்மை (31–37பிபிடி) மற்றும் அமிலகாரத்தன்மை (7–7.5) அளவுகளானது கண்டறியப்பட்டது.
- உப்பளத்திலிருந்து எடுக்கப்பட்ட நீர், வண்டல் மற்றும் உப்புகளிலிருந்து நுண்நெகிழிகளானது வரையறுக்கப்பட்ட வழிமுறைகளை பின்பற்றி பிரித்தெடுக்கப்பட்டது.
- நுண்நெகிழியின் வடிவம் (கயிறு, இழை, துகள், ஒழுங்கற்ற வடிவம்) அளவு (1–5மிமீ) மற்றும் நிறம் (நீலம், பச்சை, மஞ்சள், சிவப்பு வெளிப்படையான நிறம்) குறித்த தரவுகள் பதிவு செய்யப்பட்டது.







**முதுகலை மாணவர் ஆராய்ச்சி –தூத்துக்குடி கடலோரப் பகுதிகளில் பாலிஎத்திலின் மற்றும் பாலிபுரொப்பிலின் நுண்நெகிழிகளினால் உணவுச் சங்கிலியில் ஏற்படும் விளைவுகள்**

- தூத்துக்குடி கடலோரப்பகுதிகளில் காணப்படும் பாலிஎத்திலின் மற்றும் பாலிபுரொப்பிலின் நுண்நெகிழிகளின் ஊட்டநிலை பரிமாற்றத்தை கண்டறிய இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வேம்பார், வெள்ளப்பட்டி, திரேஸ்புரம், ஸ்பிக்நகர், புன்னக்காயல் மற்றும் திருச்செந்தூர் ஆகிய இடங்களில் மாதம் ஒரு முறை நீர், கடற்கரை படிவுகள் மற்றும் மீன் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன.
- நுண்நெகிழிகளின் சராசரி செறிவு 0.05±0.02, 0.08±0.02, 0.21±0.05, 0.14±0.04, 0.33±0.25, 0.08±0.04 துகள்கள்/மீ$^3$ ஆகும்.
- கடற்கரை படிவுகளில் பதிவு செய்யப்பட்ட நுண்நெகிழிகளின் சராசரி செறிவு 0.01±0.01, 0.04±0.02, 0.17±0.03, 0.05±0.02, 0.04±0.02, 0.03±0.02 கி/கி.கி வண்டல் படிவுகள் ஆகும்.
- துண்டு வடிவ நுண்நெகிழிகளானது திரேஸ்புரம் கடலோர மற்றும் கடற்கரை படிவுகளில் அதிகமாகக் காணப்பட்டன.
- புன்னக்காயல் மீன்பிடி இறங்கு தளத்திலிருந்து பெறப்பட்ட *சார்டினெல்லா*, மீன்களில் (2.33±2.51 நுண்நெகிழிகள்/கிராம் திசு) இருக்கும் நுண்நெகிழிகளின் சராசரி செறிவு அதிகமாகக் காணப்பட்டன.
- வேம்பார் மீன்பிடி இறங்குதளத்திலிருந்து பெறப்பட்ட *சார்டினெல்லா* மீன்களில் (0.01±0.01 நுண்நெகிழிகள் /கிராம் திசு) காணப்பட்ட நுண்நெகிழிகளின் சராசரி செறிவு மிக குறைவாக காணப்பட்டன.







**முதுகலை மாணவர் ஆராய்ச்சி – வளர்ப்பு ஊடகம் மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளின் விளைவால் தேர்ந்தெடுக்கப்பட்ட கடல் நுண்பாசிகளின் வளர்ச்சி**

- கல்லூரி வளாகத்திற்குள் காணப்படும் அசோகா, சவுக்கு, மா மற்றும் வேப்ப மர விதைகளிலிருந்து சாறு தயாரிக்கப்பட்டது.
- சிவப்பு மற்றும் பழுப்பு நிற கடல் பாசிகளிலிருந்து கடற்பாசி திரவ உரமானது நொதித்தல் முறையின் மூலம் தயாரிக்கப்பட்டது.





**4. மீன்வள மேலாண்மைத் துறை**

**முதுகலை மாணவர் ஆராய்ச்சி – தூத்துக்குடி கடற்கரை ஸ்டிங்ரேஸ் (குடும்பம் : தாசியாட்டிடே) இன மீன் இருப்பு தொகை மற்றும் உயிரியல் பற்றிய ஆய்வு**

- தூத்துக்குடி கடற்கரையில் 14 வகையான ஸ்டிங் திருக்கைகள் அடையாளம் காணப்பட்டன. ஒரு மீன்பிடி அலகு முயற்சி திருக்கை மீன்களுக்கு மதிப்பிடப்பட்டது.
- திருக்கை மீனின் வளர்ச்சி விகிதம், இறப்பு விகிதம், பாலின விகிதம், குடல் உள்ளடக்க பகுப்பாய்வு மற்றும் முட்டை/குட்டியிடும் விகிதம் போன்றவை தீர்மானிக்கப்பட்டது.



மீன்பிடி தளத்தில் திருக்கை மீனின் கள ஆய்வு



உயிரியல் ஆய்வகத்தில் திருக்கை மீன்களின் ஆய்வு

**இந்திய கடற்பகுதியில் உள்ள ஆழ்கடல் மீன் இனங்களின் வாழ்க்கை சுழற்சி மற்றும் உயிரியல் பண்புகள் குறிப்பாக ஒட்டோலித் பற்றிய ஆய்வு திரு.கே. பீமேஷ்வராவ்**

- பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகள் அதிவேக நடுமட்ட இழுமடி / டிமெர்சல்ட்ரால் – க்ரஸ்டேசியன் பதிப்பை (HSDRII (V) பயன்படுத்தி மேற்கு வங்காள விரிகுடாவிலிருந்து சேகரிக்கப்பட்டன. மொத்தம், வங்காள விரிகுடாவில் பத்து (10) முறையும், அரபிக் கடலில் இரண்டு முறையும், 200–1000மீ. ஆழத்தில் சேகரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.
- *பராஸ்க்காம்ராப்ஸ் பெலுசிடஸ்*, 200–300மீ. ஆழத்தில் இருந்தும், *அலிபோசெபாளஸ் பிலான்போர்டி*, 500–1000மீ. ஆழத்தில் இருந்தும், *ப்டெறிகோடிரைகளா ஹெமிஸ்டிக்டா*, 200–250மீ ஆழத்தில இருந்தும் *லாம்பிரோகிராமஸ் நைகர்*, 1000மீ. ஆழத்தில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றது.
- நான்கு மீன் இனங்களும் நிலையான அடிப்படை வகைப்பாட்டியல் விசைகளைக் கொண்டு அடையாளம் கண்டு வகைப்படுத்தப்பட்டன. மேலும் மொத்த பிடிப்புகலவை, 635 கிலோ மற்றும் பிடிப்புத்திறன் 105 கிலோ/நேரம் ஆகும். இவற்றில் *பா. பெலுசிடஸ்* 115 கிலோ மற்றும் 19 கிலோ/நேரமாகவும், *அ.பிலான்போர்டி* 18கிலோ மற்றும் 3கிலோ/நேரமாகவும், *ப்.ஹெமிஸ்டிக்டா* 13 கிலோ மற்றும் 2.1 கிலோ/நேரமாகவும், லா.நைகர் 310 கிலோ மற்றும் 52கிலோ/நேரமாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.
- *ப். ஹெமிஸ்டிக்கடாவைத்* தவிர இதர மூன்று மீன் இனங்களின் நீள, எடை உறவு முதன்முறையாக இந்தியக் கடலில் இருந்து கணக்கிடப்பட்டுள்ளது. இதில் *ப். ஹெமிஸ்டிக்டா* எதிர்மறை நீள்–எடை உறவுவாகவும் மற்ற மூன்று மீன்களும் நேர்றை நீள்–எடை உறவுவாகவும் இருப்பது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இரைப்பை உடற்கூறு சார்ந்த குறியீடு நான்கு மீன்களுக்கும் கணக்கிடப்பட்டு அவை இறங்கு வரிசையில் கொடுக்கப்பட்டுள்ளது. அதிகபட்சமாக *ப. பெலுசிடஸ்* 4.97 ஆகவும், குறைந்தபட்சமாக *லா. நைகர்* மீனில் 1.96 ஆகவும் மதிப்பு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் *லா. நைகர்* மீன்கள் அழுத்த மாறுதல்களுக்கு உட்படுத்தப்படுகிறது குறிப்பிடத்தக்கது.
- இக்குறியீடு அதிகபட்சமாக 4.28 அளவில் *ப். ஹெமிஸ்டிக்டாவிலும்*, 3.005 அளவில் *ப. பெலுசிடஸ்லும்*, குறைந்தபட்சமாக 0.998 அளவில் *லா. நைகர்* மற்றும் 0.888 அளவில் *அ. பிலான்போர்டியிலும்* கணக்கிடப்பட்டுள்ளது.
- மீன் வளர்ச்சி விகித நிலை மற்றும் கல்லீரல்–உடற்கூறு சார்ந்த குறியீடு *ப். ஹெமிஸ்டிக்டா* மற்றும் *ப. பெலுசிடஸ்* ஆகிய இரண்டு மீன்களிடையே நேர்மறையான நிலையைக் கொண்டுள்ளது என ஆய்வில் அறியப்படுகின்றது.
- இவ்வாய்வில் ஒட்டோலித் உருவக அமைப்பு மற்றும் நீள–எடைசமன்பாடு ஆகியவற்றைப் பயன்படுத்தி பெறப்பட்ட அனைத்தும் இரையின்அளவை மறு

கட்டமைப்பதற்கான துல்லியமான மதிப்பீடுகளை அளிக்கக்கூடும் ($r^2$=0.93 முதல் 0.73 வரை).



FORV சாகர் சம்ப டா



கப்பலின் உள் மீன்பிடி வசதிகள்



பிடிபட்ட ஆழ்கடல் மீன்கள்



மீன் இறங்கு தளத்திலிருந்து சேகரிக்கப்பட்ட மீன் மாதிரிகள்

**முதுகலை மாணவர் ஆராய்ச்சி – மன்னார் வளைகுடா பகுதியில், ஸ்பைரான்டே குடும்பத்தைச் சேர்ந்த, தேர்ந்தெடுக்கப்பட்ட ஊளி மீன்களின் பல்லுயிர் பரவல், மீன்பிடிப்பு மற்றும் உயிரியல் பற்றிய ஆய்வு**

- *ஸ்பைரெனா ஃபோஸ்டொ* மீனின் புதிய அதிகபட்ச இனமுதிர்ச்சி நீளம் முதல் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது (36.3 செ.மீ)
- *ஸ்பைரெனா ஃபோஸ்டொ* மீனின் முட்டையிடும் விகிதம் (97,920 – 2,52,000) கணக்கிடப்பட்டது.



இனப்பெருக்க உறுப்புகள் சேகரித்தல்



நீள–எடை அளவீடுகள்



தூத்துக்குடி மீன் இறங்கு தளத்திலிருந்து சேகரிக்கப்பட்ட மீன் மாதிரிகள்

**முதுகலை மாணவர் ஆராய்ச்சி –தூத்துக்குடியில் உள்ள சதுப்பு நில காடுகளில் இருக்கும் மெல்லுடலிகளின் வகைகள் பற்றிய உயிர் பன்முகத்தன்மை / பல்லுயிர் பெருக்கம் குறித்த ஆய்வு**

- செரித்திரிடே குடும்பம் அதிக எண்ணிக்கையிலான மாதிரிகளைக் கொண்டு முதல் இடத்திலும் (10 இனங்கள்) அடுத்தப்படியாக பொட்டாமிடிடே (8 இனங்கள்) இரண்டாம் இடத்தில் இருப்பது பதிவு செய்யப்பட்டது.
- புன்னக்காயல் சதுப்பு நிலத்தில், வண்டல் மண் கார–அமிலத்தன்மை (5.94) மிக குறைவாக இருப்பது கண்டறியப்பட்டது. மொத்த கரிம அளவு (1.19%) கராபாத் விரிகுடாவில் மிக குறைவாக இருப்பது கண்டறியப்பட்டது.
- அதிகப்படியான கார்பன் அளவு (4.00588) மற்றும் மொத்த நைட்ரஜன் அளவு (1801 மிகி/கிகி) பழையகாயல் சதுப்பு நிலத்தில் பதிவு செய்யப்பட்டது.



தூத்துக்குடி கடற்கரையில் உள்ள சதுப்பு நிலங்களில் காணப்படும் மெல்லுடலிகள்

**முதுகலை மாணவர் ஆராய்ச்சி –குட்டியாடி நதி அமைப்பிலிருந்து எடுக்கப்பட்ட மலபார் மகசீர் *மீன் டோர் மலபரிக்ஸ்* (ஜெர்டன், 1949) இருப்புத்தொகை மற்றும் மரபணு பற்றிய ஆய்வுகள்**

- இம்மீன்கள் பிடிபட்ட இடங்களில் உள்ள நிலப்பரப்பு மற்றும் புவியியல் அம்சத்தை கவனமாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
- டி.என்.ஏ. தனிமைப்படுத்தலுக்கான பிரைமரை தரப்படுத்தும் வேலை செய்யப்பட்டது.
- மெகா–1 மென்பொருளைக் கற்றுக்கொண்டு, பின் அதனைப் பயன்படுத்தி பைலோஜெனெடிக் ட்ரீ பகுப்பாய்வு செய்யப்பட்டது.



*டார் மலபாரிக்கஸ்*



ஆய்வு செய்யப்பட்ட இடம்

### முதுகலை மாணவர் ஆராய்ச்சி – தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் இழுவலையில் வரும் கலசல் மீன்களின் மதிப்பீடு பற்றிய ஆய்வு

- இவ்வாய்வின் மூலம் தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம் பகுதிகளில் இழுவலைகளிலிருந்து கலசல் துடுப்பு மீன்களின் பரவல் கலசல் துடுப்பு மீன்களின் அளவு மற்றும் இழுவலையில் கிடைக்கக்கூடிய பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சிறு மீன்கள் பற்றிய ஆய்வு அறிக்கையாக தயாரிக்கப்பட்டது.
- ஆய்வின் முடிவில் சேகரிக்கப்பட்ட கலசல் மீன் மாதிரிகளின் அடிப்படையில் நாகப்பட்டினத்தில் 210 வகை கலசல் மீன்களும், தூத்துக்குடியில் 188 வகை கலசல் மீன்களும் அடையாளம் கண்டறியப்பட்டது



தூத்துக்குடியில் இழுவலைகளில் கிடைக்கப்பட்ட கலசல் மீன்கள்



நாகப்பட்டினத்தில் இழுவலைகளில் கிடைக்கப்பட்ட கலசல் மீன்கள்

### முதுகலை மாணவர் ஆராய்ச்சி –தென்தமிழகத்தில் உள்ள தாமிரபரணி ஆற்றுப்படுகையில் உள்ள மீன் இனங்களில் மீன்பரவல், பல்வகைமை மற்றும் இருப்பு தொகையை மதிப்பீடுதல் பற்றிய ஆய்வு

- இவ்வாய்வானது திருநெல்வேலி மற்றும் தூத்தக்குடி மாவட்டத்தில் உள்ள மேலபாளையம், வல்லநாடு, ஸ்ரீவைகுண்டம், ஏரல், முக்காணி மற்றும் ஆத்தூர் ஆகிய இடங்களில் மாதிரிகள் சேகரிப்பதற்காக திட்டமிடப்பட்டது.
- தகவல்கள் சேகரிப்பதற்காக கேள்வி தாள்கள் தயாரிக்கப்பட்டது.



மீன் இனம் கண்டறிதல் மற்றும் உயிரியல் பணிகளுக்காக சேகரிக்கப்பட்ட மீன் மாதிரிகள்



மீன் நேரியியல் அளவீடுகள்



இழுவலையை பயன்படுத்தி பிடிக்கப்பட்ட மீன்கள்



மீன்பிடிப்பு



பதிவு செய்யப்பட்ட நீர்த்தர அளவுருக்கள்



லேபியோ மீன்

### முதுகலை மாணவர் ஆராய்ச்சி – மன்னார் வளைகுடா மற்றும் வெட்ஜ் பகுதியில் உள்ள நெமிப்ட்டிரிடே குடும்பத்தை சேர்ந்த மீன் இனங்களில் மரபணு சார்ந்த வகைப்பாட்டியல், மீன் இருப்புத்தொகை மற்றும் உயிரியல் பற்றிய ஆய்வு

- உயிரியல் சார்ந்த பண்புகளை *ஸ்கோலியோப்ஸிஸ் பைமாகுலேட்டஸ்* மற்றும் *ஸ்கோலாயோப்ஸிஸ் வாஸ்மெரி* என்ற மீன் இனங்களிலிருந்து சேகரிக்கப்பட்டது
- மூலக்கூறு வகைபாட்டியல் மேற்க்கொள்வதற்கு மீன் சதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டது.
- *ஸ்கோலோப்ஸிஸ் பைமேக்குலேட்டஸ்* மற்றும் *நெமிப்டிரேஸ் ரன்டாலி* ஆகிய இரண்டு மீன் இனங்களின் உயிரியல், இருப்பு விகிதம் மற்றும் பரவல் தன்மை போன்றனவகளைப் பற்றிய குறிப்புகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டன.



தூத்துக்குடி மீன்பிடி துறைமுகம்



சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகம்





நெமிப்டிரஸ் ரேன்டலி மீனின் உயிரிகள் தரவுகள்



மீன் வளதரவு சேகரித்தல்

### முதுகலை மாணவர் ஆராய்ச்சி –தென்தமிழக கடற்கரை பகுதியில் உள்ள இருவோட்டின சிற்றினங்களின் பல்வகைமை, இனப்பெருக்க உயிரியல் மற்றும் இருப்புத்தொகை பற்றிய ஆய்வு

- *மெரிட்ரிக்ஸ், டொனக்ஸ், பாப்பியா* போன்ற இருவோட்டினங்களின் சிற்றின பண்புகள் கண்டறியப்பட்டது.
- தென்தமிழகத்தில் மூன்று மாதிரி சேகரிப்பு மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருவோட்டின மாதிரிகள் சேகரிக்கப்பட்டது.
- சிற்றின பல்வகைமைக்கு உண்டான தரவுகள் சேகரிக்கப்பட்டன



ஆற்றங்கரை கழிமுகம்



மெரிட்ரிக்ஸ் காஸ்டா



கேபேரியம் டியுமிடம்



டோனெக்ஸ் குனியேட்டஸ்

### 5. மீன் பதன தொழில்நுட்பத் துறை

### கடல் சார் உணவுப் பொருட்கள் வணிக மையம்

- தொழில் முனைவோருக்கான அலுவலக வசதி EDII திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது
- EDII திட்டத்திற்கான நிலையான முறைகளுக்கான ஏடு வெளியிடப்பட்டு உள்ளது
- துணைவேந்தர், த.நா.ஜெ.மீ.ப, நாகப்பட்டினம், கூடுதல் ஆட்சியர், தூத்துக்குடி, ஆராய்ச்சி இயக்குநர், த.நா.ஜெ.மீ.ப, நாகப்பட்டினம் மற்றும் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள தொடர்புடைய துறைகளைச் சேர்ந்த பிற அதிகாரிகள் முன்னிலையில் SOP (நிலையான இயக்க நடைமுறை) கையேடு கடல்சார் உணவுப் பொருட்கள் வணிக மையம், மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடியில் 29.01.2021 தேதியிட்ட கூட்டத்தில் வெளியிடப்பட்டது.
- மொத்தம் 13 பயனாளர்கள் பதிவு செய்துள்ளார்கள்
- மொத்தம் 21 IVP, EDII, சென்னைக்கு சமர்ப்பிக்கப்பட்டது
- மொத்தம் 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கல்லூரிகள் மற்றும் தொழிற்சாலைகளுடன் கையெழுத்திடப்பட்டுள்ளது
- மொத்தம் 8 விழிப்புணர்வு பயிற்சிகள் நடத்தப்பட்டது. இதில் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 700


Registration Certificate
Government of Tamil Nadu
Department
(Food Safety Wing)
Food Safety and Standards Authority of India
Registration Certificate under FSS Act, 2006

FSSAI பதிவு




SOP கையேடு



தொழில்முனைவோருக்கான கட்டிட தொடக்கவிழா




EDII-MPBIF சுய விவர கையேடு

**முதுகலை மாணவர் ஆராய்ச்சி – தூத்துக்குடியில் தரையிறக்கப்படும் மற்றும் விற்பனை செய்யப்படும் கடல் உணவுகளில் ஷிகா–டாக்ஸிஜெனிக் *எஸ்சொசியா கோலையை* கண்டறிதல் மற்றும் சிறப்பியல்புகளை ஆராய்தல்**

- இரண்டு மீன் தரையிரக்கும் இடம் (துறைமுகம், திரேஸ்புரம்) மற்றும் மீன் மார்க்கெட் (வ.உ.சி. மார்க்கெட், பூபாலராயபுரம்) ஆகிய இடங்களில் இருந்து பெறப்படும் மீன்களின் ஹெட்ரோ–ரோபிக் பாக்டீரியா எண்ணிக்கையை கணக்கிடப்பட்டது.
- தகுந்த சோதனைகள் மூலம் 305 *ஈ கோலைகளின்* மாதிரிகள் கண்டறியப்பட்டது. இதில் 279 *ஈ.கோலைகள்* அனுமான ஆண்டிபயாடிக் எதிர் புரதம் உற்பத்தி செய்கிறது என கண்டறியப்பட்டது. இந்த சோதனைக்கு 11 ஆண்டிபயாடிக்குகள் பயன்படுத்தபட்டுள்ளது.
- தகுந்த ஆய்வுமுறையின் மூலம் கடல் உணவுகளில் இருந்து ஷிகா நச்சு உற்பத்தி செய்யக்கூடிய தன்மை கொண்ட 22 பாக்டீரியாக்கள் அனுமானமாக கண்டறியப்பட்டுள்ளது. மேலும் ஷிகா நச்சு உற்பத்திக்கு காரணமான நான்கு மரபணுக்கள் ($stx_1$, $stx_2$, hlya, eae) உள்ளது உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

**முதுகலை மாணவர் ஆராய்ச்சி – தேர்ந்தெடுக்கப்பட்ட கடல்வாழ் மெல்லுடலிகள் இனங்களிலிருந்து மெலனின் மற்றும் மெலனின் இல்லாதமை (MFI) ஆகியவற்றின் ஆக்ஸிஜனேற்ற, பாக்டீரியா எதிர்ப்பு மற்றும் செயல்பாட்டு பண்புகள்**

- அல்ட்ராசென்ரிஃபியூஜ் பயன்படுத்தி மெலனின் மற்றும் மெலனின் இல்லாதமை (MFI) பிரிக்கப்பட்டன.
- MFI-க்காக புரத மதிப்பீடு செய்யப்பட்டது.
- அனைத்து மாதிரிகளுக்கும் DPPH மற்றும் உலோக அயனி கட்டுப்படுத்தும் திறன் போன்ற மதிப்பீடு கண்டறியப்பட்டது.
- மெலனின் மற்றும் MFI மாதிரிகளின் செயல்பாட்டுக் குழுக்களுக்கான FTIR பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.
- மீன் சதையோடு மெலனின் மற்றும் MFI சேர்க்கப்பட்டு TBARS மற்றும் பாக்டீரியாக்களின் அளவில் ஏற்படும் தாக்கம் கண்டறியப்பட்டது.
- மெலனின் மற்றும் MFI போன்றவை (1%, 5%, 10% மற்றும் 20%) விகிதத்தில் சேர்க்கும் போது பாக்டீரியா எதிர்ப்பு பண்புகளில் ஏற்படும் மாற்றம் கண்டறியப்பட்டது.



மெல்லுடலிகளிலிருந்து எடுக்கப்பட்ட மெலனின் இல்லாத மை

**முதுகலை மாணவர் ஆராய்ச்சி – கடல் சார்ந்த பயோபாலிமர்கள் மற்றும் உயிர் ஈர்ப்புப்பொருள் இருந்து உருவாக்கப்படும் செயற்கை மீன் இரையின் இயற்பியல் வேதியியல் தன்மையை ஆராய்தல்**

- மீன்கழிவுகளிலிருந்து பெறப்பட்ட மீன் ஜெலட்டினானது செயற்கை மீன் இரை கூழ்மத்தின் உற்பத்திக்கு மிகச்சிறப்பாகப் பயன்படுத்தப்படலாம் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.
- தூண்டிலுக்கான செயற்கை மீன் இரையை தயாரிப்பதற்காக கூழ்மங்கள் சேர்ப்பான்கள் மற்றும் கரைப்பான் அளவை மேம்படுத்த, ஆர்எஸ்எம் மென்பொருள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. செயற்கை மீன் இரையின் தன்மையை அறிய ஜெல்வலிமை மற்றும் கரையாத விகிதம் பகுப்பாய்வு செய்யப்பட்டது.
- மீன்கழிவுகள் (தலைகள், தோல்கள், துடுப்புகள் மற்றும் செதில்கள்) மற்றும் அதனுடன் தொடர்புடைய உடல் பாகங்களின் கழிவுகளிலிருந்து பெறப்பட்ட மீன் ஜெலட்டின் இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகள் ஆகியவற்றின் உயிர் வேதியியல் கலவை பகுப்பாய்வு செய்யப்பட்டது.
- அதிக மகசூல் (19.8–22.4%), சிறந்த ஜெல்வலிமை (1.99–2.3 நியூட்டன்), உயர் உருகும் வெப்பநிலை அளவு 27°செ) மற்றும் எளிய பிரித்தெடுத்தல் செயல்முறை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு செயற்கை மீன் தூண்டில் மேட்ரிக்ஸின் வளர்ச்சிக்கு ஜெலட்டின் அளவு தேர்ந்தெடுக்கப்பட்டது.

- அவை ஜெல்வலிமை 1.3–23.5% முதல், கரையாதவிகிதம் 55–83%, மற்றும் உருகும் வெப்பநிலை 34.3 செ –41.1 செ வரை இருப்பது கண்டறியப்பட்டது. தூண்டில் மேட்ரிக்ஸேத் தயாரிப்பதற்கான உகந்த அளவுகள் தரப்படுத்தப்பட்டன : ஜெலட்டின் – 25.5%, சுக்ரோஸ் – 22.5 % மற்றும் நீர் – 52 %.
- சிறந்த ஜெல் வலிமை (20.84 நீயூட்டன்), மற்றும் இரையின் கரையாத விகிதம் (74.5%) அடிப்படையில் உகுந்த வெப்பநிலை மற்றும் உகந்த கால அளவு 5°செ மற்றும் 25 மணி நேரம் என நிர்ணயப்படுத்தப்பட்டது. மீன் கழிவுகளிலிருந்து பெறப்பட்ட மீன் ஜெலட்டின் மூலம் செயற்கை மீன் இரையை தயாரிக்கலாம் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

### முதுகலை மாணவர் ஆராய்ச்சி –கடற்பாசி சார்ந்த தயாரிப்புகளின் வளர்ச்சிக்கு மேம்பட்ட செயலாக்க தொழில்நுட்பங்களின் பயன்பாடு

- கடற்பாசி சார்ந்த பொருட்களின் வளர்ச்சிக்கு கடற்பாசிகள் உறுதியான ஆதாரமாக இருப்பதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.
- மொத்தம் 14 கடற்பாசி இனங்கள் ஆய்வு நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டன. பல்வேறு கரைப்பான்கள் மற்றும் என்சைம் (என்சைமடிக் பிரித்தெடுத்தல்) ஆகியவற்றைப் பயன்படுத்தி கடற்பாசி பிரித்தெடுத்தல் 80% கரைப்பான் பிரித்தெடுத்தல் மற்ற செறிவுகளுடன் ஒப்பிடும் போது மிகவும் திறமையானதாக இருப்பதைக் குறிக்கிறது.
- எதிர் ஆக்ஸிஜனேற்ற மதிப்பீடுகள் மொத்த பீனாலிக் உள்ளடக்கம் 223.39 முதல் 1158.06 மிகி GAE / மாதிரி வரை வேறுபடுகின்றன. டிபிபிஹெச் மற்றும் ஏபிடிஎஸ் ஆகியவற்றிற்கான கட்டுபடுத்தும் திறன், முறையே 14.13–51.94 மற்றும் 20.27–93.08 ஆக இருப்பது தெரியவந்தது. வெவ்வேறு கடற்பாசி சாற்றில் FRAP –ன்முடிவுகள் ஏபிஎஸ் வரம்பு 0.14–0.40 @ 700 nm இருப்பதாகக் காட்டியது.
- மண்டபம் மற்றும் தூத்துக்குடி ஆகியவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட பல்வேறு கடற்பாசி இனங்களின் ஊட்டச்சத்து பதிவு செய்யப்பட்டது. ஹண்டர் கலர் மானியைப் பயன்படுத்தி கடற்பாசி மாதிரிகளின் வண்ண மதிப்பீடு மற்றும் ICP-OES ஐப் பயன்படுத்தி அடிப்படை பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.

### முதுகலை மாணவர் ஆராய்ச்சி – நுண்ணலை பதன முறையில் இறாலை *(மெட்டாபெனீஸ் டோப்சோனி)* உலர்த்துதல், மென்மைபடுத்துதல் மற்றும் உறைபதன மதிப்பீடு மற்றும் தர ஆய்வு

- காற்று, வெற்றிடம், எம்.ஏ.பி பேக்கேஜிங் மற்றும் சோஸ் வைட் தொழில்நுட்பத்தின் கீழ் இறால்களின் சேமிப்பு ஆயுட்காலம் மதிப்பிடப்பட்டது.
- புதிய உறைந்த மற்றும் உலர்ந்த இறால்களின் உயிர் வேதியியல், நுண்ணுயிரியல், புலன் சார்ந்த தரம் மதிப்பீடு செய்யப்பட்டது.
- உறைபதன் நீக்கு முறைக்கு உகந்த காற்று, நீர், குளிரூட்ட மற்றும் நுண்ணலை செயல்முறைகள் நிர்ணயிக்கப்பட்டது.
- வெவ்வேறு முறையில் உறைபதன நீக்கிய இறால்களின் ஜிட்டா ஆற்றல் மற்றும் துகள் அளவை பகுப்பாய்வு செய்யப்பட்டது.
- இறால்களின் உகந்த மென்மைப்படுத்தும் முறை நிர்ணயிக்கப்பட்டது .



மைக்ரோவேவில் உலர்த்தப்பட்ட இறால்



சூரிய ஒளியில் உலர்த்தப்பட்ட இறால்

### முதுகலை மாணவர் ஆராய்ச்சி – பிளாஸ்டிக் பொதிதலுக்கு மாற்றாக கைடோசன் மற்றும் கடற்பாசி பாலிசாக்கரைடுகளிலிருந்து மேம்படுத்தப்பட்ட மக்கும் பொதிதலை உருவாக்குதல்

- பாக்ஸ்– பெஹன்கென் மாதிரி முறையில் (அகார் (1.0–2.0% w / v), ஆல்ஜினேட் (1.0–2.0% w / v) மற்றும் கராஜீனன் (1.0–2.0% (w / v) மூன்று சுயாதீனமாறிலிகளின் செறிவு கணக்கிடப்பட்டது. கிளிசரால் ஒரு இளக்கியாக மொத்த திடபொருள் அளவுமாக (25% w / w ) மாறாமல் வைக்கப்பட்டது. சோதனை முடிவு ஒட்டு மொத்த விரும்பத்தக்க செயல்பாடு 99.78% முக்கியத்துவ மட்டத்தில் இருபடி மாதிரியுடன் பொருந்துகிறது. சோதனை மற்றும் கணிக்கப்பட்ட பதிலின் முழுமையான எஞ்சிய பிழையும் (1.04 முதல் 3.37ரூ) சரி பார்க்கப்பட்டது. கணிக்கப்பட்ட மொத்த பிரதிபலிப்பு – ஃபோரியர் டிரான்ஸ்ஃபார்ம் அகச்சிவப்பு நிறமாலை மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. இடைவினைகள் கலப்பு படத்தின் படிகத்தன்மையின் மாற்றம் எக்ஸ்ஆர்டி மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. அணு நுண்ணோக்கியின் முப்பரிமாண படம் 310nm என தெளிவுத்திறனில் இடை மூலக்கூறுகளின் அடுக்கைக்காட்டியது.

- கைட்டோசன் (1.0–2.0% (w/v), அகார் (1.0–2.0% (w/v) மற்றும் கிளிசரால் (0.1–0.5% (w/v) ஆகியவற்றின் செறிவுகளைக் கொண்டு மேம்படுத்தப்பட்ட பெஹன்கென் மாதிரி வடிவமைப்பு பயன்படுத்தப்பட்டது. அதிகபட்ச இழுவிசை வலிமை (12.21 Ma P), இடைவேளையில் நீட்சி (7.32%) மற்றும் துளை எதிர்ப்பு (16.18%) சோதனை கணிக்கப்பட்டது. கணிப்பிற்கும் சோதனைக்கும் இடையேயான பிழைகள் 1.24 முதல் 3.56% வரை ஏற்றுக் கொள்ளத்தக்க அளவுகளுக்குள் இருந்தன. கவனிக்கப்பட்ட மொத்த பிரதிபலிப்பு – ஃபோரியர்டிரான்ஸ்ஃபார்ம் அகச்சிவப்பு ஸ்பெக்ட்ரோஸ்கோபி, ஹைட்ராக்ஸேல் குழுமமான அகார் மற்றும் கிளிசரால் ஆகியவற்றுக்கு இடையிலான இடை–மூலக்கூறு அல்லாத ஹைட்ரஜன் பிணைப்பை கைட்டோசனின் அமினோ குழுவுடன் உறுதிப்படுத்தியது. பாலிசாக்கரைடுகளிடையே ஒரே மாதிரியான தொடர்பு காரணமாக கைட்டோசன், அகார் மற்றும் கிளிசரால் படம் அடுக்கு மென்மையான மேற்பரப்பு பண்புகளைக் கொண்டிருப்பதாக முப்பரிமாண அணு நுண்ணோக்கி படம் வெளிப்படுத்தியது.



8 வது நாளாக பிளாஸ்டக் மற்றும் அகார் அல்ஜினேட் கராஜீனனில் பையில் பொதிக்கப்பட்ட வஞ்சிர மீன் துண்டு

## 6. உயிரியல் தொழில் நுட்ப துறை

### DBT பயோடெக்னாலஜி துறை திட்டம் – மீன் எலும்புகளிலுள்ள பெப்டைடுகளின் எலும்பு திசு இழப்பின் மாற்றுதிறன் எதிர்பார்ப்பு பற்றிய ஆய்வு




CP சிகிச்சை அளிக்ப்பட்ட ஆஸ்டியோபிளாஸ்ட செல்களின் வேறுபாடுகள்

- 1, 30 கிலோ டால்டன் அளவுள்ள பெப்டைடுகள் கொலாஜன் ஹைட்ரோலைசேட்டிலிருந்து தயார் செய்யப்பட்டன.
- இந்த கொலாஜன் பெப்டைடுகள் 50 மற்றும் 100 டி.பி.எம் அளவுகளில் எலும்பு மஜ்ஜை செல் வளர்ப்பு ஊடகத்தில் சேர்க்கப்பட்டு செல்களின் வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்கள் கண்டறியப்பட்டன.




இணைக்கப்பட்ட CP சிகிச்சை ஆஸ்டியோபிளாஸ்ட செல்களின் எலும்பை கனிமமய மாக்கல்

### FSSAI திட்டம் – இந்திய கடற்கரையில் மீன் மற்றும் ஒட்டின மீன்களில் உள்ள கன உலோகங்களை கண்காணித்தல் மற்றும் தணிக்கும் நடவடிக்கைகள்

- கன உலோகங்கள் கொண்ட மீன்களை உண்பதால் மனிதனுக்கு ஏற்படும் இடர் விளைவுகளை தூத்துக்குடி பகுதி மக்களிடம் அளவிடப்பட்டது.
- பாறை நண்டுகளில் ஆர்சனிக் உலோகத்தின் தீங்கு அளவானது புற்றுநோய் உருவாக்கும் ஆபத்தை விட குறைவாக இருப்பது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டது.
- சாம்பல் மூங்கில் சுறாவை தொடர்ச்சியாக உண்பதால் அதில் உள்ள காட்மியத்தால் புற்று நோய் உருவாக்கும் ஆபத்து காரணி உள்ளது என கண்டறியப்பட்டது.

### முதுகலை மாணவர் ஆராய்ச்சி –மீன்களை கையாளும் சாதனங்களுடன் தொடர்புடைய பையோபிலிம் உருவாக்க வல்ல *சால்மோனெல்லா* மற்றும் பையோபிலிம் உருவாக காரணமான காரணிகள் பற்றிய பகுப்பாய்வு

- வெவ்வேறு வகையான கடல் உணவு கையாளும் சாதனங்களிலிருந்து மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட மாதிரிகளில் (92) இருந்து *சால்மோனெல்லா* பிரித்தெடுக்கப்பட்டது.
- சந்தேகத்திற்குரிய 34 *சால்மோனெல்லாக்*–களிலிருந்து 15 உறுதி செய்யப்பட்டது.
- இறுதியாக இவற்றுள் 3 மட்டுமே பயோபிலிம் உருவாக்குவதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.



மாதிரிகளை சேகரித்தல்



காங்கோ சிவப்பு அகாரில் சால்மோனெல்லாவை உருவாக்கும் பயோஃபில்மின் உருவக அமைப்பு

### முதுகலை மாணவர் ஆராய்ச்சி – தீபகற்ப இந்தியாவின் தென் கிழக்கு பகுதிகளில் வளர்க்கப்படும் இறால்களில் *(பினேயிஸ் வனாமி)* இரசாயன அசுத்தங்களின் பாதுகாப்பு மதிப்பீடு

- ராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் நாகப்பட்டிணம் ஆகிய இடங்களிலிருந்து இறால் பண்ணைகளின் நீர், மண், பரவு, இறால் மற்றும் இறால் தீவனம் ஆகியவை நவம்பர் முதல் பிப்ரவரி வரை எடுக்கப்பட்டது (குளிர் கால இறால் வளர்ப்பு). அறுவடைக்கு தயாரான அளவுள்ள இறால்கள் (p1 - 11) சேகரிக்கப்பட்டன.
- இறால் மாதிரிகள் பல்வேறு வெப்பநிலை செயலாக்க நிலைகளுக்கு உட்படுத்தப்பட்டு அதாவது கொதிக்க வைத்தல், பொறித்தல், வாட்டுதல் மற்றும் நுண்ணலை அடுப்பு சமையல் ஆகியவற்றின் மூலம் ஏற்படும் இரசாயன மாசுபடுத்திகளின் மாறுபாடுகளை பற்றி அறிந்து கொள்ளப்பட்டது.

### முதுகலை மாணவர் ஆராய்ச்சி – நுண்ணினைக்கப்பட்ட எதிர்ப்பு ஆஸ்டியோபோரேடிக் மீன் எலும்பு கொலாஜன் பெப்டைடுகளின் இயற்பியல் வேதியியல் மற்றும் செயல்பாட்டு பண்புகள்

- மீன் எலும்பு, 1% அல்கலேஸ் நொதியுடன் 55°செ வெப்பநிலையில் 3 மணி நேரத்தில் நீராற்பகுப்பு அடைந்து 8.66±0.4% அளவில் மீன் எலும்பு கொலாஜன் ஹைட்ரோலை சேட்டை கொடுத்தது. உறைய வைத்து உலர வைத்த மீன் எலும்பு கொலாஜன் ஹைட்ரோலைசேட் ஆனது வெளிர்மஞ்கள் நிறத்துடன், கசப்புடன் காணப்பட்டது.
- மீன் எலும்பு கொலாஜன் ஹைட்ரோலைசேட் மூலக்கூறு நிலையானது 1KDa க்கு கீழ் உள்ளது என்று டிரிசன் SDS-PAGE மூலம் கண்டறியப்பட்டது.
- மீன் எலும்பு கொலாஜன் ஹைட்ரோலைசேட்டின் அமினோ அமில விவரங்களை ஆராய்ந்த பொழுது, எட்டு அத்தியாவசியமான அமினோ அமிலங்கள் இருப்பது கண்டறியப்பட்டது இதில் ஹைட்ரோபுரோலின் (4.80கி/100கி), கிளைசின் (3.72கி/100கி) ஆகியவை முக்கியமான அமினோ அமிலங்கள். கால்சியம், மக்னிசியம், இரும்பு முறையே 13.9, 25.0 மற்றும் 0.7மிகி/100கி தாதுக்கள் மீன் எலும்பு கொலாஜன் ஹைட்ரோலைசேட்டில் காணப்பட்டன.
- போரியர் டிரான்ஸ்பார்ம் அகச்சிவப்பு ஸ்பெக்ட்ரோஸ்கோபி அலைக்கற்றை, அமைடு A முனை – 3398 செ. மீ$^{-1}$, அமைடு B முனை –2925 செ. மீ$^{-1}$, அமைடு I முனை –1656 செ.மீ$^{-1}$ மற்றும் அமைடு II முனை–1564 செ.மீ$^{-1}$ மீன் எலும்பு கொலாஜன் ஹைட்ரோலைசேட்டில் காட்டியது. இதில் IIIஅமைடு முனை காணப்படவில்லை. மீன் எலும்பு கொலாஜன் பெப்டைடுகளின் கசப்பு குறைக்கவும், நீர் உறிஞ்சும் தன்மையை குறைக்கவும் மற்றும் உறை பொதியாக்கம் செய்யவும் உதவுகிறது.
- எலிகளின் ஃபிரி – ஆஸ்டியோபிளாஸ்டு பெல் MC3T3-E1ன் ஆண்டி – ஆஸ்டியோபினாஸ்டு தன்மைகளை ஆராய்ந்ததில் SPI-ECP மற்றும் MAN-ECP நுண் மருந்துகள் செல் வளர்ச்சியை 100மிகி/ml தூண்டுகிறது. இது 72 வது நாளில் ஆஸ்டியோஜெனிக் மாறுபாடுகளையும் 14ம் நாளிய தாதுக்களின் மாறுபாடுகளையும் அதிகபடியான கார பாஸ்பேட்டுகளையும் காட்டுகிறது.
- SPI-ECPன் செயல்பாட்டு பண்புகளான அதிக புரத கரைதிரன், எண்ணெய் மற்றும் நல்ல குழம்பு திறன் மற்றும் நல்ல நுரைக்கும் தண்மையை பெற்றுள்ளன.
- இன்–விட்ரோ செறிமான ஆய்வுகள் பெப்சினை விட கணையம் ECPகளில் இருந்து கூடுதல் பெப்டைடுகள் வெளியிட்டு 58 முதல் 61% வரை குடல்களால் உறிஞ்சப்படுவது உறுதி செய்யப்பட்டது.




### முதுகலை மாணவர் ஆராய்ச்சி – தமிழ்நாட்டில் உள்ள வியாபார முக்கியத்துவமுள்ள மீன்களில் பிணைந்த மற்றும் பிணைப்பற்ற பார்மலின் மாசுபாடு பற்றிய பகுப்பாய்வு

- பார்மால்டிஹைடை கண்டறிவதற்கான UPLC குரோமட்டோகிரோபிக் முறையானது உருவாக்கப்பட்டது.

- இந்த முறை மூலம் மீன்களில் உள்ள பிணைந்த மற்றும் பிணைப்பற்ற பார்மால்டிஹைடு மீட்பு அளவானது முறையே 90.83 – 116.14% மற்றும் 87.76 – 132.96% ஆக இருந்தது.
- மீன் சந்தையில் சேகரிக்கப்பட்ட மீன்களில், ஊளியில் பார்மால்டிஹைடின் அளவு அதிகமாக இருந்தது. கடலோர பகுதிகளில் வாங்கப்பட்ட மீன்களை விட மற்ற இடங்களில் இருந்து பெறப்பட்ட மீன்களில் ஃபார்மால்டிஹைடின் அளவு அதிகமாக இருந்தது.
- பனிகட்டி இட்ட மற்றும் உறைந்த மீன்களின் சேமிப்பு காலத்தில் ஃபார்மால்டிஹைடின் அளவு அதிகரித்தது.
- வெவ்வேறு அளவு ஃபார்மால்டிஹைடை மீன்களில் செலுத்தி சோதனை செய்ததில் 8 முதல் 10% மீன்களில் சேர்ந்தன.
- நீரில் கழுவுதல் மூலம் 41% லிருந்து 60 வரையிலான ஃபார்மால்டிஹைடை நீக்க இயலும் என்பதும் கண்டறியப்பட்டது.



10 பி.பி.எம் அளவில் ஃபார்மால்ஹைட்டின் குரோமடோகிராஃப் வரைப்படம்

### முதுகலை மாணவர் ஆராய்ச்சி – வளர்ப்பு மற்றும் கடல் இறால்களில் டிரான்ஸ் கொழுப்பு பற்றிய ஆய்வு

- கடல் இறால்களில் கொழுப்பு அமிலங்களை ஆராய்ந்ததில் பலபடி நிறைவுறா கொழுப்பு அமிலங்கள் (PUFA) 38.74% இருந்து 42.15 லும், நிறைவுற்ற கொழுப்பு அமிலங்கள் (MUFA) 21.19% இருந்து 26.83% லும், இரண்டு டிரான்ஸ் கொழுப்பு அமிலங்கள், எலாடிக் அமிலம் மற்றும் பென்டாடிசினோயேட் அமிலம் (15:1) ஆகியவையும் காணப்பட்டன.
- இதேபோல் வளர்ப்பு இறாலில் PUFA 38.66% இருந்து 49.77% வரையிலும், SFA 28.04% இருந்து 83.12% வரையிலும், MUFA 16.30% இருந்து 22.56% வரையிலும், எலிடிக் அமிலம் மற்றும் பென்டாடி சினோயேட் ஆகியவை 9.74% இருந்து 15.16% பட்சத்தில் காணப்பட்டன.
- இறால் தீவனத்தில் PUFA 37.81% இருந்து 43.04% வரையிலும், SFA 27.99% இருந்து 34.32% வரையிலும், MUFA 22.93% இருந்து 27.01% வரையிலும் காணப்பட்டன.
- சராசரி TFA ஆனது கடல் இறாலில் 8.53±0.50 % மற்றும் வளர்ப்பு இறாலில் 12.30±1.70%ஆக காணப்பட்டது. இறால் தீவனத்தில் அதிகபடியான TFA காணப்பட்டது.
- TFAன் உயிர் குவிப்பு காரணியை கணக்கிடத்தில் 37-79%TFA தீவனத்திலிருந்து வளர்ப்பு இறாலின் உடலுக்குள் செல்கிறது. TLC தட்டுகளை பயன்படுத்தி இறால் கொழுப்புகளின் தன்மையை ஆராய்ந்ததில் பாஸ்போ கொழுப்பு அமிலங்கள், கொலஸ்ட்ரால், தனித்த கொழுப்பு அமிலங்கள் கொலஸ்டரால் எஸ்டர் ஆகியவை இருப்பது தெரியவந்தது. கொழுப்பு அமிலங்களின் தொகுப்பை கண்டறிய GC-FID பயன்படுத்தப்பட்டது. இதில் 59.8% TFA அதிகமாகவும் மற்றவை சற்று குறைவாகவும் காணப்பட்டது.



பண்ணை இறால்

### முதுகலை மாணவர் ஆராய்ச்சி – மீன் மற்றும் கணவாய் உணவு பொருட்களில் ஏற்படும் இறால் ட்ரோப்போமையோசின் குறுக்கு கலப்படத்தை பி.சி.ஆர் முறை மூலம் கண்டறிதல்

- இறால், மீன் மற்றும் கணவாய் மீன்களில் இருந்து மொத்த டி.என்.ஏ பிரித்தெடுக்கப்பட்டு அதன் அளவானது கணக்கிடப்பட்டது. பதனம் செய்யப்பட்ட மீன்களில், பதனிடாத மீன்களை விட குறைந்த அளவு டி.என்.ஏ இருப்பது கண்டறியப்பட்டது.
- பி.சி.ஆர் முறைக்கு மொத்தம் 8 பிரத்தியேக தொடங்கி புதிதாக வடிவமைக்கப்பட்டன. அவற்றில் ஒன்று மட்டும் ட்ரோப்போமையோசினை, தேர்ந்தெடுத்த நான்கு இறால்களிலும் *(பினேயஸ் வனாமி, பினேயஸ் மோனேடான், பெனிரோபினேயஸ் இன்டிகஸ், பெனிரோபினேயஸ் மொகுயன்ஸிஸ்)* கண்டறிந்தது. பி.சி.ஆர் மூலம் பெருக்கம் செய்யப்பட்ட டி.என்.ஏ துண்டுகளின் நீளமானது 327bp ஆக இருந்தது.

- நான்கு இறால்களிலும், இந்த பி.சி.ஆர் முறை சரியான அளவில் பெருக்கமடைந்ததுடன், வேறு எந்த இலக்கு இல்லா டி.என்.ஏ வையும் பெருக்கமடைய செய்யவில்லை.
- இந்த பி.சி.ஆர் முறையானது 6வித மீன் உணவு பொருட்களில் சோதனை செய்யப்பட்டு சரிபார்க்கப்பட்டது.




**இறால் தயாரிப்புகளில் உள்ள இறால் ட்ரோபோமயோசின் மரபணுவின் PCR பெருக்கம்**

Lane 1 - 50 bp DNA marker; Lanes 2 to 5 –*Penaeus monodon* (2 Raw, 3 Frozen, 4 Fried, 5 Cooked); Lanes 6 to 9 - *Penaeus vannamei* (6 Raw, 7 Frozen, 8 Fried, 9 Cooked); Lanes 10 to 13 - *Fenneropenaeus indicus*(10 Raw, 11 Frozen, 12 Fried, 13 Cooked); Lanes 14 to 17 - *Fennero penaeus merguiensis* (14 Raw, 15 Frozen, 16 Fried, 17 Cooked)

## 7. மீன்பிடித் தொழில் நுட்பவியல் மற்றும் மீன்வளப் பொறியியல் துறை

### தூத்துக்குடி கடற்கரை பகுதியில் மோட்டார் எஞ்சின் பொருத்தப்பட்ட மீன்பிடி படகுகளிலிருந்து வெளியேறும் $CO_2$ தொடர்பான ஆய்வு

- மொட்டகோபுரம் மீனவ கிராமத்தில் இயங்கும் சிறிய அளவிலான மோட்டார் இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிபடகுகள் 97,473 கி.கி. அளவில் கார்பன்டை ஆக்ஸைடை வெளியிடுகின்றது.
- மொட்டகோபுரம்மீனவகிராமத்தில்இயங்கும்நடுத்தர அளவிலான மோட்டார் இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிபடகுகள் 1,56,621 கி.கி. அளவில் கார்பன்டை ஆக்ஸைடை வெளியிடுகின்றது.
- மொட்டகோபுரம் மீனவ கிராமத்தில் இயங்கும் பெரிய அளவிலான மோட்டார் இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிபடகுகள் 3,74,785 கி.கி. அளவில் கார்பன்டை ஆக்ஸைடை வெளியிடுகின்றது.
- இனிகோ நகர் மீனவ கிராமத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான மீன்பிடிப் படகுகள் வெளியிடும் கார்ப்டை ஆக்சைசடுகளின் அளவுகள் முறையே 34,548 கிகி மற்றும் 7,07,314 கி.கி.
- இனிகோ நகர் மீனவ கிராமத்தில் பெரிய அளவிலான மீன்பிடிப் படகுகள் 2,94,541 கி.கி. அளவில் கார்பன்டை ஆக்சைடை வெளியேற்றுகிறது.



### முதுகலை மாணவர் ஆராய்ச்சி – தமிழகத்தின் ராமநாதபுரம் கடற்கரையில் நண்டு மீன்பிடித்தல் குறித்த ஆய்வு

- ராமநாதபுரம் கடற்கரையில் நண்டு மீன்பிடிப்பில் மீன்பிடி படகுகள் முறையே இழுவலை இயந்திரப்படகு (15 முதல் 20 மீ நீளம்), மோட்டார் பொருத்தப்பட்ட வள்ளம் (7.5 முதல் 8.5 மீ நீளம்), வெளிபொருத்து இன்ஜின் பொருத்தப்பட்ட கண்ணாடி நார்இழை படகு (7.3 முதல் 9.7 மீ நீளம்) மற்றும் பாரம்பரிய வத்தை படகு (4.4 முதல் 5.5 மீ நீளம்) போன்றவை ஈடுபடுத்தப்படுகின்றன.
- மீன்பிடி வலைகளான இழுவலை (குூர்பகுதி கண்ணி அளவு 20 மிமீ), அடிமட்ட செவுள் வலை (கண்ணி அளவு 8 முதல் 110 மி.மீ) மற்றும் தள்ளுமடி (குூர்பகுதி கண்ணிஅளவு 18 முதல் 20 மி.மீ) ஆகியவைகள் ராமநாதபுரம் கடற்பகுதியில் நண்டு பிடிக்க பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
- நான்கு வகையான மீன்பிடி வலைகளில், அடிமட்ட செவுள் வலை மட்டுமே நண்டு பிடிப்பைக் குறிக்கோளாகக் கொண்டு ராமநாதபுரம் கடற்பகுதியில் மீனவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.
- மன்னார் வளைகுடா பகுதியில் *போர்டுனஸ் பெலாஜிகஸ், போ. சங்கியூனோலென்ட்சஸ்* மற்றும் *க. நட்டேட்டர்* போன்ற நண்டுகளும், பாக் வளைகுடா கடற்பகுதியில் *பி. பெலாஜிகஸ்* நண்டும் மீன்பிடிப்பில் பெரும்பங்கு வகிக்கின்றன.
- ராமநாதபுரம் கடற்கரையில் மொத்த நண்டு உற்பத்தி 2019 நவம்பர் முதல் 2020 அக்டோபர் வரை 1083.11 டன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் பாக் வளைகுடா, 551.078 டன் (50.88%) மற்றும் மன்னார் வளைகுடா, 532.032 டன் (49.12%) பங்கு வகித்தன.
- மன்னார் வளைகுடா பகுதியில் மொத்த நண்டு உற்பத்தி 532.032 டன் ஆகும். அதில் *போ. பெலாஜிகஸ்* 81.37%, *போ. சங்கியூனோலென்ட்ஸ்* 7.95% மற்றும் *க. நட்டேட்டார்* 10.67% ஆகும்.







## 8. மீன்வள விரிவாக்கம், பொருளியியல் மற்றும் புள்ளியியல் துறை

### முதுகலை மாணவர் ஆராய்ச்சி – மீன்வளர்ப்பு தொழில் –நுட்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான விரிவாக்க சேவைகள்: மேற்கு வங்கத்தின் வடக்கு பிராந்தியத்தில் உள்ள மீன் விவசாயிகளின் வாழ்வாதார வாய்ப்புகள் குறித்த ஆய்வு

- மீன்வளர்ப்பு தொழில்நுட்பங்களின் அறிவு மற்றும் தத்தெடுப்பு, தற்போதைய மீன்வளர்ப்பு மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகள், பொருத்தமான நீட்டிப்பு சேவைகள் மற்றும் மீன்வளர்ப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாடு மற்றும் மீன் விவசாயிகளின் தடைகள், வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை பரிந்துரைத்தல் ஆகியவற்றை ஆய்வு செய்வதற்காக இந்த ஆய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.
- பெருமளவு மீன் விவசாயிகள் (70%) ஒரு நடுத்தர அறிவு அளவைக் கொண்டிருந்தனர். சுமார் 29.40% மீன் விவசாயிகள் மீன்வளர்ப்பு தொழில்நுட்பங்களை நன்கு அறிந்திருந்தனர். பதிலளித்தவர்களில் கிட்டத்தட்ட ஐம்பது சதவீதம் பேர் (48.13%) மீன்வளர்ப்பு தொழில்நுட்பங்களை நடுத்தர அளவில் பின்பற்றினர். 31.87 சதவீதம் பேர் குறைந்த அளவிலான தத்தெடுப்பைக் கொண்டிருந்தனர்.
- 43.75% பேர் வாத்து மற்றும் மீன் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். சுமார் 50.00% மீன் விவசாயிகள் மீன் பிடிப்பில் ஈடுபட்டுள்ளனர்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட விரிவாக்கச் சேவைகள் மீன்வளர்ப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்கு ஏற்றவை என்று மீன் விவசாயிகளில் ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமானோர் தெரிவித்தனர். ஒட்டுமொத்தமாக, 24.94, 35.11 மற்றும் 39.95 % மீன் விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட விரிவாக்க முறைகளான தனிநபர், குழு மற்றும் வெகுஜன முறையே மிகவும் பொருத்தமானவை எனக் கண்டறிந்தனர்.
- தரமான தீவனம் கிடைக்காதது முக்கிய தடை (91.25%), மீன் தீவனத்தின் அதிக விலை (88.75%), தரமான மீன்குஞ்சுகள் குறைவாக கிடைப்பது (82.50%), தீவன போக்குவரத்தில் சிரமங்கள் (75.63%), பொரிப்பகங்கள் கிடைக்காதது (73.75%), சந்தைப்படுத்த வசதிகள் இல்லாதது (71.25%), பற்றாக்குறை நிதி உதவி மற்றும் மானியங்கள் (68.13%), மனிதவள பற்றாக்குறை (64.37%) மற்றும் தீவன ஆலைகளின் பற்றாக்குறை (61.25%) ஆகியவை மீன் விவசாயிகளால் அறிவிக்கப்பட்ட முக்கியக் குறைபாடுகள்.





### முதுகலை மாணவர் ஆராய்ச்சி – நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள இறால் பண்ணையாளர்களின் நிர்வாக செயல்திறனை பாதிக்கும் முக்கியமானக் காரணிகளின் பகுப்பாய்வு

- ஆய்வில் பெரும்பாலான இறால் வளர்ப்போர் நடுத்தர வயது மற்றும் நடுத்தர பண்ணை அனுபவம் உள்ளவர்களாக அறியப்பட்டது.
- இறால் பண்ணையாளர்களின் ஒட்டு மொத்த நிர்வாக செயல்திறனை பொருத்தவரை 72.67 % பேர் நடுத்தர நிர்வாக செயல் திறன் கொண்டுள்ளன.
- இறால் பண்ணையாளர்களிடையே உள்ள ஒட்டு மொத்த நிர்வாக திறன் இடைவெளி 27.33% என்று கண்டறியப்பட்டுள்ளது.
- இறால் பண்ணையாளர்கள் பண்ணை மேலாண்மை நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக வழங்கிய ஆலோசனைகள் : ஒவ்வொரு மாவட்டத்திலும் நோய் கண்டறியும் மையத்தை அமல்படுத்துதல், மாநில மீன்வளத்துறையால் நிர்ணயிக்கப்பட்ட நிலையான சந்தை விலையை நிறுவுதல் மற்றும் ஊடக வழியாக சந்தை விலையின் தகவலை பரப்புதல், மாநில மீன்வளத்துறையால் மீன்குஞ்சுகளின் சான்றளிக்கும் முகமை அமைத்தல், தீவன செலவு கட்டுப்படுத்துதல், மின்சாரம் சலுகை, படித்தவர்கள் இறால் வளர்ப்பில் ஈடுபடுதல், மீன்வளத்துறையில்

வானிலை அறிவிப்பை முன்னறிவித்தல், அரசாங்கத்தின் ஆதரவு, கடன் மற்றும் காப்பீட்டு வசதியை ஏற்படுத்துதல்.




**முதுகலை மாணவர் ஆராய்ச்சி – மணிப்பூர் மாநிலத்தி–லுள்ள நன்னீர் மீன்வளர்ப்பியலின் பொருளாதாரம் மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்த திறனாய்வு**

- ஆய்வு மேற்கொள்ளப்பட்ட மணிப்பூர் மாநிலத்தில், 96.7% நன்னீர் மீன்வளர்ப்போர் ஆண்களாகவும் அவர்களின் தொழில் அனுபவம் சராசரி 12 ஆண்டுகளாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. 70% மீன்வளர்ப்போர் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பிரிவினை சார்ந்தவர்களாகவும், 66.7% மீட்டேய் மற்றும் 33.3% மீன்வளர்ப்போர் தங்கூல் இனத்தை சார்ந்தவர்களாவும் உள்ளனர்.
- 88.9% மீன்வளர்ப்போர் மீன்வளர்ப்பையும், 2.2% வேளாண்மையையும், 8.9% மீன்வளர்ப்போர் பிற தொழில்களை முதன்மை தொழிலாக பின்பற்றுவதாக கண்டறியப்பட்டது. ஆய்வு மேற்கொள்ளப்பட்டட மீன்வளர்ப்போரில் 33.3% மக்கள், மீன்வளர்ப்போர் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.
- அனைத்து மீன்வளர்ப்போரும் (100%) கோடை காலங்களில் மித செறிவான முறையைப் பின்பற்றி ஆண்டிற்கு ஒரு மகசூலை / அறுவடையை (77.8%) மேற்கொள்கின்றனர்.
- பும்முடி மீன் வளர்ப்பு முறையை பின்பற்றி அனைத்து மீன்வளர்ப்போரும் (10 எண்ணம்) லோக்டாக் ஏரியில் மீன்வளர்ப்பை மேற்கொள்கின்றனர். ஆறு, மழை மற்றும் ஓடையை ஆதாரமாக வைத்து 38.7% மற்றும் 28.7% மீன்வளர்ப்போர் மீன்வளர்ப்பை மேற்கொள்வதாக கண்டறியப்பட்டது.
- சந்தைப்படுத்துதலுக்கான இலாபம் மொத்த வியாபாரிகளை (ரூ.17.54/கிலோ) விட சில்லறை வியாபாரிகளுக்கு (ரூ. 13.94/கிலோ) குறைவாகவே உள்ளது.
- சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் இல்லாமை, அரசு உதவியின்மை, மீன்களுக்கு குறைந்த விலை கிடைத்தல், வளங்களை முறையாகப் பயன்படுத்தாத நிலை மற்றும் மீன்வளர்ப்பு குறித்து அறிவின்மை முதலியவை நன்னீர் மீன்வளர்பபை மேற்கொள்வதில் ஏற்படும் தடைகளாகக் கண்டறியப்பட்டுள்ளன.



ஊக்ருல் மாவட்டத்தில் உள்ள மீன் பண்ணையாளரிடமிருந்து முதன்மை தரவு சேகரிப்பு



லோக்தக் ஏரி

**டாக்டர். எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரி**

**1. மீன் வளர்ப்பு துறை**

**தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் – குறைந்த நீர் கொண்டு வருமானத்தை இரட்டிப்பாக்க மறுசுழற்சி முறையில் வளர்ப்பு தொழில்நுட்ப பூங்கா நிறுவுதல்**

- மாதவரத்தில் அமையப்பெற்றுள்ள மேம்பட்ட ஆராய்ச்சி பண்னை வசதி மையத்தில் மூன்று மறுசுழற்சி மீன்வளர்ப்பு அலகுகள் நிறுவப்பட்டுள்ளன.
- மறுசுழற்சி மீன் வளர்ப்பு அமைப்பில் ஒரு கன மீட்டருக்கு 4 கிலோ என்ற அளவில் ஆசிய கொடுவா மீன்களின் இருப்படர்த்தி தரப்படுத்தப்பட்டது.




**முதுகலை மாணவர் ஆராய்ச்சி – உயிர்க்கூழ்மத்துகளின் உணவூட்டம் மூலம் வெள்ளைக்கால் இறாலின் வளர்ச்சி, செரிமான நொதியின் செயல்திறன் மற்றும் நோயெதிர்ப்பு திறனில் மறுசுழற்சி மீன்வளர்ப்பு அமைப்பில் ஏற்படும் விளைவை கண்டறிதல்**

- கார்பன் மூலதனமாக 20:1 (C:N) வெல்லத்தை பயன்படுத்தி உயிர்க்கூழ்மமானது வெளிப்புற உற்பத்தி தொட்டிகளில் பெருக்கப்பட்டது. அவ்வாறு பெருக்கப்பட்ட உயிர்க்கூழ்மமானது அறுவடை செய்யப்பட்டு முறையான செயலாக்கத்திற்கு பின் இறால் ஆய்வு உணவில் வெவ்வேறு செறிவுகளில் 5%(T1), 10% (T2), 15% (T3), 20% (T4) மற்றும் 0% (C) சேர்க்கப்பட்டு இறால் தீவனம் தயார் செய்யப்பட்டது.
- மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவில் வெவ்வேறு உயிர்க்கூழ்ம செறிவூட்ட உணவு மற்றும்

கட்டுப்பாட்டு உணவைக் காட்டிலும் T3–ல் வெள்ளைக்கால் இறாலின் சராசரி மொத்த இடை (9.44 ± 0.03கி), புரதசெறிவு விகிதம் (0.264± 0.01), உணவு செறிவு விகிதம் (0.56 ± 0.03), உணவு மாற்று விகிதம் (1.76 ± 0.01) மற்றும் அதிக பிழைப்புத் திறனைக் (80.83%) கொண்டிருந்தது.

- T3 சிகிச்சை உணவு அளிக்கப்பட்ட இறாலின் குடல் பகுதி செரிமான நொதியின் குறிப்பிட்ட செயல்பாடுகள் முறையே அமைலேஸ் (393.65 ± 6.11), புரோட்டியேஸ் (885.78 ± 27.38) மற்றும் லைப்பேஸ் (970.69 ± 1.05) என்று பதிவு செய்யப்பட்டது.
- தற்போதைய ஆய்வின் கண்டுப்பிடிப்புகளின் மூலம் 15% செறிவூட்டப்பட்ட உயிர்க்கூழ்ம உணவானது அதிக வளர்ச்சி செயல்திறன், அதிக பிழைப்புத் திறன், மேம்பட்ட செறிமான நொதி செயல்பாடு மற்றும் சிறந்த நோய் எதிர்ப்புத்திறனையும் கொண்டுள்ளது என அறியப்பட்டது.



உயிர்கூழ்ம உருவாக்கம்



உயிர்கூழ்ம சேகரிப்பு



மறுசுழற்ச்சி சோதனை அமைப்பு



மாதிரி

### 2. மீன் பதன தொழிற்நுட்பத் துறை

**தேசிய வேளாண் மேம்பாட்டு திட்டம்– கயலகம்: தமிழ்நாட்டில் மதிப்பூட்டப்பட்ட மீன் பொருட்களின் சந்தைப்படுத்துதலை அதிகரிப்பதற்கான ஓர் எதிர்கால விற்பனை அங்காடி நிலையம்**

**செயல்பாடுகள்:**

மாதவரத்திலுள்ள தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சில்லறை விற்பனை நிலையமான கயலகம் கட்டுமானப்பணிகள் நிறைவடைந்து 21.01.2021 அன்று பல்கலைக்கழகத்தின் மரியாதைக்குரிய துணைவேந்தர் பேராசிரியர் கோ. சுகுமார் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.






தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு இயக்ககம், தஞ்சாவூரில் விற்பனை அங்காடியான கயலகம் கட்டுமானப்பணிகள் நிறைவடைந்து, 24.02.2021 அன்று தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் மரியாதைக்குரிய துணைவேந்தர் பேராசிரியர் கோ.சுகுமார் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.





மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடியில் புதியதோர் தொழில் முனைவோருக்கான மீன் பதன தொழில்நுட்ப கூடம் கட்டுமானப்பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் கொண்டு வரப்பட்டது.





மீன் தரபரிசோதனை ஆய்வகம், டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரியில் கட்டி முடிக்கப்பட்டது.



**முதுகலை மாணவர் ஆராய்ச்சி : ஓமிக் ஹீட்டர் கருவியினை கொண்டு பச்சை மட்டியினை பதப்படுத்துதல் பற்றிய ஆய்வு**

- ஆய்வக அளவிலான ஓமிக் ஹீட்டர், ஒரு லிட்டர் அளவு கொண்ட துருப்பிடிக்காத எஃகினாலான உருளை வடிவ கலத்தினைப் பயன்படுத்தி, ஒரு ஜோடி டைட்டானியம் மின்முனைகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ஓமிக் ஹீட்டர் மூலம் பச்சை மட்டி இறைச்சியை பல்வேறு மின்னழுத்தம் மற்றும் வெப்பப்படுத்தும் செயல்முறையின் கால அளவு மூலம் பதப்படுத்தப்பட்டது.
- பதப்படுத்தப்பட்ட மட்டி இறைச்சியானது, நுகர்வுக்கு பயன்படுத்தும் முன் பல்வேறு தர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.
- மட்டி இறைச்சி 5 நிமிடங்களுக்கு 120 வோல்ட் மின்னழுத்தத்தில் ஓமிக் ஹீட்டர் மூலம் பதப்படுத்தப்படுத்தும் பொழுது ஊட்டச்சத்துக்களை தக்கவைத்துக் கொண்டிருப்பது கண்டறியப்பட்டது.



ஓமிக் ஹீட்டர் கருவி



ஓமிக் ஹீட்டரில் பதப்படுத்தப்பட்ட 3% மற்றும் 5% உப்பு நீரில் பச்சை மட்டி சதை

**முதுகலை மாணவர் ஆராய்ச்சி – RSM முறையைப் பயன்படுத்தி பீலிக் கணவாய் மற்றும் சிறு தானியங்கள் சேர்க்கப்பட்ட சிற்றுண்டி தயாரித்தல் மற்றும் செயல்முறை மேம்படுத்துதல்**

- உகந்த செயலாக்க ஹீட்டர் 1 வெப்பநிலை 130° செ ஹீட்டர், 2 வெப்பநிலை 64°செ, திருகு வேகம் 317 rpm மற்றும் கணவாய் மாவு 6.5% சேர்த்தல் என தீர்மானிக்கப்பட்டது.
- கணவாய் மற்றும் சிறு தானியங்கள் சேர்க்கப்பட்ட சிற்றுண்டியில் அத்தியாவசிய அமினோஅமிலம் 141.30% அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது. புரதமானது, கணவாய் மற்றும் சிறு தானியங்களில் சேர்க்கப்படாதா சிற்றுண்டியை விட 117.36% அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது.
- அத்தியாவசிய கொழுப்பு அமிலங்கள் கணவாய் மற்றும் சிறு தானியங்கள் சேர்க்கப்பட்ட சிற்றுண்டியில் 34.73% அதிகமாக காணப்பட்டது.
- கணவாய் மற்றும் சிறு தானியங்கள் சேர்க்கப்பட்ட சிற்றுண்டியில் இரும்புச் சத்து 41.26%, மெக்னீசியம் 125.51% மற்றும் துத்தநாகம் 47.2% அதிகமாக இருந்தது.
- கணவாய் மற்றும் சிறு தானியங்கள் சேர்க்கப்பட்ட சிற்றுண்டியில் 117.36% புரதம், 22.29% கொழுப்பு மற்றும் 23.36 % சாம்பல், கணவாய் மற்றும் சிறு தானியங்கள் சேர்க்கப்படாதா சிற்றுண்டியை விட அதிகமாக இருந்தது.



கணவாய் மற்றும் சிறு தானியங்கள் சேர்க்கப்பட்ட சிற்றுண்டி

## 3. நீர் சூழலியல் மேலாண்மைத் துறை

**தமிழ்நாடு அரசின் புதுமையான திட்டம் – செயற்கை பவளப்பாறைகள் மற்றும் மீன்களை திரட்டும் செயற்கை பாறைகளை பழவேற்காடு ஏரிக்கு அருகில் உள்ள கடற்பகுதியில் நிறுவுவதன் மூலம் மீன்களின் இருப்பளவை அதிகரித்து பழவேற்காடு மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்**

- பழவேற்காடு பகுதியில் கிடைக்கக்கூடிய மீன் வகைகள் மற்றும் அங்குள்ள பல்வேறு உயிரினங்களின் இருப்பு பற்றிய அடிப்படைத் தகவல்களை சேகரிக்க ஆரம்பக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த கணக்கெடுப்பானது மீனவர்களிடம் இருந்து நேரடி கேள்விகள் மூலம் எடுக்கப்பட்டது.
- செயற்கை பவளப்பாறைகள் நிறுவப்படும் கடலடிப் பகுதிகளின் இயற்பியல் வேதியியல் பண்புகளை அறிய வேண்டி நீர் மற்றம் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன.
- SCUBA மூலம் நீருக்கடியில் புகைப்படங்கள் மற்றும் காணொலி பதிவுகள் எடுக்கப்பட்டன. இதன் வாயிலாக இப்பகுதியில் ஒரு சில மெல்லுடளிகள் மட்டுமே எல்லா தளங்களிலும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.



மாதிரிகள் சேகரிப்பு

**முதுகலை மாணவர் ஆராய்ச்சி – எண்ணூர் பகுதியின் சதுப்பு நிலங்களில் உள்ள நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸ் திரட்டும் நுண்ணுயிரிகளை பிரித்தெடுத்தல் மற்றும் ஊட்டச்சத்து சுழற்சியில் அவற்றின் பங்கு**

- PPBயில் 16 பாக்டீரியாக்கள், PSBயில் 9 பாக்டீரியாக்கள், AOBயில் 19 பாக்டடீரியாக்கள் மற்றும் NOBயில் 14 பாக்டடீரியாக்கள் பராமரிக்கப்படுகின்றன.
- PPBயில் பராமரிக்கப்பட்ட பாக்டீரியாக்களின் அல்கலைன் பாஸ்படேஸ் செயல்பாடு மதிப்பிடப்–பட்டது மற்றும் அவை சுற்றுச்சூழல் தரத்தினை மேம்படுத்தும் என்று கண்டறியப்பட்டுள்ளது.
- பாக்டீரியாக்களின் நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸ் திரட்டும் செயல்திறன் ஆய்வு செய்யப்பட்டது.



PSB பாக்டடீரியாக்கள்



PPB பாக்டடீரியாக்கள்



அம்மோனியா அகற்றும் திறன்



நைட்ரைட் அகற்றும் திறன்

**முதுகலை மாணவர் ஆராய்ச்சி–மீன் கழிவுகள் மற்றும் கடற்பாசி திரவத்தை கரிம கலவையாக பயன்படுத்தி நுண்பாசி வளர்ப்பு மற்றும் கார்பன் தேக்கத்தினை கண்டறியும் ஆய்வு**

- *குளோரெல்லா* மற்றும் *ஸ்பைருலினாவின்* தூய தாய்பாசி திரவம் ஆய்வகத்தில் பராமரிக்கப் பட்டு வருகிறது.
- மீன் கழிவுகள் சேகரிக்கப்பட்டு அவை நான்கு விதமாக மீன் திரவ உரங்களாக தயாரிக்கப்–பட்டுள்ளது.
- கடற்பாசிகளில் இருந்து இரண்டு விதமான கடற்பாசி திரவ உரங்கள் தயாரிக்கப்பட்டன.
- இந்த உரங்களின் உயிர் வேதியியல் பண்பு பகுப்பாய்வு செய்யப்பட்டது.



மீன் திரவ உரம்



கடற்பாசி திரவ உரம்

**முதுகலை மாணவர் ஆராய்ச்சி – நுண்பாசியின் (*குளோரெல்லா மற்றும் செனிடெஸ்மஸ்*) கார்பன்–டை–ஆக்சைடு உறிஞ்சும் திறனை ஒப்பிடுதல் மற்றும் உண்ணக் கூடிய கொழுப்பினை பிரித்தெடுத்தல்**

- *குளோரெல்லாவின்* தூய பாசி திரவம் 50 மிலி சோதனை குழாய், 250 மிலி மற்றும் 2லி குடுவைகளில் சிறிய அளவில் வளர்க்கப்பட்டது.
- *குளோரெல்லா* பாசிவகையின் கார்பன்–டை–ஆக்சைடு உறிஞ்சும் திறன் ஒளி மற்றும் இருள் குப்பி முறை மூலம் மதிப்பிடப்பட்டது.
- FRP தொட்டிகளின் PVC குழாய்கள் மற்றும் காற்றுப் புகுத்திகள் நீர் சுழற்சிக்காக பொருத்தப்பட்டுள்ளது.
- *குளோரெல்லாவின்* அடர்த்தியானது 20 வது நாளில் $23x10^4$ செல்கள்/மிலி என்ற அளவிலும் மற்றும் மொத்த கார்பன் உற்பத்தி திறன் 20 வது நாளில் ஒரு மணி நேரத்திற்கு 82.45 $mg/c/m^3$ என்ற அளவிலும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது



குளோரெல்லா தூய பாசி திரவம்

## 4. மீன்வள மேலாண்மைத் துறை

**முதுகலை மாணவர் ஆராய்ச்சி–தமிழ்நாட்டின் கோர மண்டல பகுதியில் உள்ள குருத்தெலும்பு மீன்களின் பல்லுயிர் பரவல், மற்றும் மீன்பிடிப்பு பற்றிய ஆய்வு**

- ராயபுரம், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மீன்பிடி தளங்களிலிருந்து பல்வேறு குறுத்தெலும்பு மீன் இனங்கள் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை

சேகரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டன. 21 குடும்பங்களைச் சார்ந்த மொத்தம் 67 வகையான சிற்றின குருத்தெலும்பு மீன்கள் பதிவு செய்யப் பட்டது.

- அதிகபட்சமாக ராயபுரத்தில் 67 வகை சிற்றினங்களும், நாகபட்டினத்தில் 44 மற்றும் கடலூரில் 43 சிற்றினங்களும் பதிவு செய்யப்பட்டது.
- ஷானோன் வீனர் பன்முகத்தன்மை குறியீடு (H) மற்றும் மார்கலேஃவ் இனங்கள் செழுமை (d) முறையே காணப்பட்டது. அவை, ராயபுரம்– 4.16 மற்றும் 8.08; கடலூர்– 4.10 மற்றும் 5.91 நாகபட்டினம்–3.73 மற்றும் 5.47 ஆகும்
- D இன் மதிப்பு அதிகபட்சமாக பருவ மழையின் போதும் (7.96) மற்றும் குறைவாக கோடைக் காலத்தில் (5.38) காணப்பட்டது.
- இனங்களின் பன்முகத்தன்மை குறியீட்டின் மதிப்பு அதிகபட்சமாக நாகபட்டினம் (63.62) மற்றும் ராயபுரத்தில் (62.56) காணப்பட்டது.



தமிழ்நாட்டின் கோரமண்டல பகுதியில் உள்ள குருத்தெலும்பு மீன்களின் பல்லுயிர் பரவல், மற்றும் மீன்பிடிப்பு பற்றிய ஆய்வு



கற்காரினஸ் அல்டினஸ் சுறா மீன்

**முதுகலை மாணவர் ஆராய்ச்சி – சென்னை கடற்கரை பகுதியில் இழுவை வலையில் கிடைக்கும் கலசை ஒட்டு மீன்களை மதிப்பீடு செய்தல்**

- ஒட்டு மீன்களின் மாதிரிகள் இரண்டு வாரத்திற்கு ஒரு முறை ராயபுரம் மீன்பிடி தளத்தில் இருந்து சேகரிக்கப்பட்டன.
- இந்த ஆய்வில், மொத்தம் 61 குடும்பம் 100 பேரினங்களைச் சார்ந்த சிற்றினங்கள் பதிவு செய்யப்பட்டது.
- இவற்றுள் டெக்கப்போட் 35%, நியொகேஸ்ட்ரோபோட் 18.10% (24 சிற்றினம்) லிட்டோனிமார்போ (14 %, 20 சிற்றினங்கள்), வெனிரிடே (8%,11 சிற்றினம்), அர்சிடே 5% (6 சிற்றினம்), கார்டிடே 5%, 7 சிற்றினம்) மற்றும் ஸ்டோமேட்டோபோடா 4.5 % (6 சிற்றினம்) என்ற அளவில் பதிவு செய்யப்பட்டது.
- செப்டம்பர் மாதத்தில் அதிக சிற்றின வகைகள் பதிவு செய்யப்பட்டன மற்றும் ஏப்ரல் மாதம் குறைந்த சிற்றின வகைகள் பதிவு செய்யப்ட்டது.
- பாதுகாக்கப்பட வேண்டிய சிற்றினமான ப்ளக்குனா ப்ளசன்டா காசிமேடு மீன் சந்தையில் பதிவு செய்யப்பட்டது.



ஒட்டு மீன்களின் மாதிரிகள் ராயபுரம் மீன்பிடி தளத்தில் இருந்து சேகரிக்கப்ட்டன

## 5. நீர்வாழ் உயிரின நல மேலாண்மைத் துறை

**முதுகலை மாணவர் ஆராய்ச்சி – ஆராய்ச்சிக்கென *சிவனெல்லா புட்ரிபேசியன்ஸ்* பாக்டீரியாவினால் நோய் ஏற்படுத்தப்பட்ட *ஓரியோகுரோமிஸ் நைலோட்க்கஸ்* மீன்களில் நோய்த்தாக்கம் மற்றும் நோய் எதிர்ப்புத்திறன்**

- *ஓரியோகுரோமிஸ் நைலோட்டிகஸ்* திலேப்பிய மீன்களில் சி *"வனெல்லா புட்ரிபேசியன்ஸ்* பாக்டீரியா நோய் தாக்குதலால் திசுத்துயரியல் குருதிக் காரணிகள் மற்றும் நோயெதிர்ப்புத் திறனில் மாற்றம் ஏற்பட்டன



பாக்டீரியா தனிமைப்படுத்துதல்



$H_2S$ உற்பத்தி



பி.சி.ஆர் சோதனை



பரிசோதனை தொற்று

**முதுகலை மாணவர் ஆராய்ச்சி – *பினேயஸ் வனாமி* இறால்களில் இறால்களை மைக்ரோஸ்பொரிடியாசிஸ் நோய் ஏற்படுத்தும் என்டிரோசைட்டோசோவன் ஹெப்பட்டோபினேயினை அறிதல், கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் இறால்களில் நோய் எதிர்ப்புத் தன்மை பற்றிய ஆய்வு**

- ஹெப்பாட்டோபினேயி நோய் ஏற்படுத்தப்பட்ட 24 மணிநேரத்தில் *பி. வனாமி* இறால்களில் நோய் தொற்று ஏற்பட்டது, முதல்நிலை பிசிஆர் முறையில் அறியப்பட்டது.

- நோயுற்ற இறால்களில் நோய் எதிர்ப்புத்தன்மை வெகுவாக குறைந்தது.
- அல்பன்டசோல் (1,5,10,25,50,75 மற்றும் 100 மிகி/லி) தரப்பட்ட இறால்களில் நோய்க்காரணியின் டி.என்.ஏ எண்ணிக்கையானது 100 மற்றும் 75 மிகி/லி அல்பண்டசோல் அளவுகளில் வெகுவாகக் குறைந்தது. 100 மிகி/லி அளவில் இறால்களின் செயல்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டதால் 75 மிகி/லி அல்பன்டசோல் பயன்பாடு இறால்களில் நோய்த்தாக்கத்தை குறைக்கும் என அறியப்படுகிறது.



பெனாயஸ் வன்னாமி



பரிசோதனை தொற்று

**டாக்டர். எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தலைஞாயிறு**

**மீன் பதனத் தொழில் நுட்பத் துறை**

**டி.எஸ்.டி. எஸ்இஆர்பி திட்டம் – காலநிலை மாற்றத்தின் விளைவாக கடல் உணவின் பாதுகாப்பில் நச்சு நுண்ணுயிரி *விப்ரியோ வல்னிஃபிகஸின்* மறு எழுச்சியினால் ஏற்படும் அச்சுறுத்தல்.**

- நச்சுதன்மையுடைய *விப்ரியோ வல்னிஃபிகஸ்* நுண்ணுயிரி இருப்பதை கண்டறிவதற்காக மொத்தம் 636 கடல் உணவு மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.
- தனிமைப்படுத்தப்பட்ட *வி. வல்னிஃபிகஸ்*–ல் இருந்து அவற்றின் நச்சுதன்மைக்கு காரணமான வி.வி.எச்.ஏ, ஆர்.டி.எக்ஸ் மற்றும் சி மற்றும் பி மரபணு வகைகளைப் போன்ற நோய்க்கு காரணமான மரபணுக்கள் இருப்பது கண்டறியப்பட்டது.
- தனிமைப்படுத்தப்பட்ட *வி. வல்னிஃபிகஸ்*– ல் இருந்து நோய்க்கு காரணமான மரபணுக்களைக் கண்டறிவதற்காக சோதனைகள் மேற்கொள்ளப்–பட்டன. இவற்றில் 421 மாதிரிகளில் சைட்டோலிசின், வி.வி.எச்.ஏ மற்றும் ஆர்.டி.எக்ஸ் மரபணு இருப்பது கண்டறியப்பட்டது. மேலும் 385 மாதிரிகளை தனிமைப்படுத்தலில் சி மரபணு வகைகள் இருப்பது கண்டறியப்பட்டது.
- கடல் உணவில் *வி. வல்னிஃபிகஸ்*–ஆனது செப்டம்பர் முதல் டிசம்பர் வரை அதிகமாகவும், பருவ மழைக்கு பிந்தைய மாதங்களில் குறைவாகவும் காணப்பட்டது. *வி. வல்னிஃபிகஸின்* அதிக பாதிப்பு மாதிரிகள் சேகரித்த நிலையமாக முதலில் நாகப்பட்டினமும், அதற்கு அடுத்த இடமாக தூத்துக்குடியும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
- இந்த ஆய்வின் முடிவுகள் மூலம் *வி.வல்னிஃபிகஸின்* நோய்க்கிருமியானது கடல் உணவில் அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது.






**பல்கலைக்கழக ஆராய்ச்சித் திட்டம்– உயிரி பண்பேற்றப்பட்ட கைட்டோசனிலிருந்து ஊட்டச்சத்து பானத்தை உருவாக்குதல் மற்றும் மதிப்பீடு செய்தல்**

- உருவாக்கிய கைட்டோசின் ஆரோக்கிய பானம் தரப்படுத்தப்பட்டது.
- இறாலின் கழிவுகளை பயன்படுத்தி நீரில் கரையக்கூடிய கைட்டோசின் உருவாக்கப்பட்டது.
- இறாலின் கழிவுகளிலிருந்து நீரில் கரையக் கூடிய கைட்டோசினை 1% பிரித்தெடுத்து வெவ்வேறு தயாரிப்புகளில் இணைக்கப்பட்டது (ஆரஞ்சு பாகு, திராட்சை பாகு, காய்கறி வடிசாறு).
- 8% நீரில் கரையக் கூடிய கைட்டோசின் ஆரோக்கிய பானத்தில் சேர்க்கப்பட்டு ஊட்டச்சத்து பகுப்பாய்வு செய்யப்பட்டது.





**பல்கலைக்கழக ஆராய்ச்சித் திட்டம் – உல்வா கடற்பாசிகள் மூலம் தயாரிக்கப்படும் கூழ்மப் பொருட்கள்**

- *உல்வா* கடற்பாசியின் ஊட்டச்சத்து கலவை பகுபாய்வு செய்யப்பட்டது.

- தயார் செய்யப்பட்ட *உல்வா* ஜாமை ஆய்வகத்தில் கொடுத்து அதன் ஆற்றல், மாவு சத்து, கொழுப்பு, புரதம், சர்க்கரை, காரஅமில தன்மை, வைட்டமின் சி, கால்சியம், மெக்னீசியம் மற்றும் பாஸ்பரஸ் ஆகியவற்றைக் கண்டறிய பகுபாய்வு செய்யப்பட்டது.
- புதிதாக தயாரிக்கப்பட்ட *உல்வா* ஜாமை வணிக ரீதியாக தயாரிக்கப்பட்ட ஜாமுடன் (கிசான் ஜாம்) ஒப்பிட்டு அதன் உணர்திறன் மதிப்பீடு செய்யப்பட்டது.
- தயார் செய்யப்பட்ட *உல்வா* ஜாமை குளிர்சாதன பெட்டி மற்றும் அறை வெப்பநிலையில் வைத்து அதன் ஆயுட்காலம் (Shelf life) கண்டறியப்பட்டது.





## மீன்வள பொறியியல் கல்லூரி, நாகப்பட்டினம்

### 1. அடிப்படை அறிவியல்துறை

**இள ஆசிரியர்களுக்கான ஆராய்ச்சி திட்டம் – உறையிடப்பட்ட வஞ்சிரம் மீனின் நிகழ்நேரத்தில் கண்காணிக்க உதவும் நவீன உணரிகள் உருவாக்கம்**

- இயற்கைவழி பலபடி சேர்மங்கள், நிறமி, மற்றும் வெள்ளி நேனோ துகள்களுடன் நிறம் மாறும் உணரியானது வெற்றிகரமாக தயார் செய்யப்பட்டது.
- மேம்பட்ட தொழில்நுட்பங்களான மின்னுண்ணோக்கி மற்றும் எக்ஸ்ரேவை பயன்படுத்தி நிறம் மாறும் உணரிகளின் பண்புகள் அறியப்பட்டன.
- புதியதாக உறையிடப்பட்ட வஞ்சிரம் மற்றும் மத்தி மீன்களுக்கு இந்த நிறம் மாறும் உணரிகள், பழுப்பு கலந்த இளஞ்சிவப்பு நிறத்திலிருந்து சிதைவடைந்த மீன்களுக்கு பச்சை நிறமாக மாறி குறிப்புணர்த்துகின்றன.
- இந்த நிறம் மாறும் உணரிகள் சுமார் 60% சதவீதம் அளவிற்கு இரண்டு வாரங்களில் இயற்கையாகவே மக்கும் தன்மை கொண்டுள்ளன.
- இத்தகைய நிறம் மாறும் மற்றும் இயற்கையாகவே சிதைவடையக்கூடிய உணரிகளை உருவாக்கு–வதற்கு ஒரு உறைக்கு சுமார் 50 பைசா மட்டுமே தேவைப்படுகின்றது என்பது சிறப்பம்சம்.

**இள ஆசிரியர்களுக்கான ஆராய்ச்சி திட்டம்– ஓட்டுமீன் ஓடு கழிவுகளில் இருந்து உயிர்–அழுத்த மின் நானோ உற்பத்தி ஆற்றல் எடுக்கும் இயந்திரம் உருவாக்குதல்**

- இறால் மற்றும் நண்டு ஓடுகளுக்கு 276 நானோ மீட்டர் அலை நீளத்தில் அதிகபட்ச உறிஞ்சும் தன்மை உச்சம் காணப்பட்டது.
- உருவாக்கப்பட்ட உயிர்– அழுத்த மின் பொருட்கள் புற ஊதா உறிஞ்சுதல், ஃபோரியர் உருமாற்ற அகச்சிவப்பு ஸ்பெக்ட்ரோஸ்கோபி, இராமன் ஸ்பெக்ட்ரோஸ்கோபி மற்றும் மின் அளவீடு ஆகியவற்றால் வகைப்படுத்தப்பட்டன.
- பதப்படுத்தப்பட்ட ஷெல்களின் நெகிழ்வுத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை அதிகம். எனவே, அழுத்தம் உருவாக்கம் அதிகமாக தேவைப்படும் தொழிற்சாலைகளில் ஆற்றல் உற்பத்திக்கு இதைப் பயன்படுத்தலாம்.



இறால் ஓடு



நண்டு ஓடு

### 2. நீருயிரி வளர்ப்பு பொறியியல் துறை

**B.Tech மாணவர்களின் ஆராய்ச்சி திட்டம் – சாதா கெண்டை மற்றும் ஃபாக்ஸ்டெயில் அமராந்தஸுக்கு பொருளாதார ரீதியாக சாத்தியமான அக்வாபோனிக்ஸ் அமைப்பு பற்றிய ஒரு ஆய்வு**

- விற்பனை விலையை 20% அதிகரிப்பது அல்லது குறைப்பது லாபத்தில் அதிக மாற்றங்களைக் காட்டுகிறது.
- மாறும் செலவை விட ஆரம்ப முதலீட்டு செலவு நிகர தற்போதைய மதிப்பை பாதிக்கும் என்று சித்தரிக்கப்படுகிறது.



**B.Tech மாணவர்களின் ஆராய்ச்சி திட்டம் – அக்வா ஃபீட் எக்ஸ்ட்ரூஷன் மில், மறுசுழற்சி மீன் வளர்ப்பு அமைப்பு மற்றும் ரேஸ்வே அமைப்பு ஆகியவற்றின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு பற்றிய ஆய்வு**

- நன்னீர் மற்றும் அயனியாக்கும் கதிர்வீச்சில் சுற்றுச்சூழல் நச்சுத்தன்மை அக்வா ஃபீட் எக்ஸ்ட்ரூஷன் மில்லில் அதிகமாக இருந்தது.
- மறுசுழற்சி மீன் வளர்ப்பு அமைப்பில் (RAS) நீர்வாழ் சுற்றுச்சூழல் நச்சுத்தன்மை மற்றும் நீர் பற்றாக்குறை அதிகமாக இருந்தது.
- கார்சினோஜென் மற்றும் அயனியாக்கும் கதிர்வீச்சு உட்புற ரேஸ்வே அமைப்பில் அதிகமாக இருந்தது.

### 3. மீன் செயல்முறை பொறியியல் துறை

**B.Tech மாணவர்களின் ஆராய்ச்சி திட்டம் – வெப்ப ஆய்வுகள் மற்றும் குறைந்தபட்ச செயலாக்கத்தின் ஆற்றல் அளவீடுபதிலடி பைகளில் இறால்.**

- உரிக்கப்பட்ட மற்றும் உரிக்கப்படாத இறால்களின் வெப்ப ஊடுருவல் பண்புகள், ஆகியவை குறைந்த அளவு பதப்படுத்தப்பட்ட இறால்களின் மறுபரிசீலனை செயலாக்கத்தை தரப்படுத்த தீர்மானிக்கப்பட்டது.



பொதிக்கப்பட்ட உரித்த இறால்கள்



உரிக்கப்பட்ட இறால்களின் வெப்ப ஊடுருவல் பண்புகள்

**B.Tech மாணவர்களின் ஆராய்ச்சி திட்டம் – அரை தானியங்கி உலர் மீன் கட்டர் வடிவமைப்பு.**

- உலர்ந்த மீன் முறையாக வெட்டு கத்திக்கு கொண்டு வரப்பட்டு, கடிகார திசையில் சுழலும் தண்டுடன் இணைக்கப்பட்ட கட்டிங் பிளேடு, உலர்ந்த மீனை ஒரே அளவு துண்டுகளாக வெட்டப்பட்டு துண்டுகள் சேகரிக்கப்படுகின்றன.



அரை தானியங்கி உலர் மீன் கட்டர்



உலர் சீர் மீன் துண்டுகள்



உலர்ந்த ரிப்பன் மீன் துண்டுகள்

- வெட்டு நேரத்தைக் குறைத்தல் மற்றும் மேம்பட்ட தோற்றம் ஆகியவற்றின் அடிப்படையில் கைமுறையாக வெட்டுவதை விட மிகவும் திறமையானது.

**B.Tech மாணவர்களின் ஆராய்ச்சி திட்டம் – மீன்களுக்கான சூரிய உலர்த்தி அமைப்பின் வடிவமைப்பு மற்றும் மேம்பாடு**

- 5–10 கிலோ கொள்ளளவு கொண்ட பாலிகார்பனேட்டினால் ஆன சூரிய உலர்த்தி உருவாக்கப்பட்டுள்ளது.
- சராசரியாக, மீனில் இருந்து சூரிய ஒளி நேரங்களில் 55ப/ா நீர் உள்ளடக்கத்தையும், மழை நாட்களில் 28ப/ா ஈரப்பதத்தை அகற்றலாம்.
- IoT அடிப்படையிலான தொலை கண்காணிப்பு அமைப்பு உலர்த்தியின் உள்ளே வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தைக் கண்காணிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது.



### 4. அடிப்படை பொறியியல் துறை

**தமிழ்நாடு அரசின் புதுமையான திட்டங்கள் – மீன்வளத் துறைசார் தொழில்களில் உற்பத்தி அபிவிருத்திக்கான புதுமையான மீனவ்ள பொறியியல் கண்டுபிடிப்புகள் உற்பத்தி மற்றும் விற்பனை**

- 9 இயந்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 1 இயந்திரம் வளர்ச்சியில் உள்ளது.



மீன் முள்நீக்கும் இயந்திரம்



மீன் துண்டாக்கும் இயந்திரம்



மீன் செதில் நீக்கும் இயந்திரம்



மீன் தலை நீக்கும் இயந்திரம்



தேவைக்கேற்ப மீன் உணவளிக்கும் இயந்திரம்



தேவைக்கேற்ப மீன் உணவளிக்கும் இயந்திரம் செயல்முறை விளக்கம் –தமிழக முதல்வர் விழா ஓரத்தூர் – 11.03.2020



சூரிய சக்தியில் இயங்கும் தானியங்கும் உணவளிக்கும் இயந்திரம் | மீன் உணவு தூள் தயாரிக்கும் இயந்திரம் | மீன் சதை பிரித்தெடுக்கும் இயந்திரம்

**ICAR திட்டம் – இறால் பண்ணைகளில் சூரிய ஆற்றல் மூலம் இயக்கப்படும் காற்றுபுகுத்திகளின் மேம்பாடு, செயல்விளக்கம் மற்றும் விரிவாக்கம்**

- நாகப்பட்டினம் Certitude Aqua Farm -ல் ஏசி ஏரேட்டர்கள் மற்றும் டிசி ஏரேட்டர்களுக்கு இடையே செயல்திறன் பகுப்பாய்வு நடத்தப்பட்டது. மேலும் ஏசி ஏரேட்டர்களுடன் ஒப்பிடும்போது டிசி ஏரேட்டர்களால் நுகரப்படும் சக்தி குறைவாக இருப்பது கண்டறியப்பட்டது.




சூரிய சக்தியில் இயங்கும் ஏரேட்டருக்கான வரைபடம் | சூரிய சக்தியில் இயங்கும் ஏசி காற்றுபுகுத்திகள்

**B.Tech மாணவர்களின் ஆராய்ச்சி திட்டம்–IT அடிப்படையிலான நிகழ்நேர குஞ்சு பொரிப்பகத்தை வடிவமைத்தல்**

- வெப்பநிலை, கார அமிலத்தன்மை, கரைந்த ஆக்ஸிஜன் மற்றும் அம்மோனியா சென்சார்கள் அடங்கிய ஸ்மார்ட் கேட்ஜெட் உருவாக்கப்பட்டு சாதனம் கையேடு முறைகளுடன் ஒப்பிடப்படுகிறது.
- உருவாக்கப்பட்ட ஸ்மார்ட் சாதனம் உப்பு மற்றும் நன்னீர் ஆகியவற்றில் துல்லியமான அளவீடுகளைக் காட்டுகிறது.
- உருவாக்கப்பட்ட சாதனத்தின் விலை ரூ.75,000 ஆகும். இது அதிகபட்சம் 10 ஆண்டுகள் உழைக்கும்.

### 1. மீன் உயிரி தொழில்நுட்பத் துறை

**முதுகலை மாணவர் ஆராய்ச்சி – ஜீப்ராஃபிஷ் கருக்கள் மற்றும் லார்வாக்கள் மீதான ஆன்டிஆக்ஸிடன்ட்கள் மற்றும் நோயெதிர்ப்பு தொடர்பான சைட்டோகைன்களின் வெளிப்பாடுகளில் பாதரசம் மற்றும் ஆர்சனிக் விளைவு**

- மெர்குரிக் குளோரைடு மற்றும் சோடியம் ஆர்சனைட் சிகிச்சையளிக்கப்பட்ட லார்வாக்கள் 96 hpf இல் SOD, CAT, Gpx மற்றும் GST ஆகியவற்றின் ஆக்ஸிஜனேற்ற என்சைம் செயல்பாடுகளில் மாற்றத்தைக் காட்டியது.
- நோயெதிர்ப்பு தொடர்பான மரபணுக்களின் வெளிப்பாடு (TNF- α, IL-1β, IL-6 மற்றும் COX-2) மெர்குரிக் குளோரைடு மற்றும் சோடியம் ஆர்சனைட்டின் அதிக செறிவில் கட்டுப்படுத்தப்பட்டது
- மெர்குரிக் குளோரைடு சிகிச்சை ஜீப்ராஃபிஷ் கரு–லார்வாக்கள் குஞ்சு பொரிக்கும் திறன் குறைவதைக் காட்டியது.
- சோடியம் ஆர்சனைட் சிகிச்சை ஜீப்ராஃபிஷ் கரு–லார்வாக்கள் குஞ்சு பொரிக்கும் திறன் அதிகரிப்பதைக் காட்டியது.




படம் 1. 96 hpf,(A) லார்வாக்களை கட்டுப்படுத்தும், (B) 200 nM,(C) 300 nM,(D) 400 nM, (E) 500 nM மற்றும் (E) 600 nM குழுக்களில் சோடியம் ஆர்சனைட்டால் ஏற்படும் உருவவியல் அசாதாரணங்கள்

**கிருஷ்ணகிரி பாரூர் வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மையம், பாரூர்**

- கிப்ட் திலேப்பியாவின் தாய் மீன் விதையானது ராஜிவ்காந்தி மீன் வளர்ப்பு மையத்திலிருந்து கொண்டுவரப்பட்டு, சினை மீன்களாக வளர்த்து எடுக்கப்பட்டன.
- தற்போது, $F_1$ எனப்படும் முதல் தலைமுறை கிப்ட் விதையானது உற்பத்தி செய்யப்பட்டு, அதன் வீரியமானது பிற உயர்ரக திலேப்பியாவுடன் ஒப்பிடப்பட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



**தமிழ்நாடு திட்டக் குழுவின் மாநில சம வளர்ச்சி நிதி திட்டம் – மரபணு மேம்படுத்தப்பட்ட திலேப்பியா (GIFT) மற்றும் கெண்டை மீன் வளர்ப்பின் மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பின் தங்கிய தொகுதிகளில் உள்ள பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல்**

- கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பின் தங்கிய தளி, கெலமங்கலம் மற்றும் ஊத்தங்கரை ஆகிய தொகுதியிலிருந்து இத்திட்டத்தின் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் இடத்தினை பார்வையிட்டு, அவர்களை 1000 ச.மீ அளவில் குளம் அமைப்பதற்கான அளவீடானது குறித்து கொடுக்கப்பட்டது.





**நீர்வாழ் உயிரின ஆரோக்கியத்திற்கான மாநில அளவிலான பரிந்துரை ஆய்வகம்**

**தமிழ்நாடு அரசின் நூதன திட்டம் – தமிழ்நாட்டில் மீன் வளர்ப்பில் உற்பத்தியைப் பெருக்க மின்னணு தொழில்நுட்ப அடிப்படையிலான உத்திகளின் மூலம் வளர்ப்பு மீன்களில் ஆரோக்கிய நிலையை அறிவதற்கான தொடர் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை கூட்டமைப்பு ஏற்படுத்துதல்**

- திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை, சேலம், பன்ரூட்டி, கடலூர், கிருஷ்ணகிரி, நாகபட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், இராமநாதபுரம், விழுப்புரம் புதுக்கோட்டை, திருவண்ணாமலை மற்றும் ஈரோடு, மாவட்டங்களில் இறால், உணவு மீன் மற்றும் அலங்கார மீன் பண்ணைகளில் தொடர் நோய் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டன.
- தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள சுமார் 717 இறால் / மீன் பண்ணையாளர்கள் நோய்க்கண்காணிப்பு தொடர் கூட்டமைப்பில் சேர்ந்து பயனுற்றனர்.
- காணொளி மற்றும் கைப்பேசி மூலம் சீரிய மேலாண்மை முறைகளைப் பற்றிய செய்திகள் ரிலையன்ஸ் அறக்கட்டளை உதவியுடன் அனுப்பப்பட்டன. கைப்பேசியில் பயன்படுத்தப்படும் செயலி நோயறி சேவைகள் மற்றும் நோய் மேலாண்மைக்கென உருவாக்கப்பட்டது.




- வட தமிழகத்தில் உள்ள மாவட்டத்தில் நிலவும் வானிலைக்கும் மற்றும் நோய்த்தாக்கத்திற்கும் இடையேயான தொடர்பு ஆய்வு செய்யப்பட்டது.
- நோய் தடுப்பு முறைகளுக்கான துண்டுபிரசுரங்கள் மற்றும் கையேடுகள் மீன் மற்றும் இறால் பண்ணையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. இதனால் பண்ணையாளர்கள் நோயற்ற மீன் / இறால் குஞ்சுகளை இருப்பு செய்தல் மற்றும் நோயினால் ஏற்படும் இழப்பினை தடுத்து மாநிலத்தின் மீன் உற்பத்தியினை பெருக்க உதவும்.





- மைக்கோபாக்டீரியாசிஸ் தொற்று நோயின் தாக்கம், சென்னை, கொளத்தூரில் உள்ள அலங்கார மீன் வளர்ப்புப் பண்ணைகளில் காணப்படுவதாக கண்டறியப்பட்டு பதிவு செய்யப்பட்டது.
- திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஒரு *பினேயஸ் வனாமி* இறால் பண்ணையில் கருப்பு செவுள் நோய், வெண்புள்ளி சின்ட்ரோம் வைரஸ் (WSSV) மற்றும் செவுள் தொடர்புடைய வைரஸ் (GAV) போன்ற நோய்கள் கண்டறியப்பட்டு பதிவு செய்யப்பட்டன.










**தொழிற்சாலை திட்டம் – கெமின் நிறுவனத்தின் கண்டறிப்பட்ட மூல முன் மாதிரிகளில் *என்டிரோசைட்டோசோவன் ஹெப்பாட்டோபினேயி* (ஈ.எச்.பி) நோய் காரணியால் பாதிக்கப்பட்ட *பினேயஸ் வனாமி* இறால்களில் நோயை குணமாக்கும் செயல்திறனை மதிப்பீடு செய்தல்**

- *என்டிரோசைட்டோசோவன் ஹெப்பாட்டோபினேயி* (ஈ.எச்.பி) நோய் காரணியால் பாதிக்கப்பட்ட *பினேயஸ் வனாமி* இறால்களில் கெமின் மூல முன் மாதிரி பொருட்களின் நோயை குணமாக்கும் செயல்திறன் மதிப்பீடு செய்யப்பட்டது.
- இவ்வாரய்ச்சியில் நீர்தரக் காரணிகள், இறால்களின் நோய் எதிர்ப்புத் தன்மை மற்றும் நொதிமங்களின் அளவு ஆய்வு செய்யப்பட்டன.

**மீன்வளர்ப்பு தொழில்காப்பகம் மற்றும் தொழிற் பயிற்சி இயக்குனரகம், முட்டுக்காடு, சென்னை**

**தொழிற்சாலை திட்டம் – பசிபிக் வெள்ளைக் கால் இறாலின் *(பினேயஸ் வனாமி)* தீவனத்தில் கோலினுக்கு மாற்றாக மூலிகை உபபொருள் சேர்ப்பதனால் வளர்ச்சியில் ஏற்படும் விளைவுகள்**

- பசிபிக் வெள்ளைக் கால் இறாலிற்கு கொடுக்கப்பட்ட இரண்டு வகை (செயற்கை மற்றும் இயற்கை வகை) கோலினால் இறாலின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை, மேலும் உடல் சத்துப்பொருட்களில் எந்த மாற்றமும் விளைவிக்கவில்லை.



பசிபிக் வெள்ளைக் கால் இறாலினை புதுச்சூழற்கிணங்கல்



ஆராய்ச்சியின் தொடக்கத்தில் ஆரம்ப எடை எடுத்தல்



ஆராய்ச்சி கூண்டுகள்



உணவு மூலப்பொருட்கள்



ஆராய்ச்சியின் முடிவில் எடை எடுத்தல்

**தொழிற்சாலை திட்டம் – பசிபிக் வெள்ளைக் கால் இறாலின் *(பினேயஸ் வனாமி)* தீவனத்தில் மீன் தூளுக்கு மாற்றாக ஸ்ட்ரிங் புரதம் அளிப்பதனால் வளர்ச்சி, தீவன உட்கொள்ளளவு மற்றும் உடலியலில் ஏற்படும் விளைவுகள்**

- மீன் தூளுக்கு மாற்றாக, 60% ஸ்ட்ரிங் புரதம் உட்சேர்ப்பின் போது பசிபிக் வெள்ளைக் கால் இறாலின் வளர்ச்சியானது அதிகமாக காணப்பட்டது.
- ஸ்ட்ரிங் புரதம் உட்சேர்ப்பினால் பசிபிக் வெள்ளைக் கால் இறாலின் உயிர்பிழைப்புத் திறனில் எந்த வேறுபாடும் காணப்படவில்லை.
- பசிபிக் வெள்ளைக் கால் இறால்களின் செரிமானத்தன்மையானது ஸ்ட்ரிங் புரதங்கள் வழங்கியபோது அதிக ஆற்றலுடன் காணப்பட்டது.
- ஸ்ட்ரிங் புரதங்களான ப்ரோபிட் மற்றும் ப்ரோடைடின் செரிமானிக்கக்கூடிய புரதமானது 61.5 மற்றும் 62.0 எனக் கணக்கிடப்பட்டது.
- எம்.ஆர்.என்.ஏ. மரபணு வெளிபாடுகள் ஸ்ட்ரிங் புரதம் உட்சேர்ப்பினால் அதிகமாக காணப்பட்டது.










**முதுகலை மாணவர் ஆராய்ச்சி – அமினோ அமிலம் உணவூட்டத்தின் மூலம் நைல் திலேப்பியாவின் வளர்ச்சி, வளர்ச்சி தொடர்புடைய மரபணு வெளிபாடு மற்றும் குருதி அளவுகளில் ஏற்படும் விளைவுகள்**

- அமினோ அமிலங்களான மெத்தியோனைன், லைசின், த்ரிப்டோபான் மற்றும் அர்ஜினைன் ஆகியவை உணவூட்டத்தின் மூலம் நைல் திலேப்பியாவிற்கு அளிக்கும் போது அதன் வளர்ச்சி, வளர்ச்சி தொடர்புடைய மரபணு வெளிபாடுகள் மற்றும் குருதி அளவுகளில் மேம்பட்டு காணப்பட்டது.
- நைல் திலேப்பியாவிற்கு மெத்தியோனைனின் உகந்த உட்சேர்ப்பின் அளவு 8.5 கிராம்/கிலோ எனக் கணக்கிடப்பட்டது.
- நைல் திலேப்பியாவிற்கு லைசினின் உகந்த உட்சேர்ப்பின் அளவு 18.0 முதல் 18.3 கிராம்/கிலோ எனக் கணக்கிடப்பட்டது.
- நைல் திலேப்பியாவிற்கு த்ரிப்டோபானின் உகந்த உட்சேர்ப்பின் அளவு 3.8 கிராம்/கிலோ எனக் கணக்கிடப்பட்டது.
- நைல் திலேப்பியாவிற்கு அர்ஜினைனின் உகந்த உட்சேர்ப்பின் அளவு 16.7–16.8 கிராம்/கிலோ எனக் கணக்கிடப்பட்டது







**முதுகலை மாணவர் ஆராய்ச்சி – மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியாவின் உணவில் மீன்தூளுக்கு மாற்றாக உயிரியக்க செயலாக்கம் செய்த பட்டுப்புழு மற்றும் கோழி உப மூலப்பொருட்களை மதிப்பிடுதல்**

- மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியாவின் உணவில் மீன்தூளுக்கு மாற்றாக பட்டுப்புழு மற்றும் கோழி உப மூலப்பொருட்களை அப்படியே உட்சேர்த்தும் மற்றும் அதனை உயிரியக்க செயலாக்கம் செய்து உணவில் அளிப்பதனாலும் நல்ல வளர்ச்சி, ஊட்டசத்து பயன்பாடு மற்றும் குருதி அளவுகள் மேம்பட்டு காணப்பட்டது.
- எனினும், உயிரியக்க செயலாக்கம் செய்த பட்டுப்புழு மற்றும் கோழி உப மூலப்பொருட்களை 66.7% என்ற அளவில் உட்சேர்க்கும் போது அதிக வளர்ச்சி மற்றும் ஊட்டச்சத்து பயன்பாடுகள் காணப்பட்டது.
- எனவே, உயிரியக்க செயலாக்கம் செய்வதனால் மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியாவில் அதிக வளர்ச்சியினை அடையலாம்.






**முனைவர். பட்டப்படிப்பு ஆராய்ச்சி: மிதவைக் கூண்டுகளில் வளர்க்கப்படும் மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்களுக்கு தாவர புரத உணவை மேம்படுத்துதல்**

- தாவர புரத உணவை மூலப்பொருட்களாக கொண்ட உணவின் மூலம் மரபுவழி மேம்படுத்தப்பட்ட

திலேப்பியா மீன்களின் வளர்ச்சி மற்றும் உடலியல் காரணிகள் மேம்பட்டு காணப்பட்டது.

- கடல் மீன்களின் மூலம் பெறப்படும் ஹைட்ரோலைசேட்டின் உட்சேர்ப்பு மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்களின் வளர்ச்சியினை மேம்படுத்துகிறது.





### பூண்டி நீர்த்தேக்கத்தில் கூண்டுகளில் மீன்வளர்ப்பு

- பூண்டி நீர்த்தேக்கத்தில் மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்களின் உகந்த இருப்பு அடர்த்தியானது நாற்றங்கால் மற்றும் வளர்ப்பு கூண்டுகளில் கன மீட்டருக்கு 200 மற்றும் 50 என்ற எண்ணிக்கையில் கணக்கிடப்பட்டது.





## மீன்வளத் தொழில் காப்பகம் மற்றும் தொழில்சார் பயிற்சி இயக்குனரகம், இராமநாதபுரம்

### DBT திட்டம் – மீன் பதனக் கழிவுகளிலிருந்து பெறப்படும் பல்படியாக்க மூலக்கூறுகள் மற்றும் கடல் உயிரினங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மீன்களை கவரும் பொருட்களைக் கொண்டு ஆயிரங்கால் தூண்டில்களுக்கான செயற்கை மீனிரைகளை உருவாக்குதல்

- மீன்பதனக் கழிவுகளிலிருந்து மீன் ஜெலாட்டின் பிரித்தெடுக்கப்பட்டு அதை முக்கிய மூலப் பொருட்களாகக் கொண்டு ஆயிரங்கால் தூண்டில்களுக்கான செயற்கை மீன் இரை செய்வதற்கான அடிப்படைப் பொருட்கள் உருவாக்கப்பட்டன.
- செயற்கை மீனிரை மூலப்பொருளுடன் கூல்மப் பொருள்களின் கடினத் தன்மையை 20.84என் அதிகரித்து தூண்டிலில் பயன்படுத்த ஏதுவாக உருவாக்கப்பட்டது.
- செயற்கை மீனிரையானது 74.5 சதவீத கரையாத அளவுடன் கடல்நீரில் பயன்படுத்தும் வண்ணம் உருவாக்கப்பட்டது.
- உருவாக்கப்பட்ட செயற்கை மீனிரையானது கடல்நீரில் அதிகபட்சமாக 10 மணிநேரம் கரையாத நிலைப்புத் தன்மை கொண்டது என கண்டறியப்பட்டது

# உருவாக்கப்பட்டதொழில்நுட்பங்கள் / தொழில்நுட்ப வடிவமைப்பு உரிமைகள் / பொருட்கள்

# 3 உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் / தொழில்நுட்ப வடிவமைப்பு உரிமைகள் / பொருட்கள்

### 3.1. உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள்

**டாக்டர். எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரி**

**மீன் வளர்ப்பு துறை**

**நன்னீரில் ஆசிய கடற்பாசி நாற்றாங்கால் வளர்ப்பு**

- 1.5 செமீ அளவுள்ள 500 கடற்பாசி விதைகள் 2×1× 0.5 மீ ஹாப்பாவில் கருவுற்ற குளங்களில் சேமித்து வைக்கப்பட்டன.
- ஆர்டிமியா பயோமாஸ் இரண்டாவது வாரத்தில் இருந்து ஊட்டப்பட்டது.
- ஒரு வாரத்திற்கு தேவையான மீன்களை தேர்ந்தெடுத்து புதிய ஹாப்பாவிற்கு மாற்றம் செய்யப்பட்டது.
- நர்சரி தீவனம் (55% புரதம்) 0.3–0.5 மிமீ பயன்படுத்தப்பட்டது.
- 75% பிழைப்புத்திறனை அடையப்பட்டது மற்றும் 45 நாட்களில் 7 சென்டிமீட்டர் விரலி குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டன.






**மீன்வள பொறியியல் கல்லூரி, நாகப்பட்டினம்**

**அடிப்படை அறிவியல்துறை**

**உறையிடப்பட்ட வஞ்சிரம் மீனின் தரத்தை நிகழ் நேரத்தில் கண்காணிக்க உதவும் நவீன உணரிகள் உருவாக்கம்**

- இயற்கைவழி பலபடி சேர்மங்கள், நிறமி, மற்றும் வெள்ளிநேனோதுகள்களுடன் நிறம் மாறும் உணரியானது வெற்றிகரமாக தயார் செய்யப்பட்டது.
- மேம்பட்ட தொழில்நுட்பங்களான மின்னுண்ணோக்கி மற்றும் எக்ஸ்ரேவை பயன்படுத்தி நிறம் மாறும் உணரிகளின் பண்புகள் அறியப்பட்டன.
- புதியதாக உறையிடப்பட்ட வஞ்சிரம் மற்றும் மத்தி மீன்களுக்கு இந்த நிறம் மாறும் உணரிகள், பழுப்பு கலந்த இளஞ்சிவப்பு நிறத்திலிருந்து சிதைவடைந்த மீன்களுக்கு பச்சை நிறமாக மாறி குறிப்புணர்த்துகின்றன.
- இந்தநிறம் மாறும் உணரிகள் சுமார் 60% சதவீதம் அளவிற்கு இரண்டு வாரங்களில் இயற்கையாக வேமக்கும் தன்மை கொண்டுள்ளன.
- இத்தகைய நிறம் மாறும் மற்றும் இயற்கையாகவே சிதைவடையக் கூடிய உணரிகளை உருவாக்குவதற்கு ஒரு உறைக்கு சுமார் 50 பைசா மட்டுமே தேவைப்படுகின்றது என்பது சிறப்பம்சம்.




படம் 1. உறையிடப்பட்ட மீனின் தரத்தை நவீன மற்றும் நிகழ்நேரத்தில் எளிதில் உணர்த்தக்கூடிய உணரிகள்




படம் 2. உணரியின் நிறம் மாறும் திறனும் மீனின் சிதைவும்

### அடிப்படை பொறியியல் துறை

### மீன் வளர்ப்பில் தானியங்கி செயலி மூலம் நிகழ்நேர கண்காணிப்பு அமைப்பு (வெப்பநிலை, நீரக நிலைத் தன்மை, கரைந்த பிராணவாயு, அம்மோனியா)



**திருமூர்த்தி மீன் பண்ணையில் தர கண்காணிப்பு**



**மீன்வள பொறியியல் கல்லூரியின் மீன்குஞ்சு பொரிப்பக தொட்டியில் நீர் தர கண்காணிப்பு**

- தரவு உணரப்பட்டு அது மைக்ரோகண்ட்ரோலர் சிப்பிற்கு மாற்றப்பட்டு டிஜிட்டல் தரவுகளாக மாற்றப்பட்டு தரவுத்தளத்தில் சேமிக்கப்படுகிறது.
- கைபேசி பயன்பாட்டில் ஆன்லைன் மூலம் தரவு கண்காணிக்கப்படுகிறது. வளர்ந்த கைபேசி பயன்பாடு இணையதள உணாயீகளின் தொலைத் தூரத்திலிருந்து கண்காணிக்க உதவுகிறது.
- இந்த முறை துல்லியமானது, குறைந்த நேரம் எடுத்துக்கொள்வது மற்றும் குறைந்த மனித சக்தி தேவைப்படுகிறது.

### மீன் செதில் நீக்கும் இயந்திரம்

- மீன் செதில் நீக்கும் இயந்திரம் இரண்டு அங்குலம் முதல் எட்டு அங்குலம் வரையான அனைத்து வகை மீன் இனங்களையும் அனைத்து வகை செதில்களையும் ஒரு மில்லி மீட்டர் துல்லியத்தில் நீக்கவல்லது.
- மீன் செதில் நீக்கும் இயந்திரம் அனைத்து வகையான மீன் வடிவங்களுக்கும் அளவுகளுக்கும் ஏற்ப தன்னைத்தானே தகவமைத்துக் கொள்ளும் திறன் கொண்டது.
- மீன் செதில் நீக்கும் இயந்திரம் 200 முதல் 500 கிலோ கிராம் வரையான மீன்களை ஒரு மணி நேரத்தில் செதில் நீக்கும் திறன் கொண்டது.
- மீன் செதில் நீக்கும் இயந்திரம் மனித சக்தியை மிகக் குறைவாக உபயோகிப்பதுடன் எந்த வகையிலும் பணியாட்களை காயப்படுத்தாமல் செவ்வனே தன் பணியை செய்யும் திறன் கொண்டது.
- மீன் செதில் நீக்கும் இயந்திரமாது மிகக் குறுகிய இடத்தை எடுத்து கொள்வதினால் மீன்பிடி படகிலேயே நிறுவ முடியும்.



**மீன் செதில் நீக்கும் இயந்திரம்**



**மீன் செதில் நீக்கும் இயந்திரம் – செயல்முறை விளக்கம்**



**மீன் செதில் நீக்கும் இயந்திரம் செயல்முறை விளக்கம் மேலவாஞ்சூர் – 28.09.2020**

### மீன் முள்நீக்கும் இயந்திரம்

- மீன் முள் நீக்கும் இயந்திரம் 2 அங்குலம் முதல் 8 அங்குலம் கணம் உள்ள அனைத்து வகையான மீன் இனங்களையும் தண்டுவட முள் அளவுக்கு ஏற்ப 5 மில்லி மீட்டர் முதல் 20 மில்லி மீட்டர் வரையிலான முட்களை நீக்கும் விதமாக தகவமைத்துக் கொள்ளும் ஆற்றல் கொண்டது.
- மீன்முள் நீக்கும் இயந்திரம் 500 முதல் 1500 கிலோ கிராம் அளவிலான அனைத்து வகை மீன்களையும் பதப்படுத்தும் படியான திறன் கொண்டது.
- மீன்களின் உருவியல் அமைப்பு இயந்திரத்தினால் கையாளப்படுகிறது.
- மீன் இறங்குதளங்கள் மற்றும் மீன் சில்லறைகடை ஒவ்வொன்றும் ஒரு இயந்திரத்தை வைத்திருக்கலாம்.



**மீன் முள் நீக்கும் இயந்திரம்**



**மீன் முள் நீக்கும் இயந்திரம் செயல்முறை விளக்கம்**



**மீன் முள் நீக்கும் இயந்திரம் – செயல்முறை விளக்கம் மேலவாஞ்சூர் – 28.09.2020**

### மீன் துண்டாக்கும் இயந்திரம்

- மீன்களின் உருவவியல் அமைப்பு இயந்திரத்தினால் கையாளப்படுகிறது.
- மீன் துண்டாக்கும் இயந்திரம் 15 மில்லி மீட்டர் முதல் 45 மில்லி மீட்டர் வரையிலான துண்டுகளாக மீன்களை துண்டாக்க தகவமைத்துக் கொண்டு

மீன்களை துண்டாக்கும் திறன் கொண்டது.

- அனைத்து வகையான மீன்களையும் 1 அங்குலம் முதல் 5 அங்குலம் வரையான துண்டுகளாக 2 அங்குலம் முதல் 8 அங்குலம் வரையிலான மீன்களையும் தேவைக்கேற்ப துண்டாக்கும் திறன் கொண்டது.
- மீன் துண்டுகளாக 2 அங்குலம் முதல் 8 அங்குலம் வரையிலான மீன்களையும் தேவைக் கிணங்க துண்டாக்கும் திறன் கொண்டது.
- மீன்துண்டாக்கும் இயந்திரம் 500 முதல் 1000 கிலோ கிராம் அளவிலான மீன்களை பதப்படுத்தும் கொள்ளளவு கொண்டது.



**மீன் துண்டாக்கும் இயந்திரம்**



**மீன் துண்டாக்கும் இயந்திரம் – செயல்முறை விளக்கம்**



**மீன் துண்டாக்கும் இயந்திரம் – செயல்முறை விளக்கம் மேலவாஞ்சூர் – 28.09.2020**

## மீன் தலை நீக்கும் இயந்திரம்

- மீன்களின் உருவவியல் அமைப்பு இயந்திரத்தினால் கையாளப்படுகிறது (உயரசரி செய்யும் அமைப்பு & உருவவியல் உருவாக்க அமைப்பு) .
- மீன் தலை நீக்கும் இயந்திரம் 2 அங்குலம் முதல் 8 அங்குலம் வரையிலான அகலம் கொண்ட அனைத்து வகை மீன்களையும் தன்னைத்தானே தகவமைத்துக் கொண்டு பதப்படுத்தும் திறன் கொண்டது.
- மீன் தலை நீக்கும் இயந்திரம் 500 முதல் 1500 கிலோ கிராம் அளவிலான அனைத்து வகை மீன்களையும் பதப்படுத்தும் படியான திறன் கொண்டது.
- மேலும் மிகக் குறைந்த அளவினையே உடையதனால் மீன்பிடி படகிலேயே நிறுவ முடியும் ஆற்றல் கொண்டது.



**மீன் தலை நீக்கும் இயந்திரம்**



**மீன் தலை நீக்கும் இயந்திரம் – செயல்முறை விளக்கம்**



**மீன் தலைநீக்கும் இயந்திரம் செயல்முறை விளக்கம் மேலவாஞ்சூர் – 28.09.2020**

## தேவைக்கேற்ப மீன் உணவளிக்கும் இயந்திரம்

- மீன்களின் தேவைக்கு ஏற்ப மீன்களின் உந்துலின் படி ஒவ்வொரு முறையும் 25 முதல் 30 கிராம் அளவிலான மீன்உணவினை மட்டுமே பரப்பும் திறன் கொண்டது.
- இந்த மீன் உணவளிக்கும் இயந்திரம் 1 மில்லி மீட்டர் முதல் 8 மில்லி மீட்டர் அளவு கொண்ட அனைத்து வகையான மூழ்கும் மற்றும் மிதக்கும் மீன் உணவுகளையும் பயன்படுத்தும் படியாக தகவமைத்துக் கொள்ளும் திறன் கொண்டது.
- இந்த இயந்திரம் ஈர்ப்பு விசையை அடிப்படையாகக் கொண்டு மீன்களின் உந்துதலின் அடிப்படையில் செயல்படும்.



**உற்பத்தி செய்யப்பட்ட தேவைக்கிணங்கிய மீன் உணவளிக்கும் இயந்திரம்**



**செயல்முறை விளக்கம் – நாகூர்**



**செயல்முறை விளக்கம் – தமிழக முதல்வர் விழா ஒரத்தூர் – 11.03.2020**

## நீர்வாழ் உயிரின ஆரோக்கியத்திற்கான மாநில அளவிலான பரிந்துரை ஆய்வகம்

### *எ.ஹெப்பட்டோபினேயி* ஒட்டுண்ணியை துல்லியமாக கண்டறியும் பல்முனை நோயறி பாலிமரேஸ் சங்கிலி தொடர் (Multiplex PCR) பரிசோதனைமுறை

- இத்தொழில் நுட்பமானது, இறால்களைத் தாக்கும் வெண்புள்ளி வைரஸ் மற்றும் *என்டிரோ சைட்டோசோலன் டியுப்பட்டொபினெயி* தாக்குதலினை ஒரே சோதனை முறையில் கண்டறிய உதவும்.
- நோய்த்தாக்குதல் பற்றிய விபரங்களை 4 முதல் 8 மணி நேரங்களில் துரிதமாக அறிய முடியும்.
- இத்தொழில்நுட்பம் இறால் பொரிப்பங்களின் தாய் இறால்கள் மற்றும் இறால் குஞ்சுகளின் துரிதமாகவும் துல்லியமாகவும் நோயினை அறிய உதவும் 100 சோதனைகளை செய்வதற்கான சோதனைப் பெட்டியின் மொத்த விலை ரூபாய் 20,000/–.



**மீன்வளர்ப்பு தொழில்காப்பகம் மற்றும் தொழிற்பயிற்சி இயக்குனரகம், முட்டுக்காடு, சென்னை**

**பங்காஸியஸ், இந்திய பெருங்கெண்டைகள் மற்றும் திலேப்பியா மீன்களுக்கான உணவு**

- குரோப்பியா (24% புரதம்) மிதவை உணவின் விலை ஒரு கிலோவிற்கு ரூபாய். 34.68 ஆகும்.
- குறைந்த செலவில் குரோப்பியா உணவானது தயாரிக்கப்பட்டு, மீன்களின் அதிக வளர்ச்சிக்கு உதவுவதால் மீன் பண்ணையாளர்களின் இலாபத்தை அதிகமாக்க இயலும்.
- மேலும், வணிக ரீதியான உணவு ஆலைகள் சில்லரை விற்பனையில் மீன் தீவனம் வழங்குவதில்லை. இதனால் சிறு பண்ணையாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். நமது ஆலையில் தயாரிக்கப்படும் இந்த குரோப்பியா உணவானது சிறு பண்ணையாளர்களையும் கருத்தில் கொண்டு ஒன்று அல்லது இரண்டு மூட்டைகள் என விற்கப்படுவதால், சிறிய அளவில் உள்ள மீன் பண்ணைகளும் மேம்படுத்தப்படும்.



**3.2. தொழில்நுட்ப வடிவமைப்பு உரிமைகள்**

துறையின் பெயர் :

தலைப்பு : குறிப்பு வடிவில்

**3.3. பொருள்கள்**

**மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி**

**மீன்பதப்படுத்தும் தொழில்நுட்பத் துறை**

**மீன்புரத ரொட்டி (திரு. பார்த்திபன்)**

மதிப்பு கூட்டப்பட்ட மீன் புரத ரொட்டி பொருட்களின் விற்பனை பாரம்பரிய கடல் உணவுகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. பொதுவாக ஆய்வுகள், பொதிதல் மற்றும் விளம்பரம் ஆகியவை மிக முக்கியமான சில பகுதிகள், அவை இறுதியில் ஒரு புதிய தயாரிப்பின் வெற்றி பாதையை தீர்மானிக்கின்றன.

**மீன் புரோட்டீன் பிஸ்கட் (திரு . பார்த்திபன்)**

மதிப்பு கூட்டப்பட்ட மீன் புரதத்தில் தயாரித்த பிஸ்கட் பொருட்கள் பாரம்பரிய கடல் உணவுகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை. இதற்கு பல்பொருள் அங்காடி ஒரு புதியபொருத்தமான சந்தையாக இருக்கும். பொதுவாக பொருளின் தோற்றம், பொதிதல் மற்றும் காட்சி படுத்துதல் ஆகியவை எந்தவொரு புதிய மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகளையும் வெற்றிகரமாக விற்பனை செய்ய வழிவகுக்கும் முக்கிய காரணிகளாகும்.

**தூள் மீன் சிலேஜ் (திரு . பார்த்திபன்)**

மீன்களின் மனித நுகர்வு அதிகரிப்பு மற்றும் மீன் ஏற்றுமதியைப் பன்–முகப்படுத்துதல் ஆகியவற்றின் காரணமாக, மீன் தூள் உற்பத்தி குறைந்து வருவது. இந்த சூழ்நிலையில் மீன்பதனக் கழிவுகளை ஒரு மூலப்பொருளாகப் பார்ப்பது ஒரு அவசியமானது. மீன்பதப்படுத்தும் கழிவுகளின் அளவு, கணிசமானதாக இருந்தாலும், அதன் பயன்பாடு முறைப்படுத் அத்தகைய கழிவுகளை மீன் வளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்புக்கான தீவனமாக மாற்றுவதற்கான ஒரு நடைமுறை தேவைப்படுகிது. அமிலம்சேர்க்கப்பட்ட மற்றும் புளித்த மீன் சைலேஜ் உற்பத்தி சமீபத்திய ஆண்டுகளில் பல மாற்றங்களைக் கண்டது.

**டாக்டர். எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரி**

**மீன் பதனதொழில்நுட்பத் துறை**

**கடற்பாசி ஊறுகாய் (டி . பிரியதர்ஷினி மற்றும் நிமிஷ்மோல் ஸ்டீபன்)**

- உணர்திறன் பகுப்பாய்வில் 10 மற்றும் 20 % கடற்பாசி சேர்க்கப்பட்ட கடற்பாசி ஊறுகாய், 20 % க்கு மேல் உள்ளதை விட நன்றாக மதிப்பெண் பெற்றது. புரத உள்ளடக்கம் 7.14–10.5% வரை இருந்தது. 3 மாத சேமிப்பிற்கு பிறகும் நுண் உணர்வு முடிவுகள் அப்படியே இருந்தது.



**கடற்பாசி சிற்றுண்டியின் சுவைக்காக தயாரிக்கபட்ட இயற்கை மசாலா பூச்சுக்கலவை (ரா. ரித்திகா தேவி மற்றும் நிமிஷ்மோல் ஸ்டீபன்)**

- நான்கு வகையான இயற்கை மசாலா பூச்சுக்கலவை உருவாக்கப்பட்டது,
- 1: இனிப்பான வெங்காய கலவை, 2: காரமான தக்காளி கலவை 3: புளிப்பு மற்றும் காரமான கலவை 4: இனிப்பு மற்றும் மசாலா கலவை.
- 2%, 4%, 8% மற்றும் 10% உடன் ஒப்பிடும் போது, 6 % மசாலா பூச்சு கலவை சேர்க்கப்பட்ட கடற்பாசி சிற்றுண்டியின் உணர்திறன் பகுப்பாய்வு சிறந்த மதிப்பெண் பெற்றிருந்தது.
- வெற்றிட பையகப்படுத்துதல் முறையில் மூன்று மாதங்கள் சேமிப்பிற்குப் பிறகும் உணர்வு முடிவுகள் அப்படியே இருந்தது.



வகை 1: இனிப்பான வெங்காய கலவை



வகை 2: காரமான தக்காளி கலவை

**மீன்வளர்ப்பு தொழில்காப்பகம் மற்றும் தொழிற்பயிற்சி இயக்குநரகம், முட்டுக்காடு, சென்னை**

**பிளவர் ஹார்ன் உணவு**

- சீரான ஊட்டச்சத்து மிகுந்த உணவு.
- நிறத்தை மேம்படுத்தும்.
- நீரின் தன்மையை மாசுபடுத்தாது.
- சுவை மிகுந்த உணவு.
- ஆன்டிபயாடிக்ஸ், இரசாயணங்கள் மற்றும் மற்றும் தடை செய்யப்பட்ட மருந்துகள் சேர்க்காமல் உருவாக்கப்பட்டது.
- வண்ண மீன் ஆர்வளர்கள் மலிவு விலையில் இந்த உணவினை வாங்கலாம்.
- இதனால் வண்ண மீன் ஆர்வளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.






# கல்வி

# 4 கல்வி

## 4.1. கல்வித்திட்டங்கள்

தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் (TNJFU) திறன் அடிப்படையிலான தொழில்முறை கல்வியை வழங்குவதற்காக தொழில்முறை கல்வித் திட்டங்களான மீன்வள அறிவியல், மீன்வளப் பொறியியல், உணவு தொழில்நுட்பவியல், உயிர் தொழில்நுட்பவியல், ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் மற்றும் துணை தொழில்கல்வி திட்டங்களான தொழில்சார் நீர்வாழ் உயிரினவளர்ப்பு, நீர்வாழ் உயிரினநல மேலாண்மை, மீன்பதன தொழில் நுட்பவியல், தொழில்சார் மீன்பிடி தொழில்நுட்பவியல்ஆகியவற்றை வழங்குகிறது.

### 4.1.1. கல்வித் திட்டங்கள்

கல்வித் திட்டங்களில் இளநிலைகல்வித் திட்டங்களான பி. எஃப்.எஸ்.சி – இளநிலை மீன்வள அறிவியல் , பி. டெக் – மீன்வளப் பொறியியல் , பி. டெக் – உயிர் தொழில்நுட்பவியல், பி. டெக் – உணவு தொழில்நுட்பவியல் மற்றும் பி.வொக் – தொழில்சார் மீன்பதன தொழில்நுட்பவியல் மற்றும் கூடுதலாக, புதிய கல்வித் திட்டங்களாக பி.டெக் – (ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல்), பி.பி.ஏ – மீன்வள வணிக மேலாண்மை , பி.வொக் – (தொழில்சார் நீர்வாழ் உயிரின வளர்ப்பு, நீர்வாழ் உயிரினநல மேலாண்மை மற்றும் தொழில்சார் மீன்பிடி தொழில்நுட்பவியல்) வழங்கப்படுகிறது. முதுநிலைகல்வித் திட்டங்களான (எம். எஃப்.எஸ்.சி., முதுநிலை மீன்வள அறிவியல், எம்.டெக் மற்றும் எம்.பி.ஏ) மற்றும் முனைவர். பட்டப்படிப்புகளை வழங்குகிறது. இந்த திட்டங்கள் இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம், கோரிக்கைகள் மற்றும் உலகளாவிய சூழ்நிலையால் உருவாக்கப்பட்ட அனைத்து இந்திய குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டு மறுவடிவமைப்பு செய்யப்படுகின்றன. தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் சம்பந்தப்பட்ட ஆய்வுக் குழு மற்றும் கல்விகவுன்சிலின் ஒப்புதலுடன் இந்த மாற்றங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம், மேம்பாட்டு மானியத்தின் நிதி உதவியுடன் கல்வியின் தரத்தை மேம்படுத்த வழங்கப்படும் படிப்புகளுக்கு பாடப்புத்தகங்கள், கற்பித்தல் மற்றும் நடைமுறை கையேடுகள் தயாரிக்கப்படுகின்றன.

### 4.1.2. இளநிலை பட்டப்படிப்பு

பி.எஃப்.எஸ்.சி. (மீன்வள அறிவியல்) என்பது நான்கு வருட தொழில்முறை இளங்கலை பட்டப்படிப்பு திட்டமாகும். இந்த திட்டம் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி, பொன்னேரி மற்றும் தலைஞாயிறு முறையே 60, 60 மற்றும் 40 மாணவர்களை உட்கொள்ளும் திறன் கொண்டது. இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம், புதுதில்லியில் நடத்தப்படும் அகில இந்திய நுழைவுத் தேர்வு மூலம் நிரப்பப்படும் பிறமாநில மாணவர்களுக்கு பதினைந்து சதவீத இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஐந்தாம் குழு பரிந்துரையின்படி ஐசிஏஆர் பரிந்துரைத்த திருத்தப்பட்ட பாடத்திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மாணவர்களின் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஆலோசகர்களின் உதவியுடன் கல்வி தொழில்நுட்ப செல் (ETC) மூலம் Faculty Dean/டீன் (கல்வியாளர்கள்) தலைமையில் பாடத்திட்ட நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன. பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் இளநிலைபட்டம் பெறுவதற்கு 10.0 இல் 5.5 என்ற குறைந்தபட்ச ஒட்டு மொத்த கிரேடுபாயிண்ட் (OGPA) பெறவேண்டும்.

B.Tech (மீன்வள பொறியியல்) என்பது நாகப்பட்டினம் மீன்வள பொறியியல் கல்லூரியில் வழங்கப்படும் 4 ஆண்டு தொழில் முறை பட்டப்படிப்பு திட்டமாகும். பட்டப்படிப்பு வழங்குவதற்கு வழிவகுக்கும் மாணவர்கள் படிப்பில் தேர்ச்சி பெற்று, கல்விகவுன்–சிலால் பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்சகடன் நேரங்களை, இளங்கலை பட்டப்படிப்புக்காக 10.0 புள்ளிஅளவு கோலில் குறைந்தபட்சம் 5.5 கிரேடுபாயிண்ட் (OGPA)பெற்று முடிக்க வேண்டும்.

### 4.1.3. முதுநிலை பட்டப்படிப்பு

M.F.Sc., மீன்வள அறிவியல் என்பது பல்வேறு துறைகளில் வழங்கப்படும் இரண்டு ஆண்டு முதுகலை பட்டப்படிப்பு திட்டமாகும். நீர்வாழ் உயிரின வளர்ப்பு, நீர்வாழ் உயிரின நல மேலாண்மை, மீன் வள மேலாண்மை, நீர்வளச் சூழலியல் மேலாணமைத்துறை, மீன்தர உறுதிப்பாடு மற்றும் மேலாண்மை, மீன் பதனநுட்பவியல், மீன்வளப் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், மீன் உயிரியல் தொழில்நுட்பம், மீன்வளப் பொருளியல், மீன்வள விரிவாக்கம் ஆகிய திட்டங்கள் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், தூத்துக்குடியில் வழங்கப்படுகிறது. முதுகலை பட்டப்படிப்பு திட்டங்களாக நீர்வாழ் உயிரின வளர்ப்பு, நீர்வாழ் உயிரினநல மேலாண்மை, மீன் வள மேலாண்மை, நீர்நிலை சுற்றுச்சூழல் மேலாண்மை, மீன் பதனநுட்பவியல் ஆகிய திட்டங்கள் டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் பொன்னேரியில் வழங்கப்படுகிறது. கூடுதலாக, மீன் மரபியல் மற்றும்

இனப்பெருக்கம், மீன் மருந்தியல் & நச்சுயியல் மற்றும் எம்.பி.ஏ (மீன்வள நிறுவன மேலாண்மை) ஆகியவற்றில் முதுகலை பட்டப்படிப்பு சென்னை வாணியஞ் சாவடியில் உள்ள மீன்வள முதுகலை படிப்பு நிறுவனத்திலும் வழங்கப்படுகிறது. B.F.Sc., பட்டம் பெற்றவர்கள் பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் பொது நுழைவுத் தேர்வின் மூலம் சேர்க்கைக்கு தகுதியுடையவர்கள். இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம், பாடத்திட்டம் M.F.Sc., திட்டத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. நடப்பு கல்வியாண்டு முதல் எம்.டெக். மீன் வளர்ப்பு பொறியியல் மற்றும் மீன் செயல்முறை பொறியியல் ஆகிய திட்டங்கள் மீன்வள பொறியியல் கல்லூரி, நாகப்பட்டினத்தில் வழங்கப்படுகிறது.

### முனைவர். பட்டப்படிப்புகள்

முனைவர். பட்டப்படிப்புகள் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் தூத்துக்குடியில் நீர்வாழ் உயிரின வளர்ப்பியல், நீர்வாழ் உயிரின நலமேலாண்மை, மீன்வள மேலாண்மை, நீர்வாழ் சுற்றுச்சூழல் மேலாண்மை, மீன்தர உறுதிப்பாடு மற்றும் மேலாண்மை, மீன்வளப் பொருளியல் மற்றும் மீன் பதன நுட்பவியல் போன்ற பல்வேறு துறைகளில் வழக்கமான மற்றும் பகுதி நேர முறைகளில் பட்டப்படிப்புகள் வழங்கப்படுகின்றன மற்றும் முனைவர். பட்டப்படிப்பு பொன்னேரியில் உள்ள டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் நீர்வாழ் உயிரின வளர்ப்பியல், நீர்வாழ் உயிரினநல மேலாண்மை, நீர்வளச் சூழலியல் மேலாணமைத்துறை, மீன்வள மேலாண்மை மற்றும் மீன் பதனநுட்பவியல் ஆகிய ஐந்து துறைகளில் பட்டப் படிப்புகளும் வழங்கப்படுகின்றன. M.F.Sc., மற்றும் Ph.D., பட்டங்களைப் பெறுவதற்கு பதிவு செய்யப்பட்ட மாணவர் 10.0 இல் 6.5 ஆகக் குறைந்தபட்ச ஒட்டு மொத்ததரப் புள்ளி சராசரியை (OGPA) பெற்றிருக்க வேண்டும். மீன் ஊட்டச்சத்து மற்றும் தீவனதொழில்நுட்பம், மீன் உயிரிதொழில்நுட்பம், மீன் மருந்தியல் மற்றும் நச்சுயியல் மற்றும் வாழ்க்கை அறிவியல் ஆகிய முனைவர். பட்டப்படிப்புகள் மீன்வள முதுகலைபட்டப் படிப்பு நிறுவனம், ஓஎம்ஆர், சென்னையில் வழங்கப்படுகிறது.

### 4.1.4. மாணவர் சேர்க்கை

### இளநிலை பட்டப்படிப்பு

இளநிலை மீன்வள பட்டப்படிப்புகளில் சேர்வதற்கு தகுதி வாய்ந்த விண்ணப்பத்தாரர்களிடமிருந்து இணையதளம் வாயிலாக 26.09.2020 முதல் 26.10.2020 வரை விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

| வ. எண். | பட்டப்படிப்பு | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இளநிலை மீன்வள அறிவியல் | 1655 |
| 2 | இளநிலை மீன்வளப் பொறியியல் | 448 |
| 3 | இளநிலை ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் | 111 |
| 4 | இளநிலை உயிர் தொழில்நுட்பவியல் | 173 |
| 5 | இளநிலை உணவு தொழில்நுட்பவியல் | 223 |
| 6 | இளநிலை மீன்வள வணிக மேலாண்மை | 72 |
| 7 | இளநிலை தொழில்சார் மீன்பதன தொழில்நுட்பவியல் | 111 |
| 8 | இளநிலை தொழில்சார் நீர்வாழ் உயிரின வளர்ப்பு | 89 |
| 9 | இளநிலை தொழில்சார் மீன்பிடி தொழில்நுட்பவியல் | 59 |
| 10 | இளநிலை நீர்வாழ் உயிரின நலமேலாண்மை | 89 |
| | மொத்தம் | 3030 |

விளையாட்டு வீரர்களுக்கான சிறப்புப்பிரிவின் கீழ் விண்ணப்பத்திருந்த மாணவர்களின் விளையாட்டுச் சான்றிதழ்கள் 27.10.2020 மற்றும் 28.10.2020 அன்று சரிபார்க்கப்பட்டது. மேலும், கல்வித்துறையிடமிருந்து 2020–21–ம் ஆண்டு மேல்நிலைப் பள்ளி பயின்ற மாணவர்களின் மதிப்பெண்கள் விவரங்கள் பெறப்பட்டு அவற்றை இவ்வருடம் விண்ணப்பித்த மாணவர்களோடு ஒப்பிடு செய்யப்பட்டு தரவரிசைப்பட்டியல் 01.11.2020 அன்று பல்கலைக்கழக துணை வேந்தர் அவர்களால் வெளியிடப்பட்டது.






2020–21–ம் கல்வியாண்டிற்கான இளநிலை பட்டப் படிப்புகளில் மாணவர்களை தேர்ந்தெடுக்க சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு 07.11.2020 அன்று தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தில் வைத்து நடைபெற்றது. இப்பிரிவின் கீழ் தகுதியான விளையாட்டு வீரர்கள், முன்னாள் இராணுவத்தினரின் குழந்தைகள், மீனவ குழந்தைகள், உடல் ஊனமுற்றோர் மற்றும் தொழிற்பிரிவில் பயின்றோர் தேர்வு செய்யப்பட்டனர். மீன்வள இளநிலை பட்டப்படிப்பில் 18 மாணவர்களுக்கும் மீன்வள பொறியியல் பட்டப்படிப்பில் 1 மாணவிக்கும் சேர்க்கை ஆணை வழங்கப்பட்டது.

இவ்வருடம் முதன் முறையாக இணையதள வழியிலான கலந்தாய்வானது அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது. நான்கு இணையதள கலந்தாய்வானது கீழ்கண்ட நாட்களில் நடைபெற்றது.

| வ. எண். | | இணையதள கலந்தாய்வு நடைபெற்ற நாள் |
|---|---|---|
| 1 | முதல் இணையதள கலந்தாய்வு | 09.11.2020 முதல் 11.11.2020 வரை |
| 2 | இரண்டாம் இணையதள கலந்தாய்வு | 18.11.2020 முதல் 20.11.2020 வரை |
| 3 | மூன்றாம் இணையதள கலந்தாய்வு | 09.12.2020 முதல் 12.12.2020 வரை |
| 4 | நான்காம் இணையதள கலந்தாய்வு | 22.01.2021 முதல் 25.01.2021 வரை |

மேலும், இவ்வருடம் இளநிலை மீன்வள அறிவியல் பிரிவில் 12 இருக்கைகள், இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்திற்கு ஒதுக்கப்பட்டது. இந்த இடங்களுக்கான சேர்க்கை அகில இந்திய நுழைவுத்தேர்வின் மூலம் நடைபெற்றது. இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்–திற்கான தேசிய தேர்வு வாரியம் மூலம் தகுதிபெற்ற மாணவர்களின் சான்றிதழ்கள் இணையதளம் வாயிலாக சரிபார்க்கப்பட்டு தேர்வு செய்யப்பட்டனர். ஆனால், தேர்வு செய்யப்பட்ட எந்த மாணவர்களும் கல்லூரியில் சேராத காரணத்தால் அந்த 12 இருக்கைகளும் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் விதியின் படி தமிழ்நாடு மாணவர்களைக் கொண்டு நிரப்பப்பட்டது. மேலும், வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான கலந்தாய்வு 03.12.2021 அன்று பல்கலைக்கழகத்தில் வைத்து நடத்தப்பட்டது. மொத்தம் 8 மாணவர்கள் இப்பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

இளநிலை பட்டப்படிப்புகளில் சேர்க்கப்பட்ட மொத்த மாணவர்களின் விவரங்கள் பின்வருமாறு,

| வ. எண் | பட்டப்படிப்புகள் | சேர்க்கப்பட்ட மாணவர்களின் விவரங்கள் | | | | | | | | | | | மாநிலத்திற்குள் | வெளி மாநிலத்தவர் | வெளி நாட்டினவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தமிழ்நாடு | ஐசி எ ஆர் | மீனவர் | வெளி நாடு வாழ் இந்தியர் | வெளி நாட்டினவர் | வெளி மாநிலத்தவர் | அந்தமான் நிக்கோபார் | காஷ்மீர் | மொத்தம் | ஆண் | பெண் | | | |
| 1 | இளநிலை மீன்வள அறிவியல் | | | | | | | | | | | | | | |
| | தூத்துக்குடி | 40 | – | 2 | 4 | – | – | 1 | – | 47 | 17 | 30 | 45 | 2 | – |
| | பொன்னேரி | 40 | – | 2 | 2 | – | – | 1 | – | 45 | 25 | 20 | 43 | 1 | 1 |
| | தலைஞாயிறு | 40 | – | 2 | 2 | – | – | – | – | 44 | 18 | 26 | 44 | – | – |
| | **மொத்தம்** | 120 | – | 6 | 8 | – | – | 2 | – | 136 | 60 | 76 | 132 | 3 | 1 |
| 2 | இளநிலை மீன்வளப் பொறியியல் | 26 | – | 1 | – | – | – | – | – | 27 | 14 | 13 | 27 | – | – |
| 3 | இளநிலை ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் | 9 | – | – | – | – | – | – | – | 9 | 5 | 4 | 9 | – | – |
| 4 | இளநிலை உயிர் தொழில்நுட்பவியல் | 23 | – | – | – | – | 2 | – | – | 25 | 10 | 15 | 23 | 2 | – |
| 5 | இளநிலை உணவு தொழில்நுட்பவியல் | 18 | – | – | – | – | – | 1 | – | 19 | 12 | 7 | 19 | – | – |
| 6 | இளநிலை மீன்வள வணிக மேலாண்மை | 16 | – | – | – | – | – | – | – | 16 | 12 | 4 | 16 | – | – |
| 7 | இளநிலை மீன்பதன தொழில்சார்தொழில் நுட்பவியல் | 12 | – | – | – | – | – | – | – | 12 | 7 | 5 | 12 | – | – |
| 8 | இளநிலை தொழில்சார் நீர்வாழ் உயிரின வளர்ப்பு | 17 | – | – | – | – | – | – | – | 17 | 10 | 7 | 17 | – | – |
| 9 | இளநிலை தொழில்சார் மீன்பிடி தொழில்நுட்பவியல் | 10 | – | – | – | – | – | – | – | 10 | 8 | 2 | 10 | – | – |
| 10 | இளநிலை நீர்வாழ் உயிரின நலமேலாண்மை | 16 | – | – | – | – | – | – | – | 16 | 13 | 3 | 16 | – | – |
| **மொத்தம்** | | 267 | – | 7 | 8 | – | 2 | 3 | – | 287 | 151 | 136 | 281 | 5 | 1 |

2020–21–ம் ஆண்டிற்கான இளநிலை பட்டப்படிப்புகளுக்கான முதல் பருவ வகுப்புகள் 20.01.2021 அன்று தொடங்கப்பட்டது. மேலும், இக்கல்வியாண்டிற்கான இளநிலை மாணவர் சேர்க்கை 09.03.2021 அன்று முடிவுற்றது.

## முதுநிலை மற்றும் முனைவர். பட்டப்படிப்புகள்

முதுநிலை மீன்வள அறிவியல், மீன்வள தொழில்நுட்பம் மற்றும் முனைவர். பட்டப்படிப்புகளில் சேர்வதற்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து இணையதளம் வாயிலாக 01.11.2020 முதல் 27.11.2020 வரை விண்ணப்பங்கள் பெறப்பட்டன. மொத்தம் 68 விண்ணப்பங்கள் முதுநிலை மீன்வள அறிவியல் பட்டப்படிப்பிற்கும் 6 விண்ணப்பங்கள் முதுநிலை மீன்வள பொறியியல் பட்டப்படிப்பிற்கும், 49 விண்ணப்பங்கள முனைவர். பட்டப்படிப்பிற்கும் பெறப்பட்டன. விண்ணப்பித்த மாணவர்களின் சான்றிதழ்கள் 17.12.2020 அன்று சரிபார்க்கப்பட்டு நுழைவுத்தேர்வுக்கு தகுதியானவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டது.

2020–21–ம் கல்வியாண்டிற்கான முதுநிலை மீன்வள அறிவியல், மீன்வளப் பொறியியல் மற்றும் முனைவர். பட்டப்படிப்புகளுக்கான நுழைவுத்தேர்வு மற்றும் கலந்தாய்வானது முறையே 21.12.2020 மற்றும் 22.12.2020 ஆகிய நாட்களில் பொன்னேரி டாக்டர். எம்ஜிஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. துறை வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட மற்றும் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு,

பட்ட மேற்படிப்புக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இருக்கைகளின் விவரங்கள்

| வ. எண். | முதுநிலை பட்டப்படிப்புகளின் துறைகள் | தூத்துக்குடி | | பொன்னேரி | | வாணியஞ்சாவடி | | நாகப்பட்டினம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | எம்.எப். எஸ்சி. | பிஎச்டி | எம்.எப். எஸ்சி. | பிஎச்டி | எம்.எப். எஸ்சி. | பிஎச்டி | எம்.டெக் |
| 1 | நீர்வாழ் உயிரின வளர்ப்பியல் | 6+2* | 3+2* | 3+1* | 4 | – | – | – |
| 2 | நீர்வாழ் உயிரின நலமேலாண்மை | 3+1* | 2 | 2 | 1 | – | – | – |
| 3 | நீர்நிலை சுற்றுச்சூழல் மேலாண்மை | 2+1* | 2 | 2 | 2 | – | – | – |
| 4 | மீன்வளப் பொருளியியல் | 2+1* | 3 | – | – | – | – | – |
| 5 | மீன்வளப் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் | 3 | 3 | – | – | – | – | – |
| 6 | மீன்வள விரிவாக்கம் | 2+1* | 3 | – | – | – | – | – |
| 7 | மீன் பதன நுட்பவியல் | 1+1* | 1 | 2 | 1 | – | – | – |
| 8 | மீன்வள ஆதார மேலாண்மை | 2+1* | 2+1* | 2 | 1 | – | – | – |
| 9 | மீன்தர உறுதிப்பாடு மற்றும் மேலாண்மை | 5 | 3 | – | – | – | – | – |
| 10 | மீன் ஊட்டச்சத்து மற்றும் ஊட்ட தொழில்நுட்பவியல் | – | – | – | – | 2 | 2 | – |
| 11 | மீன் உயிரியல் தொழில்நுட்பம் | – | – | – | – | 4 | 4 | – |
| 12 | மீன் மரபியல் மற்றும் இனப்பெருக்கம் | – | – | – | – | 2 | 1 | – |
| 13 | மீன் மருந்தியல் மற்றும் நச்சுயியல் | – | – | – | – | 4 | 1 | – |
| 14 | நீர்வாழ் உயிரின வளப்ப்பு தொழில்நுட்பவியல் | – | – | – | – | – | – | 2 |
| 15 | மீன் பதனதொழில்நுட்பவியல் | – | – | – | – | – | – | 4 |
| | **மொத்தம்** | 34 | 25 | 12 | 9 | 12 | 8 | 6 |
| | **மொத்த ஒதுக்கீடு** | 106 | | | | | | |

***ICAR Quota***

சேர்க்கப்பட்ட மாணவர்களின் விவரங்கள்

| வ. எண். | முதுநிலை பட்டப்படிப்புகளின் துறைகள் | தூத்துக்குடி | | பொன்னேரி | | வாணியஞ்சாவடி | | நாகப்பட்டினம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | எம்.எப். எஸ்சி. | பிஎச்டி | எம்.எப். எஸ்சி. | பிஎச்டி | எம்.எப். எஸ்சி. | பிஎச்டி | எம்.டெக் |
| 1 | நீர்வாழ் உயிரின வளர்ப்பியல் | 6+2* | 1 | 4 | 3 | – | – | – |
| 2 | நீர்வாழ் உயிரின நலமேலாண்மை | 3+1* | 2 | 2 | 1 | – | – | – |
| 3 | நீர்நிலை சுற்றுச்சூழல் மேலாண்மை | 2 | 1 | 2 | – | – | – | – |
| 4 | மீன்வளப் பொருளியியல் | – | 2 | – | – | – | – | – |
| 5 | மீன்வளப் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் | 3 | 2 | – | – | – | – | – |
| 6 | மீன்வள விரிவாக்கம் | 1* | 2 | – | – | – | – | – |
| 7 | மீன் பதன நுட்பவியல் | 1 | 1 | 2 | – | – | – | – |
| 8 | மீன்வள ஆதார மேலாண்மை | 2 | 2 | 2 | 1 | – | – | – |
| 9 | மீன்தர உறுதிப்பாடு மற்றும் மேலாண்மை | 1 | 1 | – | – | – | – | – |
| 10 | மீன் ஊட்டச்சத்து மற்றும் ஊட்ட தொழில்நுட்பவியல் | – | – | – | – | 2 | – | – |
| 11 | மீன் உயிரியல் தொழில்நுட்பம் | – | – | – | – | 1 | 3 | – |
| 12 | மீன் மரபியல் மற்றும் இனப்பெருக்கம் | – | – | – | – | 1 | 1 | – |
| 13 | மீன் மருந்தியல் மற்றும் நச்சுயியல் | – | – | – | – | 1 | – | – |
| 14 | நீர்வாழ் உயிரின வளப்பு தொழில்நுட்பவியல் | – | – | – | – | – | – | 2 |
| 15 | மீன் பதன தொழில்நுட்பவியல் | – | – | – | – | – | – | 1 |
| | மொத்தம் | 22 | 14 | 12 | 5 | 5 | 4 | 3 |
| **மொத்தம்சேர்க்கப்பட்ட மாணவர்கள்** | | 65 | | | | | | |

***ICAR admitted candidate***

சேர்க்கப்பட்ட மாணவர்களின் (ஆண்/பெண்) விவரங்கள்

| வ. எண் | கல்லூரி | எம்.எப்.எஸ்சி. | | | எம்.டெக் | | | பிஎச்டி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1 | தூத்துக்குடி | 10 | 12 | 22 | – | – | – | 9 | 5 | 14 |
| 2 | பொன்னேரி | 4 | 8 | 12 | – | – | – | 2 | 3 | 5 |
| 3 | நாகப்பட்டினம் | – | – | – | 1 | 2 | 3 | – | – | – |
| 4 | வாணியஞ்சாவடி | 4 | 1 | 5 | | | | 3 | 1 | 4 |
| | மொத்தம் | 18 | 21 | 39 | 1 | 2 | 3 | 14 | 9 | 23 |

| வ.எண் | பட்டப்படிப்புகள் | மாநிலத்திற்குள் | வெளிமாநிலத்தவர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | **எம்.எப்.எஸ்சி.** | | | |
| | தூத்துக்குடி | 16 | 6 | 22 |
| | பொன்னேரி | 10 | 2 | 12 |
| | வாணியஞ்சாவடி | 1 | 4 | 5 |
| | மொத்தம் | 27 | 12 | 39 |
| 2 | **எம்.டெக்** | 3 | – | 3 |
| 3 | **பிஎச்டி** | | | |
| | தூத்துக்குடி | 10 | 4 | 14 |
| | பொன்னேரி | 5 | – | 5 |
| | வாணியஞ்சாவடி | 3 | 1 | 4 |
| | **மொத்தம்** | 18 | 5 | 23 |
| | **மொத்தம்** | 48 | 17 | 65 |

### முதுநிலை மீன்வள வணிக மேலாண்மை

முதுநிலை மீன்வள வணிக மேலாண்மை பட்டப் –படிப்பில் சேர்வதற்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர் –களிடமிருந்து இணையதளம் வாயிலாக 14.10.2020 முதல் 10.11.2020 வரை விண்ணப்பங்கள் பெறப்பட்டன. மொத்தம் 19 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. பெறப்பட்ட விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு அவற்றில் தகுதியானவர்கள் மட்டும் இணையதள கலந்தாய்விற்கு அழைக்கப்பட்டனர். இணையதள கலந்தாய்வானது 18.10.2020 அன்று நடைபெற்றது. அதில் முதல்வர் (அடிப்படை அறிவியல்), முதுநிலை மீன்வள வணிக மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைவர், முதுநிலை மாணவர் சேர்க்கைகுழு ஆகியோர் பங்குபெற்றனர். விண்ணப்பத்தாரர்களின் தரவரிசைப்பட்டியல் தகுதி மற்றும் திறன் அடிப்படையில் வெளியிடப்பட்டது. 18 விண்ணப்பத்தாரர்கள் அழைக்கப்பட்டதில் 14 மாணவர்கள் இணையதள கலந்தாய்வில் கலந்து கொண்டனர். அதில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் தகுதியின் அடிப்படையில் சேர்க்கை ஆணை வழங்கப்பட்டது. அவற்றில் 6 மாணவர்கள் மட்டுமே இப்பட்டப்படிப்பில் சேர்ந்துள்ளனர்.

| வ. எண். | கல்லூரி | ஒதுக்கீடு | சேர்ந்தவர்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | மொத்தம் |
| 1 | வாணியஞ்சாவடி | 30 | 4 | 2 | 6 |

### சேர்க்கப்பட்ட மாணவர்களின் விவரங்கள்

| வ. எண். | பட்டப்படிப்புகள் | மாநிலத்திற்குள் | வெளி மாநிலத்தவர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | முதுநிலை மீன்வள வணிக மேலாண்மை | 3 | 3 | 6 |

2020–21–ம் ஆண்டிற்கான முதுநிலை மற்றும் முனைவர். பட்டப்படிப்புகளுக்கான முதல் பருவ வகுப்புகள் 20.01.2021 அன்று தொடங்கப்பட்டது. மேலும், இக்கல்வியாண்டிற்கான முதுநிலை மாணவர் சேர்க்கை 19.02.2021 அன்று முடிவுற்றது.





### 4.1.5. வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகை

1. இளநிலை பயிலும் மாணவர்களுக்கு அரசால் வழங்கப்படும் வகுப்பு வாரியான கல்வி உதவித் தொகை
2. இளநிலை பயிலும் மாணவர்களுக்கு அரசால் வழங்கப்படும் பட்டுக்கோட்டை அழகிரி அறக்கட்டளை உதவித்தொகை
3. இளநிலை, முதுநிலை மற்றும் முனைவர். படிப்பு பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் நந்திஷா அறக்கட்டளை உதவித்தொகை
4. தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக உதவித்தொகை – முதுநிலை மற்றும் முனைவர். பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு
5. இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தால் (ICAR) வழங்கப்படும் தேசிய திறமை உதவித்தொகை
6. இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தால் (ICAR) வழங்கப்படும் இளநிலை ஆராய்ச்சி/முதுநிலை ஆராய்ச்சி உதவித்தொகை

முதுநிலை பட்டப்படிப்பியல் பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ. 4000/- மற்றும் முனைவர். பட்டப்படிப்பில் பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ. 5000/-, கல்வி உதவி தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

### 4.1.6. அறக்கொடைகள் (Endowments)

மாணவ/மாணவியரின் கல்வித்திறனை மேம்படுத்தவும் திறமைகளை நிருபிக்கவும் ஐம்பது அறக்கொடைகள் நிறுவப்பட்டுள்ளது. கல்வியில் சிறந்த மாணவ/மாணவியர்களுக்கு இந்த அறக்கொடைகள் வழங்கப்படுகிறது.

#### அ) நன்கொடைகளின் பட்டியல் (விருதுகள்/பதக்கங்கள்)

1. பல்கலைக்கழகத்தில் முதல் தரவரிசையைப் பெற்றதற்காக TNFU தங்கப் பதக்கம்.
2. சிறந்த மாணவருக்கான பேராசிரியர் ஜி.ரங்கசாமியின் பரிசு.
3. சிறந்த மாணவருக்கான TNFU அலுமினி சங்கம் பதக்கம்.
4. சிறந்த மாணவருக்கான திருமதி T. கோபாலன் நாயர் நினைவுப் பதக்கம்.
5. சிறந்த பெண் மாணவிக்கான புரட்சித் தலைவி டாக்டர். ஜெ.ஜெயலலிதா நன்கொடை விருது.
6. படித்து முடித்து செல்லும் இளநிலை (பி.எப்.எஸ்.சி.) மாணவருக்கான பராசக்தி வைத்திலிங்கம் ரொக்க பரிசு.
7. திட்டத்தில் சிறந்த வெளிச்செல்லும் மாணவருக்கான மாரிமுத்து விஜயலட்சுமி நன்கொடை.
8. இப்பல்கலைக்கழகத்தில் முதல் தரவரிசையைப் பெற்றதற்காக TNFU தங்கப் பதக்கம்.
9. சிறந்த எம்.எப்.எஸ்.சி., மாணவருக்கான பேராசிரியர் G.ரங்கசாமியின் பரிசு.
10. சிறந்த எம்.எப்.எஸ்.சி., மாணவருக்கான சர்தார் பூட்டா சிங் பதக்கம்.
11. எம்.எப்.எஸ்.சி, யில் சிறந்த மாணவிக்கான புரட்சித் தலைவி டாக்டர். ஜெ ஜெயலலிதாஅறக்கட்டளை விருது.
12. சிறந்த எம்.எப்.எஸ்.சி., நீர்வளச் சூழலியல் மேலாணமைத்துறை மாணவருக்கான பிரதம விருந்தினர் டாக்டர். எஸ்.எல். மேத்தா விருது
13. மீன்வளமேலாண்மையில் சிறந்த எம்.எப்.எஸ்.சி., மாணவருக்கான டாக்டர். V.ராஜகோபாலன் விருது.
14. நீதியரசர் எம்.எம். பாத்திமா பீவியின் சிறந்த எம்.எஃப். எஸ்சி., மீன் வளர்ப்பு மாணவருக்கான விருது.
15. TANUVAS அதிபர் நீதியரசர் எம். எம். பாத்திமா பீவியின் சிறந்த எம்.எஃப்.எஸ்சி மீன் பதப்படுத்தும் தொழில்நுட்பம் மாணவருக்கான விருது.
16. பிஎச்.டியில் பல்கலைக்கழகம் முதல் தரவரிசையைப் பெற்றதற்காக தங்கப் பதக்கம்.
17. சிறந்த வெளிச் செல்லும் பெண் மாணவிக்கான டாக்டர். T. M. சமோச்சாதங்கப் பதக்கம்.
18. எம்.எஃப்.எஸ்சியில் சிறந்த ஆய்வறிக்கைக்கான டாக்டர். T. M சமோச்சாதங்கப் பதக்கம். (மீன் வளர்ப்பு).
19. எம்.எஃப்.எஸ்சியில் சிறந்த வெளிச்செல்லும் மாணவருக்கான டாக்டர். டி.எம். சமோச்சாதங்கப் பதக்கம். (மீன் உயிரிதொழில் நுட்பம்).
20. பிஎச்டியில் சிறந்த ஆய்வறிக்கைக்கான டாக்டர். டி.எம். சமோச்சாதங்கப் பதக்கம். (மீன் வளர்ப்பு).
21. எம்.எஃப்.எஸ்சியில். இல் சிறந்த வெளிச்செல்லும் பெண் மாணவிக்கான வித்யா சந்தான கிருஷ்ணன் விருது.
22. பி.எப்.எஸ்.சி.,யில் அதிகமதிப்பெண் பெற்ற மாணவருக்கான போசைடன் பயோடெக் விருது.
23. பி.டெக் இல் சிறந்த மாணவருக்கான இந்தியன் வங்கி எண்டோமெண்ட் விருது, (உயிரிதொழில் நுட்பவியல்).
24. மிஸ் எப்பென்டஃப இந்தியா பிரைவேட் லிமிடேட் எம். எஃப், எஸ்.சி இல் சிறந்த மாணவருக்கான தங்கப் பதக்கம். (மீன் மரபியல் மற்றும் இனப்பெருக்கம்).
25. சிறந்த பி.–எஃப்.எஸ்.சி மாணவருக்கான ஆர். சுவாமிநாதன் விருது.
26. எம்.எஃப்.எஸ்சியில் சிறந்த மாணவிக்கான திருமதி பழனியம்மாள் வேலப்பன் விருது. (மீன்பிடி பொருளாதாரம் மற்றும் விரிவாக்கம்).
27. எம்.எஃப்.எஸ்சியில் சிறந்த மாணவருக்கான M/s. R.R.Thulasi Builders India (P) Ltd விருது. (மீன்பிடி தொழில்நுட்பம் மற்றும் மீன்பிடிபொறியியல்).
28. ஸ்ரீ V.V.D.ரவீந்திரன்தங்கப் பதக்கம் – சிறந்த வெளிச் செல்லும் பி.எஃப்.எஸ்.சி மாணவருக்கான விருது.
29. பேராசிரியர் R.பிரபாகரன், சிறந்த வெளிச் செல்லும் பி. எஃப்.எஸ்.சி மாணவருக்கான தங்கப் பதக்கம், மீன் தர உறுதிப்பாடு மற்றும் மேலாண்மைத் துறையில் வழங்கப்படும்.
30. பேராசிரியர் எம்.சி. நந்தீஷா தங்கப் பதக்கம், சிறந்த வெளிச் செல்லும் எம்.எஃப்.எஸ்சி மாணவருக்கான விருது மீன் தர உறுதிப்பாடு மற்றும் மேலாண்மைத் துறை.
31. சிறந்த வெளிச்செல்லும் முனைவர். பட்ட மாணவருக்கான பேராசிரியர் ஐ.கருணாசாகர் தங்கப் பதக்கம். (மீன் தர உறுதிப்பாடு மற்றும் மேலாண்மை).

32. எம்.எஃப்.எஸ்சியில் சிறந்த ஆய்வறிக்கைக்கான DSA–தங்கப் பதக்கம். (மீன் வளர்ப்பு).

33. சிறந்த வெளிச் செல்லும் எம்.எஃப்.எஸ்சி மாணவருக்கான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தங்கப் பதக்கம் (மீன் மருந்தியல் மற்றும் நச்சுயியல்).

34. சிறந்த வெளிச் செல்லும் எம்.எஃப்.எஸ்சி மாணவருக்கான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தங்கப் பதக்கம் (மீன் மரபியல் மற்றும் இனப்பெருக்கம்).

35. சிறந்த வெளிச் செல்லும் எம்.எஃப்.எஸ்சி மாணவருக்கான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தங்கப் பதக்கம் (மீன்வள பொருளாதாரம்).

36. சிறந்த வெளிச்செல்லும் எம்.எஃப்.எஸ்சி மாணவருக்கான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தங்கப் பதக்கம் (மீன்வள விரிவாக்கம்).

37. சிறந்த எம்.எஃப்.எஸ்சி மாணவருக்கான பேராசிரியர் P.ஜெயச்சந்திரன் தங்கப் பதக்கம் (மீன் பதப்படுத்தும் தொழில்நுட்பம்).

38. பி.டெக்., படிப்பில் முதலிடம் பிடித்த மாணவிக்கு M.செல்வம் தங்கப் பதக்கம் (மீன்துறை பொறியியல்).

39. G.விக்டோரியா – சிறந்த மீன்வளர்ப்பு / மீன்பிடி தொழில்நுட்பவியலாளர் விருதுக்கான சுக ஃபெலிக்ஸ் துணைவேந்தர் தங்கப் பதக்கம்.

40. இளங்கலை திட்டங்களில் சிறந்த மீனவர் சமூக மாணவர்கள் பு.ஐ. பீட்டர் ஜெபசிங் தங்கப் பதக்கம்.

41. பிஎச்டியில் சிறந்த மீன்வளர்ப்பு / மீன்பிடி தொழில் நுட்பவியலாளருக்கான ஸ்ரீ பன்வாரிலால் புரோஹித் தங்கப் பதக்கம்.

42. சிறந்த பி.டெக்., மாணவருக்கான டி.என்.ஜே. எஃப்.யூ.வின் திரு. டி.ஜெயக்குமார்–தங்கப்பதக்கம் (மீன்துறை பொறியியல்).

43. திருமதி. டி. ஜெயலட்சுமி மற்றும் திரு.க. துரைராஜ், இளங்கலைபட்டப் படிப்புகளில் மீனவர்களின் சிறந்த மாணவிக்கான தங்கப் பதக்கம்.

44. எம்.எஃப்.எஸ்சி மீன் பதன நுட்பவியயில் சிறந்த ஆய்வறிக்கை மாணவருக்கான பத்மநாபன் செல்லம்மாள் வேலாயுதம் தங்கப் பதக்கம்.

45. கே.வி.நாராயணன் விஜயன் தங்கப் பதக்கம் –எம். எஃப்.எஸ்சி இல் சிறந்த ஆய்வறிக்கை (மீன்வள உயிரியல் மற்றும் வளமேலாண்மை).

46. பி. டெக். (மீன்துறை பொறியியல்) பட்டப்படிப்பில் பல்கலைக் கழகத்தில் முதல்தர வரிசையைப் பெற்றதற்கான தங்கப் பதக்கம்.

47. எம்.எஃப்.எஸ்சி நீர்வாழ் சுற்றுச்சூழல் மேலாண்மையில் சிறந்த ஆய்வறிக்கை மாணவருக்கான டாக்டர். எம். தேவராஜ் தங்கப் பதக்கம்.

48. மீன்வள உயிரியல் மற்றும் வள மேலாண்மை முனைவர். பட்டத்தில் சிறந்த ஆய்வறிக்கை மாணவருக்கான டாக்டர். எம். தேவராஜ் தங்கப் பதக்கம்.

49. மீன் வளர்ப்புத் துறையில் சிறந்த வெளிச்செல்லும் பி. எஃப்.எஸ்.சி மாணவருக்கான உஷாதாண்டவ் ராஜகோபால்சாமி தங்கப் பதக்கம்.

50. சிறந்த பி. எஃப்.எஸ்.சி மாணவருக்கான CPF அகாடமிக் எக்ஸலன்ஸ் விருது (தங்கப் பதக்கம்)

## 4.2. மாணவர் நலன் மற்றும் செயல்பாடுகள்

### 4.2.1. விடுதி

**அ. மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி**

இக்கல்லூரி இரண்டு தங்கும் விடுதிகளைக் கொண்டுள்ளது, பிரதான வளாகத்தில் அமைந்துள்ள ஆண்கள் விடுதி மற்றும் தூத்துக்குடி ஆசிரியர் காலனியில் உள்ள பணியாளர்கள் குடியிருப்பு வளாகத்தில் பெண்கள் விடுதி அமைந்துள்ளது. இரண்டு விடுதிகளுக்கும் தனித்தனி இளநிலை மற்றும் முதுநிலை பிளாக்குகள் உள்ளன. 2019–20 ஆம் ஆண்டில் பல்வேறு பட்டப் படிப்புகளில் பயிலும் 133 ஆண்கள் மற்றும் 127 பெண்கள் அடங்கிய 260 மாணவர்களுக்கு விடுதி தங்குமிடம் வழங்கப்பட்டது. இரண்டு விடுதிகளிலும் உள்ள சமையலறைகள் FSSAI சான்றளிக்கப்பட்டவை. ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிகள் இரண்டும் தனித்தனியாக 'டிவைடிங் சிஸ்டத்தில்' இயங்குகின்றன.

**ஆ. டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரி**

**நிர்வாகம்**

இக்கல்லூரியின் விடுதியானது ஒரு விடுதிக் காப்பாளர், இரண்டு உதவிக் காப்பாளர்கள் (ஆண்–1, பெண்–1) மற்றும் ஒரு உதவியாளரால் நிர்வகிக்கப்படுகிறது.

**விடுதி மாணவர்கள் நலன் மற்றும் செயல்பாடுகள்**

ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிகள் டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் வளாகத்தினுள் அமைந்துள்ளது. இரண்டு விடுதிகளிலும், இளநிலை மற்றும் முதுநிலை மாணவ, மாணவிகள் தனித்தனியாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். விடுதி செயலாளரால் ஒவ்வொரு ஆண்டிலிருந்தும்

பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தந்த விடுதியை நிர்வாகத்தின் நேரடி மேற்பார்வையின் மூலம் பராமரித்து வருகின்றனர்.

### தங்கும் வசதி

இளநிலை மற்றும் முதுநிலை பயிலும் 122 மாணவர்கள், 106 மாணவிகள் (228 மாணவ, மாணவிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்). விடுதி அறைகளில் அனைத்து வசதியுடன் இரண்டு அல்லது மூன்று மாணவர்கள் தங்க வசதி செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | விவரங்கள் | மாணவர் விடுதி | மாணவியர் விடுதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | 122 | 106 | 228 |
| 2. | அறைகளின் மொத்த எண்ணிக்கை | 47 | 47 | 94 |
| 3. | மாணவர்கள் தங்கியுள்ள அறைகள் | 45 | 41 | 86 |
| 4. | காலி அறைகள் | 2 | 6 | 8 |

### உணவு விடுதி மற்றும் உணவு அருந்துதல்

ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதி இரண்டிற்கும் பொதுவான உணவு விடுதி "பகிர்தல் "அடிப்படையில் செயல்பட்டு வருகிறது. உணவக செயலாளரால் ஒவ்வொரு ஆண்டிலிருந்தும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுதி நிர்வாகத்தின் நேரடி மேற்பார்வையில் சீராக நிர்வகித்து வருகின்றனர்

### விடுதி நலக் குழு

விடுதி நலக் குழு, தேவைக்கேற்ப கூடி விடுதியின் கணக்கு மற்றும் உணவக விலைப்பட்டியல் போன்றவற்றை ஆய்வு செய்து சிக்கன, திறமையான மற்றும் தேவையான உத்திகளை மாணவ உணவகத்திற்கு அளித்து செயல்படுத்தி வருகிறது.

### படிப்பக வசதி

மாணவர்களின் உறைவிட வளாகத்தில் தினசரி செய்தித் தாள்கள் மற்றும் வார, மாதாந்திர செய்தி ஏடுகள் அடங்கிய படிப்பக வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தங்கிப் பயிலும் மாணவர்கள், இந்திய ஆட்சிப் பணி, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், வங்கிப்பணி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் வகையில் வருடாந்திர பத்திரிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### பிற வசதிகள்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை கண்டுகளிப்–பதற்கென தனித்தனி அறைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குடிநீருக்காக, பொதுவான உணவு விடுதியில், 500 லி/மணி அளவுடைய தண்ணீர் சுத்திகரிப்பான் நிறுவப்பட்டுள்ளது. மின்சாரம் தடையில்லாமல் கிடைக்க 75KV திறனுடைய ஜெனரேட்டர் அமைக்கப்பட்டுள்ளது. ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதியில் தடையில்லாமல் தண்ணீர் வழங்க, உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டள்ளன. பூப்பந்து விளையாட்டு வசதிகள் இரு விடுதிகளிலும் செய்து தரப்பட்டுள்ளன. வெளிநாட்டு மாணவர்களுக்கென, குளிர்சாதன பெட்டி, குளிர்சாதனஅறை, மின்காந்த அடுப்பு ஆகிய கூடுதல் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

### மாணவர் விடுதி

மாணவர் விடுதியில் தற்போது 122 இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்கள் தங்கியிருக்கின்றனர். 2 டான்சானியா மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

### மாணவியர் விடுதி

இந்த விடுதியில் மொத்தம் 106 இளநிலை மற்றும் முதுநிலை மாணவிகள் தங்கியுள்ளனர். தமிழகத்தை சேர்ந்த மாணவிகள் தவிர, ஆந்திராவை சேர்ந்த 2 பேர், அந்தமானிலிருந்து 2 பேர், மற்றும் உத்தரகாண்ட் மாநிலத்தை சேர்ந்த 2 பேர் தங்கிப் பயில்கின்றனர்.

இரு விடுதிகளிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் அவ்வப்போது கொசு மருந்து தெளிக்கப்பட்டது. விடுதியில் தங்கியுள்ள மாணவிகள் உடல்நிலையைக் கவனிக்க மருத்துவர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### 2020–21 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட புதிய வசதிகள்



மாணவர் விடுதியில் பொறுத்தப்பட்ட தொலைக்காட்சி



விடுதியில் பொறுத்தப்பட்ட தண்ணீர் சூடாக்கி



முதல் தளத்தில் கொசுவலை பொருத்தப்பட்ட ஜன்னல்



நாப்கின் எரியூட்டும் கருவி

**மற்றவைகள்**

- ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிகள் ஏப்ரல் 2020 ல் "கொரோனா தனிமைப்படுத்தல்" பிரிவாக மாற்றப்பட்டு, கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க தயார் நிலையில் வைக்கப்பட்டது.
- மாணவர் விடுதிக்கு புதிய நீர்மூழ்கி மோட்டார் வாங்கப்பட்டுள்ளது.

### இ. டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தலைஞாயிறு

இக்கல்லூரியின் மாணவர்கள் தங்கும் விடுதியானது வேட்டைக்காரனிருப்பு மற்றும் தலைஞாயிறு பகுதிகளில் உள்ள வாடகை கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கி வந்தது. தற்போது கல்லூரியில் புதிதாக கட்டப்பட்ட விடுதி கட்டிடத்தில் 08.02.2021 முதல் மாணவர்கள் தங்கி பயின்று வருகின்றனர். மொத்தம் 63 மாணவர்கள் மற்றும் 73 மாணவிகள் உள்ளனர்.

### ஈ. மீன்வளப்பட்ட மேற்படிப்பு நிலையம், வாணியஞ்சாவடி, சென்னை

இருபாலார் மாணவருக்கும் புதிய விடுதி கட்டிடம் இக்கல்லூரில் அமைந்துள்ளது. இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பை பயிலும் 54 ஆண்கள் மற்றும் 54 பெண்கள் உள்ளடக்கிய 108 மாணவர்களுக்கு தங்கும் வசதி வழங்கப்பட்டுள்ளது. மாணவர்கள் பாதுகாவலர் மற்றும் துணை பாதுகாவலர்களால் கண்காணிக்கப்படுகிறார்கள்.



### உ. மீன் ஊட்டச்சத்து மற்றும் உணவு தொழில்நுட்பக் கல்லூரி

இளநிலை மாணவர் விடுதியில் 2019–20 ஆண்டைச் சேர்ந்த 14 மாணவர்களுக்கான தங்கும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மூத்த மாணவர் விடுதியில் 2018–ல் 2018–19 ஆண்டு 19 மாணவர்களுக்காக நிறுவப்பட்டது. அனைத்து விடுதி வளாகங்களிலும் சிசிடிவி கண்காணிப்பு ஏற்படுத்தப்பட்டது.

### ஊ. நீருரியி வளர்ப்பு தொழில் காப்பகம் மற்றும் பயிற்சி இயக்ககம், முட்டுக்காடு, சென்னை

ஆண் மாணவர்கள் தனியார் கட்டிடத்திலும், பெண் மாணவர்கள் IFPGS விடுதியிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

### எ. தொழில் மற்றும் மீன்பிடி தொழிற்பயிற்சி இயக்ககம், ராமநாதபுரம்

ராமநாதபுரம், பிறப்பனவலசையில் வாடகைக் கட்டடத்தில் ஆண்களுக்கான விடுதி இயங்கி வருகிறது. பெண்கள் விடுதியில் மொத்தம் 9 பெண்கள் தங்கி உள்ளனர். உச்சிப்புலி அருகே மாணவிகளுக்கு நிரந்தர தங்கும் விடுதி கட்டுவதற்கு ஏற்ற அரசு நிலம் தேடப்பட்டு வருகிறது.

## 4.2.2. மாணவர்களின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வழிகாட்டுதல் பிரிவு

### அ. மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி

இக்கல்லூரியில் பல்வேறு தனியார் நிறுவனங்களுக்கு மீன்வள பட்டதாரிகளை பணியில் அமர்த்த உள்வளாகத் தேர்வு நடைபெற்றது. இக்குழு அனைத்து வேலையில்லா இளங்கலை மற்றம் முதுகலை மீன்வளப் பட்டதாரிகளின் தகவல்களை கணினியில் சேகரித்து வைத்து தேவைப்படும் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கின்றது. மேலும், இக்குழு மேற்படிப்புகளுக்கான தகவல்களை மாணவர்களின் நலனுக்கென அளிக்கிறது. இந்த ஆண்டு இக்குழு இதுவரை 4 தனியார் நிறுவனங்களுக்கு பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு சம்பந்தமாக தொடர்பு கொண்டுள்ளது. குறிப்பாக சி.பி.அக்குவா (பிரைவேட்) லிமிடேட் இணைய வழி சேவை மூலமாக விருப்பம் உள்ள மாணவர்களுக்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. இதில் மொத்தம் 50 மாணவர்கள் கலந்து கொண்டனர்



**தேர்ச்சி பெற்ற மொத்த மாணவர்கள் 930 (626 ஆண்கள் + பெண்கள் 304)**

| துறைகள் | எண்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசு மீன்வளத் துறை | 139 |
| தமிழ்நாடு அரசு சேவை நிர்வாகம் | 4 |
| மாநில வேளாண் பல்கலைக்கழகம் (SAUs) | 105 |
| ICAR நிறுவனங்கள் | 70 |
| அயல் நாடுகள் | 104 |
| பொதுத்துறை | 51 |
| தனியார் துறை | 158 |
| சுய வேலைவாய்ப்பு | 79 |
| உயர் கல்வி | 207 |
| TNPSC / UPSC தயாரிப்பு | 9 |
| முடிவு செய்யப்படவில்லை | 4 |
| மொத்தம் | 930 |

இவ்வாண்டில் இக்குழுவானது கீழ்க்காணும் தனியார் நிறுவனங்களை தொடர்பு கொண்டு மாணவர்களின் வேலை வாய்ப்புக்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

1. சி.பி. அக்குவா (பிரைவேட்) லிமிடேட் ,சென்னை – 9940013015
2. முத்தழகு மீன் பண்ணை, தேனிமாவட்டம் – 7373747583
3. மெரைன் காட்ரோ எக்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட் – 9823120179
4. கெமின் அக்குவாசயின்ஸ் பிரைவேட் லிமிடெட் – 9941394171
5. சென்லாங் அக்குவாபிரைவேட் லிமிடெட்

இக்கல்லூரியின் பி.எஃப்.எஸ்ஸி. பட்டம் பெற்ற மாணவர்களுக்கு மாநில அரசில் மீன்வளத் துறையில், மீன்வள உதவி ஆய்வாளராகவும், மீன்வள ஆய்வாளராகவும் மற்றும் தமிழ்நாடு மீன்வள மேம்பாட்டு கழகத்தில் உதவி மேலாளராகவும் தமிழ்நாடு டாக்டர். ஜெ.ஜெயலலிதா மீன்வள பல்கலைக்கழகத்தில் உள்ள உறுப்பு கல்லூரிகளிலும் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் மீன்வள உதவியாளர்களாகவும் மற்றும் பண்ணை மேலாளராகவும் பணிசெய்வதற்கு வாய்ப்புகள் உள்ளது. மத்திய மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மீன்வள ஆராய்ச்சி நிலையங்களில் தொழிட்நுட்ப அலுவலர் பணியில் அமர வாய்ப்புகள் உள்ளது.

இக்கல்லூரியில் எம்.எஃப்.எஸ்ஸி மற்றும் முனைவர். பட்டப்படிப்பு பெற்ற மாணவர்களுக்கு மாநில அரசின் கீழ் இயங்கும் தமிழ்நாடு மீன் வள துறையில் மீன்வள ஆய்வாளராகவும், உதவி இயக்குநராகவும் பணி செய்வதற்கு வாய்ப்புகள் உள்ளன. மேலும், மீன்வள பல்கலைக்கழகங்களின் உறுப்பு மீன்வளக் கல்லூரியில் உதவி பேராசிரியராகவும் பணி செய்வதற்கு வாய்ப்புகள் உள்ளன. இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் கீழ் இயங்கும் மத்திய மீன் வள பல்கலைக்கழகத்தின் தொடர்புடைய பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களில் வேளாண் ஆராய்ச்சி விஞ்ஞானியாகவும் (ஏ.ஆர்.எஸ்) மற்றும் வேளாண்மை அறிவியல் மையத்தில் தொழில்நுட்ப வல்லுநராகவும் பணிசெய்வதற்கு வாய்ப்புள்ளது.

தனியார் துறையில் மற்றும் பொதுத்துறை வங்கிகளில் தொழில்நுட்ப அலுவலர் மேலும் தனியார் மீன் பண்ணைகளில் மேலாளராகவும், மீன் தீவன ஆலையில் பல்வேறு தொழில் நுட்பபிரிவில் வல்லுநராகவும் மற்றும் ஆய்வகங்களிலும் பணி செய்வதற்கு வாய்ப்புள்ளது. ராஜீவ்காந்தி நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையத்தில் உதவிதிட்ட மேலாளர், திட்டமேலாளர் மற்றும் உதவிதொழில் நுட்பமேலாளர் என பல்வேறு பணிகளில் பணி செய்வதற்கு வாய்ப்புகள் உள்ளன.

தனியார் மீன்பதன தொழிற்சாலைகளில் தரக்கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் வாய்ப்புகள் உள்ளது. கடல்சார் மீன் உணவு பொருள் ஏற்றுமதி கழகத்தில் உதவி இயக்குநராகவும் அதன் தொழில் நுட்பபிரிவான நெட்பிஸ்–ல் மாநில ஒருங்கிணைப்பாளராகவும் பணி செய்ய வாய்ப்புள்ளது.

இது மட்டும் இல்லாமல் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் கீழ் இயங்கும் மத்திய மீன்வள ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் மாநில வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள மீன்வளப் பல்கலைக்கழக கல்லூரிகளில் செயல்படும் பல்வேறு ஆராய்ச்சி மற்றும் அரசு சார்ந்த மீன்வள திட்டங்களில் இளநிலை மற்றும் முதுநிலை ஆராய்ச்சியாளராகவும், திட்ட உதவியாளர், திட்ட இணைஅலுவலர், இணை ஆராய்ச்சியாளராகவும் பணிசெய்வதற்கு பல்வேறு வாய்ப்புகள் உள்ளன.

### ஆ. டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரி

பொன்னேரி, டாக்டர். எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவர்கள் வழிகாட்டுதல் மற்றும் பணி அமர்த்தல் குழு பல்வேறு மீன்வளர்ப்பு மற்றும் மீன் பதப்படுத்துதல் நிறுவனங்களில் மீன்வள பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்கான உள்–வளாக நேர்காணலுக்கு ஏற்பாடு செய்தது. இக்குழுமம் கல்லூரியில் பயின்று வெளிவரும் இளங்கலை மற்றும் முதுகலை மீன்வளப் பட்டதாரிகள் பற்றிய தரவுகளை சேகரித்து பல்வேறு பெருநிறுவனங்கள் மற்றும் மாநில வேளாண் பல்கலைக்கழகங்களின் கீழுள்ள கல்வி

நிறுவனங்களுக்கு ஆட்சேர்ப்புக்கான பட்டியலை வழங்குகிறது. மேலும், மாணவ சமூகத்தின் நலனுக்காக இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உயர்கல்வி மேற்கொள்வதற்கு தேவையான தகவல்களை இக்குழுமம் சேகரித்து வழங்குகிறது.

மேற்படிப்பு மற்றும் தேர்ச்சி பெற்ற இறுதியாண்டு மாணவர்களின் (2016–17 பிரிவு) வேலைவாய்ப்பு விவரங்கள் பின்வருமாறு




59 மாணவர்களில், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் நடத்தும் தேர்வில் 16 மாணவர்கள் நல்ல மதிப்பெண்களை பெற்றனர். மேலும் 1 மாணவர் கேரள மீன்வள மற்றும் கடல் ஆய்வுகள் பல்கலைக்கழகத்திலும் மற்றும் 1 மாணவர் மத்திய வேளாண்மைப் பல்கலைக்–கழக முதுகலை நுழைவுத் தேர்வு (2020–21) எழுதி முறையே இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் – மத்திய மீன்வள ஆராய்ச்சி நிறுவனம், மும்பை, கேரள மீன்வள மற்றும் கடல் ஆய்வுகள் பல்கலைக்கழகம், கேரளா மற்றும் மீன்வளக் கல்லூரி, முதுகலைபட்டபடிப்பு சேர்க்கைக்கு உறுதிசெய்யப்பட்டு, திரிபுராவில் முதுகலை சேர்க்கை பெற்றுள்ளார். இறுதி ஆண்டு இளங்கலை மீன்வளப் பட்டதாரிகளின் (2017–18 பிரிவு) நலனுக்கான குழு 3 இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் - இளைய ஆராய்ச்சி கல்வியாளர் மாதிரித் தேர்வுகளை நடத்தியது.

குழு விவாதம் மற்றும் சிறப்பு விரிவுரைகள் "நேர்காணலை எதிர் கொள்ள உங்கள் நம்பிக்கையை அதிகரிப்பதற்கான உதவிக் குறிப்புகள் மற்றும் தந்திரங்கள்" மற்றும் "M/S CP Aquaculture–ஒரு கண்ணோட்டம்" ஆகியவை 19.03.21 அன்று இக்குழு M/S CP Aquaculture, சென்னை ஆதரவுடன் ஏற்பாடு செய்தது.





துறை மேலாளர், திரு. செல்வின் ஜெயக்குமார் அவர்கள் சிறப்புரை ஆற்றினர்.

திரு. செல்வின் ஜெயக்குமார் துறை மேலாளர், அவர்களால் குழு கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

ஐந்து இளங்கலை மாணவர்களுக்கு M/s Integrated Aqua – பாண்டிச்சேரி, M/s. விர்பாக்–பட்டுக்கோட்டை மற்றும் இறால் பண்ணை, முறையே தொழில்நுட்ப வல்லுநர், மண்டல விற்பனை நிர்வாகி மற்றும் மேற்பார்வையாளர் பணிகள் கிடைத்தது. ஆறு முதுகலை மாணவர்கள், தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், SVVU மற்றும் M/s Unibio India Hatchery செங்கல்பட்டில் வெவ்வேறு நிலைகளில் பணியில் சேர்ந்தனர். மேலும், செல்வி. இ.ரா. பாரதிப்ரியா, தாய்லாந்தின் பிரின்ஸ் ஆஃப் சோங்க்லா பல்கலைக்கழகத்தில் (PSU) குழுவின் ஆதரவுடன் PSU உதவி தொகையுடன் தனது முனைவர். கல்வியைத் தொடங்கினார்.

முதலாமாண்டு (2020–21 பிரிவு) மாணவர்களுக்கு "இளங்கலை மீன்வளப் பட்ட படிப்பின் தொழில் மற்றும் உயர் படிப்பு வாய்ப்புகள்" குறித்த விரிவுரையை இக்குழுமம் 10.02.21 அன்று வழங்கியது.

### இ. டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தலைஞாயிறு

மாணவர் வழிகாட்டுதல் மற்றும் வேலை அமர்த்தல் குழு பின்வரும் உறுப்பினர்களோடு அமைக்கப்பட்டு உள்ளது.

| | | |
|---|---|---|
| குழு தலைவர் | : | முனைவர். நா. ஜெயகுமார்,<br>இணை பேராசிரியர் |
| உறுப்பினர் | : | 1. திரு. வி .விஜயராகவன்,<br>உதவிப் பேராசிரியர் |
| | | 2. திரு.வி. துரை,<br>உதவிப் பேராசிரியர் |

### 4. 2.3. நூலகம்

### அ. மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி

இக்கல்லூரி நூலகம் ஆசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்தின் முக்கிய நோக்கம் என்னவெனில், மீன்வள உயிரியல், மீன் வளர்ப்பு, மீன் பதப்படுத்தும் தொழில்நுட்பம், மீன்பிடி தொழில்நுட்பம், மீன்வள சுற்றுச்சூழல், மீன்வள பொருளியல் மற்றும் மேலாண்மை, மீன்வள விரிவாக்கம் போன்ற மீன்வள பாடங்கள் சம்பந்தமான அச்சிடப்பட்ட புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் மின்னணு ஊடகங்களை வாங்கி பலதரப்பட்ட பயனாளிகளும் பயன் பெறும் வகையில் வகைப்படுத்துதல், நவீன

ஆவணங்களை சேகரிக்க CD-RGM, DVD தரவு தளங்கள், இணையதள மற்றும் மின்னஞ்சல் சேவைகள் பயனாளிகள் பயன்படுத்த வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

### ஆ. டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரி

இக்கல்லூரி நூலகம் ஆசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் காலை 9.15 மணி முதல் மாலை 5 மணி வரை கல்லூரியின் முக்கிய கட்டிடத்தின் தனி அறையில் செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்தின் முக்கிய நோக்கம் என்னவெனில், மீன்வள உயிரியில், மீன்வள வளர்ப்பு, மீன் வளர்ப்பு, மீன் பதப்படுத்தும் தொழில்நுட்பம், மீன்பிடி தொழில்நுட்பம், மீன்வள சுற்றுச்சூழல், மீன்வள பொருளியல் மற்றும் மேலாண்மை, மீன்வள விரிவாக்கம் போன்ற மீன்வள பாடங்கள் சம்பந்தமான அச்சிடப்பட்ட புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் மின்னணு ஊடகங்கள் வாங்கி பலதரப்பட்ட பயனாளிகளும் பயன்பெறும் வகையில் வகைப்படுத்துதல், இணைய மற்றும் மின்னஞ்சல் சேவைகளை எளிதாக்குவதற்கு நூலகத்தின் சுழற்சி நடவடிக்கைகள் KOHA ஒருங்கிணைந்த நூலக முகாமைத்துவ முறைமை மூலம் தானியங்கு செய்யப்பட்டது. ஊழியர்கள் மற்றும் மாணவர்களின் நன்மைகாக நகல் (ஜெராக்ஸ்) சேவை வழங்கப்படுகிறது. இணையதள மற்றும் மின்னஞ்சல் சேவைகள் பயனாளிகள் பயன்படுத்த வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

### இ. டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தலைஞாயிறு

இக்கல்லூரியின் நூலகம் முற்றிலும் கணினி மயமாக்கப்பட்டு முழுமையான காற்றோட்ட அமைப்புடன் நிறுவப்பட்டுள்ளது. இந்நூலகத்தில் மீன்வள படிப்பு தொடர்பான 985 புத்தகங்கள் உள்ளன. மேலும், 48 துறை சார்ந்த கையேடுகள், 13 துறை சார்ந்த பத்திரிக்கைகள், 229 மின் நூல்கள் மற்றும் 400 தமிழ் மின்–நூல்கள் உள்ளன. இந்நூலகத்தில் KOHA என்ற நூலக மென்பொருள் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது. தினசரி செய்தித்தாள்கள், போட்டித் தேர்வுகள் மற்றும் ICAR தேர்வுகளுக்கான புத்தக வங்கி உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்காக இணையதள வசதி, கணினி மயமாக்கப்பட்ட முறையில் புத்தகங்கள் வழங்கல், நகல் எடுத்தல் மற்றும் அச்சிடுதல் போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளது.

மீன்வளப்பட்ட மேற்படிப்பு நிலையம் நூலகத்தில் 521 புத்தகங்கள் உள்ளன, அவற்றில் 73 புத்தகங்கள் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் அபிவிருத்தி மானியம் 2017–18 இன் கீழ் வாங்கப்பட்டுள்ளன. நூலக வசதி இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களால் பயன்படுத்தப்படுகிறது.

### ஈ. மீன்வளப்பட்ட மேற்படிப்பு நிலையம், வாணியஞ்சாவடி, சென்னை

மீன்வளப்பட்ட மேற்படிப்பு நிலையம் நூலகத்தில் 521 புத்தகங்கள் உள்ளன, அவற்றில் 73 புத்தகங்கள் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் அபிவிருத்தி மானியம் 2017–18 இன் கீழ் வாங்கப்பட்டுள்ளன. நூலக வசதி இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களால் பயன்படுத்தப்படுகிறது.

### உ. மீன்வளத்தில் தொழில் முனைவோரை ஆதரிக்கும் மற்றும் தொழில் பயிற்சி இயக்குனரகம்

இளநிலை மீன்வளத் தொழில்நுட்பக் கல்லூரியில் 2020–21 ஆம் ஆண்டு நூலகம் முதல் தளத்தில் நிறுவப்பட்டு மேம்படுத்தப்பட்டு வருகின்றது.

## 4.3. மாணவர் செயல்பாடுகள்

### 4.3.1. மாணவர் சங்கத்தின் செயல்பாடுகள்

#### அ. மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி

தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 74வது சுதந்திர தினவிழா கொண்டாட்டம்

தமிழ்நாடு டாக்டர். ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமான தூத்துக்குடியில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 74வது சுதந்திர தினவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் இக்கல்லூரியின் ஆசிரியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் திரளாக சமூக இடைவெளிவிட்டு கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவ்விழாவிற்கு பாதுகாப்புகமாண்டா மற்றும் விளையாட்டு செயலர் அவர்கள் இக்கல்லூரியின் முதல்வர் அவர்களை விழாமேடைக்கு அழைத்து வந்தனர். பாதுகாப்பு பணியாளர்கள் மரியாதையை நிகழ்த்தினர்.

இக்கல்லூரியின் முதல்வர், முனைவர். பா. சுந்தரமூர்த்தி அவர்கள் நமது தேசிய கொடியை ஏற்றினார் கல்லூரியின் ஆசிரியர்கள் அலுவலக பணியாளர்கள் மற்றும் பாதுகாப்பு பணியாளர்கள் தேசிய கொடிக்கு மரியாதையுடன் வணக்கம் செலுத்தினர். இதனைத் தொடர்ந்து இக்கல்லூரியின் முதல்வர் அவர்கள், இந்திய சுதந்திரத்திற்கு வித்திட்ட முதல் விடுதலைப்போர் முதல் சுதந்தரம் அடையும் வரை நடந்த நிகழ்வுகளையும் பாடுபட்ட தலைவர்கள்அனைவரையும்

நினைவு கூர்ந்து ஒவ்வொரு இந்தியனும் பெருமைகொள்கின்றோம் என்று கூறினார். விழாவினை பாதுகாப்பு அலுவலர், முனைவர். இரா. சாந்தகுமார் மற்றும் விளையாட்டு செயலாளர், திரு.பா.பார்த்திபன் ஒருங்கிணைத்தனர்.




## தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பொங்கல் நாள் கொண்டாட்டம்

பொங்கல் நாள் கொண்டாட்டம் 2021 ஜனவரி 7 ஆம் தேதி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. அனைத்து மாணவர்களும் கற்பித்தல் மற்றும் கற்பித்தல் அல்லாத பணியாளர்கள் கல்லூரிக்கு பாரம்பரிய உடையில் வந்தனர். பூஜையுடன் நிகழ்வை முதல்வர் முனைவர். பா. சுந்தரமூர்த்தி திறந்து வைத்தார். பாரம்பரிய நாளின் செழுமையைப் பற்றி அவர் கூட்டத்தில் உரையாற்றினார். அதைத் தொடர்ந்து பல பாரம்பரிய விளையாட்டுகள் நடத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சியை உடற்கல்வி உதவி இயக்குநர், முனைவர். த. நடராஜன் மற்றும் தூத்துக்குடியின் விளையாட்டு செயலாளர், திரு.பா.பார்த்திபன் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.




தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உலகளாவிய யோகா தினமானது 2020ம் ஆண்டு ஜுன் 22ம் தேதி அன்று கொண்டாடப்பட்டது. கொரோனா ஊரடங்கு காரணமாக காணொலி காட்சி மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விழாவில் கல்லூரி முதல்வர், முனைவர். பா. சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் இந்தியாவில் உருவாகிய யோகா கலைகளையும் அதனை உலகளாவிய கலைகளாக்க நமது பாரதபிரதமர் 2014ம் ஆண்டிலிருந்து ஆற்றிய பங்கு குறித்தும் நினைவுபடுத்தினார். தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் வாரத்திற்கு இரண்டு முறை ஆசிரியர்கள் மற்றும் மாணக்கர்களுக்கு யோகா பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தூத்துக்குடியில் உள்ள ஐம்புலன் யோகா கலை குருவான திரு. கா. பார்த்தசாரதி அவர்கள் தற்போதைய வாழ்வு முறையில் யோகா கலையின் முக்கியத்துவம் குறித்து சிறப்புரையாற்றினார். மேலும், தற்போதைய வாழ்க்கைக்கு தேவையான முக்கியமான யோகாசனங்களை பற்றி விரிவாக விளக்கி கூறினார். இந்த காணொலியில் 200 ஆசிரியர்கள்மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டுபயன் பெற்றார்கள்.



## தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 72வது குடியரசு தினவிழா கொண்டாட்டம்

தமிழ்நாடு டாக்டர். ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கமான தூத்துக்குடியில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 72 வது குடியரசு தினவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் இக்கல்லூரியின் ஆசிரியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் திரளாக சமூக இடைவெளிவிட்டுகலந்துகொண்டுசிறப்பித்தனர். பாதுகாப்பு பணியாளர்கள் முதல்வருக்கு மரியாதையை நிகழ்த்தினர். இக்கல்லூரியின் முதல்வர் முனைவர். பா. சுந்தரமூர்த்தி அவர்கள் நமது தேசிய கொடியை ஏற்றி மரியாதை செலுத்தினார். மேலும் கல்லூரியின் மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் பாதுகாப்பு பணியாளர்கள் தேசியக்கொடிக்கு மரியாதையுடன் வணக்கம் செலுத்தினார்கள். முதல்வர் அவர்கள் 2020ம் ஆண்டிற்கான சிறந்த பணியாளர்களாக திரு.செ.தனபால்செபஸ்டின், கணினி இயக்குநர், திரு.ஏ.ஆர்.பிரகாஷ், எலக்ட்டீசியன், திரு. வி.தனுஷ்கோடி, உதவி கணக்கு அலுவலர் மற்றும் திரு.சூ.சுதாகர், எலக்ட்ரிசியன் ஆகியோர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவித்தார்கள். அதனைத் தொடர்ந்து இக்கல்லூரியின் முதல்வர் அவர்கள் குடியரசு தினஉரையில் இந்திய சுதந்திரத்திற்காக பாடுபட்ட முன்னோர்களின் தியாகங்களை நினைவு கூர்ந்து எடுத்துரைத்தார். மேலும் அவரது உரையில் பாரத பிரதமர் அவர்களின் வழியில் புதிய இந்தியாவை

உருவாக்க பாடுபட வேண்டும் என்று எடுத்துரைத்தார் இதுவே நாம் தியாகிகளுக்கு ஆற்றும் கடமையாகும். நிறைவாக, விழாவிற்கான ஏற்பாடுகளை பாதுகாப்பு அலுவலர், முனைவர். இரா.சாந்தகுமார், உதவி உடற்கல்வி இயக்குநர், முனைவர். த.நடராஜன் மற்றும் விளையாட்டு செயலாளர், திரு.பா.பார்த்திபன் ஆகியோர்கள் ஒருங்கிணைத்தார்கள்.

### ஆ. டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரி

#### உலக உணவு தினம் – 2020

டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவர் பேரவை 16.10.2020 அன்று கூகுள் மீட் இணையவழி சேவை மூலம் உலக உணவு தினத்தை கொண்டாடியது. கல்லூரியின் முதல்வர் மற்றும் மாணவர் பேரவை தலைவர், முனைவர். ப.அகிலன் அவர்கள் இந்நிகழ்வை துவக்கி வைத்ததுடன், மாணவர் சங்கத்தின் துணைத்தலைவர் முனைவர்.த. மணிகண்டவேலு அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். மூன்றாமாண்டு B.F.Sc ஷோபிகா “உணவு அமைப்பின் மாற்றத்திற்கான செயல்பாடுகள்” என்ற தலைப்பிலும், இரண்டாமாண்டு மாணவர் ஆல்வின் பீட்டர் “உணவே மருந்து” என்ற தலைப்பிலும் உரையாற்றினர். “உணவை வீணாக்க வேண்டாம்” எனும் தலைப்பில் நடத்தப்பட்ட ஓவியம் மற்றும் குறுங்கவிதை போட்டிகளுக்கு ஆசிரியர்கள் மதிப்பளித்தனர். இந்நிகழ்வின் இப்போட்டிளுக்கான வெற்றியாளர்களும் அறிவிக்கப்பட்டடினர். இந்நிகழ்வை சிறப்பிக்க கல்லூரி முதல்வர் முனைவர். ப. அகிலன் “உலக உணவு தின” உறுதிமொழியை வாசிக்க மாணவர்களும் பணியாளர்களும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். மீன்பிடி தொழில்நுட்பம் மற்றும் மீன்வள பொறியியல், துறையின் உதவிப் பேராசிரியர், திரு. ரா. வேல்முருகன் இந்நிகழ்வை ஒருங்கிணைத்தார்.

#### வேளாண் கல்வி தினம்

டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் வேளாண் கல்வி தினத்தை சிறப்பிக்க “மாணவர்களால் மற்றும் மாணவர்களுக்கான பச்சை பூமி” என்ற கருத்தில் கூகிள் மீட் இணையவழி சேவை மூலம் கொண்டாடியது. கல்லூரியின் முதல்வர். முனைவர். ப. அகிலன் அவர்கள் இந்நிகழ்விற்க்கான தலைமை உரையையும் மாணவர் பேரவைத் துணைத் தலைவர் பேராசிரியர் முனைவர்., த. மணிகண்டவேலு அவர்கள், வாழ்த்துரையையும் நிகழ்த்தினர். இந்நிகழ்வின் சிறப்பாக, மாணவர்களுக்கு இடையேயான இன்றைய சூழலுக்கு அதிக பயன்தருவது கரிம (Organic) வேளாண்மையா ? கனிம (Inorganic) வேளாண்மையா என்ற தலைப்பில் நடைப்பெற்ற பட்டிமன்றம் அமைந்தது. இப்பட்டிமன்றத்தின் நடுவராக திரு. P. சுந்தர் B.Sc (வேளாண்மை), M.B.A (வேளாண் வணிக மேலாண்மை) தோட்டக்கலை நிபுணர் தலைமை வகித்தார். கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் திருச்சி நாகமங்கலம் பஞ்சாயத்து தொடக்கப் பள்ளியைச் சார்ந்த 30 பள்ளி மாணவர்கள் இணையவழி இந்நிகழ்வில் பங்கேற்றனர். இளங்கலை மீன்வள அறிவியல் இறுதியாண்டு மாணவர் ச.ஆசிக் அஹ்மது உதவியுடன் மீன்வள விரிவாக்க உதவிப் பேராசிரியர், முனைவர். கி.லாய்ட் கிறிஸ்பின் இந்நிகழ்வை ஒருங்கிணைத்தார்.







#### பொங்கல் விழா

பொங்கல் விழாவுடன் இணைந்து பாரம்பரிய விழா 12.01.2021 அன்று டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கொண்டாடப்பட்டது. கல்லூரியின் முதல்வர், முனைவர். ப. அகிலன் இந்நிகழ்விற்கு தலைமையேற்றார். கோவிட்–19 காலத்தில் மனசோர்வு நீங்க பராம்பரியத்தின் முக்கியத்துவத்தை கொண்டாட வேண்டியது அவசியமாகிறது என தெரிவித்தார். அரசின் வழிகாட்டுதல்களை பின்பற்றியதால் இந்நிகழ்வில் இறுதியாண்டு இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்களும், ஆசிரியர்களும் மட்டுமே பாரம்பரிய உடையில் கலந்து கொண்டனர். இக்கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, மாணவர்கள் சமைத்த இனிப்பு பொங்கலுக்கு சுவை குழுவின் பரிந்துரைக்கேற்ப பரிசு வழங்கப்பட்டது. இறுதியாண்டு மாணவர்கள் ஆசிக் மற்றும் தினகரன் ஆகியோர் மாணவர் பேரவை துணை தலைவர், முனைவர். த. மணிகண்டவேலு அவர்களின் வழிகாட்டுதலுடன் இந்நிகழ்விற்க்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைத்தனர்.



## நெறிப்படுத்தும் நிகழ்ச்சி

பொன்னேரி டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட (2020–21 தொகுப்பு) மீன்வள அறிவியல் மாணவர்களுக்கான நெறிப்படுத்தும் நிகழ்ச்சி 10.02.2021 அன்று நடத்தப்பட்டது. இதில் புதிதாக சேர்க்கப்பட்ட 42 மாணவர்களும் (ஆண்–23, பெண்–19) தங்களுடைய பெற்றோர்/பாதுகாப்பாளர்களுடன் கலந்துக் கொண்டனர். கல்லூரியின் முதல்வர், முனைவர்., ப. அகிலன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி, பெற்றோர்/பாதுகாப்பாளர்களுக்கு கல்லூரியின் ஆசிரிய பெருமக்களை அறிமுகப்படுத்தினர். பின்னர், புதிதாக சேர்க்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக தங்களை சுய அறிமுகப்படுத்திக் கொண்டனர். மீன்பதனத் துறை உதவிப் பேராசிரியர், முனைவர். ந. முரளிதரன் அவர்கள் கல்லூரியின் கல்வி விதிகளை விவரித்தார். நீர் சுற்றுப்புற மேலாண்மை துறைத் தலைவர் மற்றும் மாணவர் பேரவையின் துணைத் தலைவர், பேராசிரியர் த. மணிகண்டவேலு அவர்கள் கல்லூரி மாணவர்களின் இணை–பாடத்திட்ட நடவடிக்கைகளை குறித்து விவரித்தார். மீன்பதனத் துறை உதவிப் பேராசிரியர் மற்றும் பெண்கள் விடுதியின் துணை காப்பாளர், திருமதி. நிமிஷ் மோள் ஸ்டீபன் அவர்கள் விடுதியின் விதிகளை குறித்து விவரித்தார். மீன்பதனத் துறை உதவிப் பேராசிரியர், முனைவர். ந. முரளிதரன் அவர்கள் கல்லூரியின் வேலைவாய்ப்பு பிரிவின் நடவடிக்கைகளை குறித்து எடுத்துரைத்தார். மீன்வள மேலாண்மை உதவிப் பேராசிரியர் மற்றும் கல்லூரியின் விளையாட்டு செயலாளர், திரு.ப. பவின்குமார் அவர்கள் கல்லூரியின் விளையாட்டு வசதிகள் மற்றும் நடவடிக்கைகளை எடுத்துரைத்தார். கல்லூரியின் மீன்பிடி தொழில்நுட்ப மற்றும் மீன்வள பொறியியல் துறை உதவிப் பேராசிரியர் மற்றும் நாட்டு நலப்பணி திட்ட அலுவலர், திரு. ரா. வேல்முருகன் அவர்கள் கல்லூரியின் நாட்டு நலப்பணி திட்ட நடவடிக்கைகளை குறித்து விவரித்தார். நீருயிரி மேலாண்மை துறை உதவிப் பேராசிரியர் மற்றும் மாணவர் ஆலோசகர் முனைவர். ச. சரவணன் அவர்களின் நன்றியுரையுடன் இந்நிகழ்ச்சி நிறைவுற்றது.





## முதலாமாண்டு மாணவர்களுக்கு வரவேற்பு விழா

இளநிலை மீன்வள அறிவியல் இரண்டாம் ஆண்டு (2019–20 தொகுப்பு) மாணவர்கள் டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கல்லூரியில் புதிதாக சேர்ந்த முதலாமாண்டு (2020–21 தொகுப்பு) மாணவர்களுக்கு வரவேற்பு விழாவினை 05.03.2021 அன்று நடத்தினர். கல்லூரியின் முதல்வர் மற்றும் மாணவர் பேரவையின் தலைவர், ப. அகிலன் அவர்கள் புதிதாக சேர்ந்துள்ள மாணவர்களை வரவேற்று தலைமை உரையை நிகழ்த்தினார். முதலாம் ஆண்டு மாணவர்களின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஆலோசகரான, முனைவர். ந. முரளிதரன் மற்றும் முனைவர். சரவணன் ஆகியோர் நினைவு பரிசுகள் வழங்கி வரவேற்க்கப்பட்டனர். புதிதாக சேர்ந்த மாணவர்கள் இந்நாளை மிகச்சிறந்த நினைவாக மாற்றி தங்கள் திறமைகளை வெளிக்காட்டினர். இந்நிகழ்வில் புதிதாக சேர்ந்துள்ள மாணவர்களின் பங்கேற்பு மற்றும் பங்களிப்பிற்க்காக நினைவு பொருட்கள் வழங்கப்பட்டது. இரண்டாம் ஆண்டு (2019–20 தொகுப்பு) இளநிலை மீன்வள அறிவியல் மாணவர்களின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஆலோசகரான, திருமதி. ச. ஆக்னஸ் டேனி ஏஞ்சலா மற்றும் முனைவர். ச.செல்வராஜ் ஆகியோர் இந்நிகழ்வை வெற்றிகரமாக முடிக்க உதவி புரிந்தனர்.





## சர்வதேச பெண்கள் தினம்

டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் சர்வதேச பெண்கள் தினம் 08.03.2021 அன்று கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வின் தலைமை உரையை கல்லூரியின் முதல்வர், ப. அகிலன் அவர்கள் நிகழ்த்தினார். சிறந்த ஆசிரியருக்கான

தேசிய விருதை பெற்ற மீஞ்சூர் பஞ்சாயத்து ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர், திருமதி. ச. சுவர்னா பாய் அவர்கள் இந்நிகழ்வில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு, அன்றாட வாழ்வில் பெண்களின் பங்கின் முக்கியத்துவத்தை குறித்து தலைமை விருந்தினர் உரையை நிகழ்த்தினார். மாணவர் பேரவையின் துணைத் தலைவர், முனைவர். த. மணிகண்டவேலு அவர்கள் நடுவராக இருந்து "சமுதாயத்தில் பெண்களுக்கு சுதந்திரம் உண்டா" என்ற தலைப்பிலான பட்டிமன்றம் உட்பட சமையல், ஆடல், கேளிக்கை விளையாட்டு என மிகச்சிறப்பாக இந்நிகழ்வு மாணவர் பேரவையால் நடத்தப்பட்டது. இப்போட்டிகளில் வெற்றிப் பெற்றவர்களுக்கான பரிசுகளை கல்லூரியின் முதல்வரும் தலைமை விருந்தினரும் வழங்கினர்.





## மாணவர் பேரவையின் துவக்க நிகழ்ச்சி

2020–21 ஆம் ஆண்டிற்க்கான மாணவர் பேரவையின் துவக்க நிகழ்ச்சி 22.03.2021 அன்று டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. மாணவர் பேரவையின் துணைத் தலைவர், முனைவர். த. மணிகண்டவேலு வரவேற்புரை நிகழ்த்தினார். மாணவர் பேரவையின் தலைவர் மற்றும் கல்லூரியின் முதல்வர், முனைவர். பா. அகிலன் அவர்கள் தன் தலைமை உரையில் மாணவர்களிடம் தலைமை பண்பு மற்றும் புதிய திறன்களை கண்டறிவதற்க்கான முக்கியத்துவத்தை குறித்தும் எடுத்துரைத்தார். இறுதியாண்டு மாணவர் ச. தினகரன் பேரவையின் பொது செயலாளராக பொறுப்பேற்று கொண்டார். இவருடன், 11 பேரும் தமது பொறுப்புகளை ஏற்றுக்கொண்டனர். உறுதி ஏற்பு நிகழ்வைத் தொடர்ந்து மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளை நடத்தினர். இந்நிகழ்வுடன் "உலக நீர் நாள்" கொண்டாட்டத்திற்க்கான ஏற்பாடுகளையும் புதிய பொறுப்பாளர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். அதில், வரைதல், பேச்சு, நாடகம் போன்ற போட்டிகள் நீரின் முக்கியத்துவத்தை மையப்படுத்தி நடத்தப்பட்டது. உலக நீர் நாள் குறித்த உறுதிமொழி ஏற்பு மற்றும் நடத்தப்பட்ட போட்டிகளின் வெற்றியாளர்களுக்கு பரிசுகளை வழங்கியதுடன் இந்நிகழ்வு நிறைவுற்றது.



## ஆ. டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தலைஞாயிறு

### பல்கலைக்கழக நிறுவன நாள்

தமிழ்நாடு டாக்டர். ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் நிறுவன தினம் 19.06.2020 அன்று கொண்டாடப்பட்டது. "இந்தியாவில் உள்ள மீன்வள பல்கலைக்கழகங்களிடையே தமிழ்நாடு டாக்டர். ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சிறப்பு" என்ற தலைப்பில் கவிதைப் போட்டி மற்றும் "இந்தியாவில் மீன்வளத் துறையில் கோவிட் –19–ன் தாக்கம்" என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி இணைய வழியாக நடத்தப்பட்டது. 2017– 18ம் ஆண்டு மாணவர்களின் ஒருங்கிணைப்பாளரும், ஆலோசகரும் இணைய வழியாக மாணவர்களிடையே வினாடி வினா போட்டியை நடத்தினர்.

### தேசிய மீன் வளர்ப்போர் தினம்

தேசிய மீன் வளர்ப்போர் தினத்தை முன்னிட்டு இக்கல்லூரியின் நீர்வாழ் உயிரின வளர்ப்புத்துறை சார்பாக 10.07.2020 அன்று மீன் வளர்ப்போரிடையே இணைய வழியாக விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் வினாடி வினா போட்டி நடத்தப்பட்டது. மேலும், "இந்தியாவில் மீன் வளர்ப்பின் தற்போதைய நிலை" என்ற தலைப்பில் விருந்தினர் சொற்பொழிவு ஆற்றப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 9 மீன் விவசாயிகள் பங்கேற்றனர்.

### 74 வது சுதந்திர தினம்

நமது நாட்டின் 74வது சுதந்திர தினம் 15.08.2020 அன்று கொண்டாடப்பட்டது. இக்கல்லூரியின் முதல்வர், முனைவர். சு.பாலசுந்தரி தேசியக் கொடியை ஏற்றி கூட்டத்தில் உரையாற்றினார். ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் என மொத்தம் 52 பேர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இணைய வாயிலாக 60 மாணவர்களும் இதில் பங்கேற்றுள்ளனர்.

## உலக மீன்வள தினம்

### செயல்பாடு 1:

இக்கல்லூரியில் உலக மீன்வளத் தினத்தை முன்னிட்டு 21.11.2020 அன்று இணைய வழியாக “கேள்வி–பதில் நிகழ்ச்சி” நடத்தப்பட்டது. இதில் மீன்விவசாயிகள், மீன்வள தொழில்முனைவோர், மீன் பண்ணையாளர்கள் என மொத்தம் 26 பேர் (தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து 11 பேரும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 15 பேரும்) பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சியின் போது, மீன் வளர்ப்பு, நீர் தர மேலாண்மை, மீன் நோய் மேலாண்மை, மீன் பதப்படுத்துதல் தொடர்பான பங்கேற்பாளர்களின் கேள்விகளுக்கு கல்லூரி பேராசிரியர்களால் பதில் அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 40 மாணவர்கள் மற்றும் 16 ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

### செயல்பாடு 2:

தலைஞாயிறு கிராமத்திலுள்ள பொது குளத்தில் நீர் வாழ் தாவரங்களின் எண்ணிக்கை அதிக அளவில் காணப்பட்டது. இதனை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் இவற்றை உண்டு வாழக்கூடிய புல் கெண்டை மீன் குஞ்சுகள் கிராம மக்களின் பங்களிப்போடு குளத்தில் விடப்பட்டது.

### செயல்பாடு 3:

உலக மீன்வள தினத்தை முன்னிட்டு கல்லூரி மாணவர்களுக்கு மீன்வளம் சார்ந்த பல்வேறு தலைப்புகளில் கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி மற்றும் ஓவியப்போட்டி நடத்தப்பட்டது. மொத்தம் 29 மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

### செயல்பாடு 4:

மீன்வளத் துறையில் நவீன வர்த்தகத்தை பயன்படுத்தி சந்தைப்படுத்துதல் என்ற தலைப்பில் உலக மீன் மையத்தின் ஆலோசகரான திரு.எம்.தயாளன் அவர்களால் விளக்கவுரை வழங்கப்பட்டது. இதில் மாணவர்கள் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

### செயல்பாடு 5:

இக்கல்லூரியின் பணியாளர்களுக்கிடையே பாரம்பரிய மீன் உணவு வகைகள் தயார் செய்யும் சமையல் போட்டி நடைபெற்றது. இதில் 10 நபர்கள் கலந்து கொண்டு மீன் மூலம் தயாரிக்கப்படும் பல்வேறு உணவுப் பொருக்களைத் தயார் செய்தனர். இவற்றுள் ஆறு மற்றும் குளங்களில் வாழக்கூடிய, மருத்துவ குணமுள்ள நத்தை (ஆப்பிள் ஸ்நெய்ல்) யிலிருந்து பல்வேறு மீன் உணவு பொருட்கள் இடம் பெற்றிருந்தன.









## இந்திய அரசியலமைப்பு தினம்

இந்திய அரசியலமைப்பு தினத்தை நினைவு கூறும் வகையில் 28.11.2020 அன்று “இந்திய அரசியலமைப்பின் மதிப்புகள் மற்றும் கொள்கைகள்” என்ற தலைப்பில் தமிழ்நாடு அரசின் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் இணை செயலாளர் (ஓய்வு), திரு.கிருஷ்ணகுமார் அவர்கள் இந்திய அரசியலமைப்பின் முக்கிய அம்சங்கள், அடிப்படை உரிமைகள் மற்றும் அடிப்படைக் கடமைகள், பொது வேலை வாய்ப்பில் சமத்துவம் மற்றும் பெண்களுக்கான அரசியலமைப்பு உரிமைகள் ஆகியவற்றை இணைய வாயிலாக விரிவாக எடுத்துரைத்தார். ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என மொத்தம் 86 பேர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## வேளாண் கல்வி நாள்:

இக்கல்லூரியில் 03.12.2020 அன்று “வேளாண் கல்வி நாள்” கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக ஒரடியம்புலம் மற்றும் வாட்டாக்குடி கிராமங்களைச் சேர்ந்த பள்ளி மாணவர்களுக்கு நமது பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் விவசாய வேளாண் படிப்புகள் குறித்த விளக்கவுரை வழங்கப்பட்டு, கல்வித் திட்டங்கள் குறித்த துண்டுப்பிரதி (Flyer) மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் உயர்நிலை மற்றும் மேல்நிலை வகுப்புகளை சேர்ந்த 31 மாணவர்கள் பயனடைந்தனர்.





## தொழில்முனைவோரின் வெற்றி கதைகள்

தமிழ்நாடு டாக்டர். ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்களான திரு.பாலகிருஷ்ணன், (இறால் பண்ணையாளர்) அவர்கள் "இறால் வளர்ப்பின் அனுபவமும் வெற்றிக் கதையும்" என்ற தலைப்பிலும், திரு.ஜோசப் ரகுநாத் (நிர்வாக இயக்குநர், டானிகா அக்வா பிரைவேட் லிமிட்டெட், விசாகப்பட்டினம்) அவர்கள் "கடல் உணவு பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதியின் அனுபவமும் வெற்றிக் கதையும்" என்ற தலைப்பிலும் சிறப்புரை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என மொத்தம் 85 பேர் பங்கேற்றனர்.

## 72வது குடியரசு தினம்

நமது நாட்டின் 72வது குடியரசு தினம் 26.01.2021 அன்று கொண்டாடப்பட்டது. இக்கல்லூரியின் முதல்வர், முனைவர்., சு.பாலசுந்தரி அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி கூட்டத்தில் உரையாற்றினார். ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் என மொத்தம் 56 பேர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இணைய வாயிலாக 30 மாணவர்களும் இதில் இணைந்து பங்கேற்றனர்.





## சர்வதேச மகளிர் தினம்

இக்கல்லூரியில் 09.03.2021 அன்று சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. முதன்மை விருந்தினர்களான நாகப்பட்டினம், கால்நடை பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் முனைவர். சுமதிதாஸ் மற்றும் நாகப்பட்டினம், வழக்கறிஞரும் துணை தளபதியுமான முனைவர். எம். வினோதினி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். இந்நிகழ்ச்சியில் நாகப்பட்டினம் மாவட்டத்தின் சிறந்த பெண் தொழில்முனைவோராக விளங்கியதற்காக திருமதி. எலாச்சி அவர்களுக்கு நமது கல்லூரியின் சார்பாக பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.





## உலக நீர் தினம்



உலக நீர் தினம் 22.03.2021 அன்று கொண்டாடப்பட்டது. இந்த கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, தலைஞாயிறு பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி திரு.ஜே.பிரகாஷ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். மீன்வளர்ப்பின் முக்கியவத்தை எடுத்துரைத்து கல்லூரி முதல்வர், முனைவர். சு.பாலசுந்தரி அவர்கள் சிறப்புரை வழங்கினார். "இன்றைய சூழலில் நீர்த்தர மேலாண்மை அவசியமா? அவசியமற்றதா?" என்ற தலைப்பிலான பட்டிமன்றத்தில் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

## லஞ்ச ஒழிப்பு வாரம்

லஞ்ச ஒழிப்பு வாரத்தை அனுசரிக்கும் முறையில் 27.10.2020 முதல் 02.11.2020 வரை மாணவர்களிடையே பேச்சு மற்றும் கட்டுரை போட்டிகள் நடத்தப்பட்டது.

## இந்தியாவின் 75ஆண்டு கால சுதந்திர கொண்டாட்டம்

இந்தியாவின் 75 ஆண்டுகால சுதந்திரத்தின் (ஆசாதி கா அம்ருத் மஹோத்ஸவ்) 25 நாள் கொண்டாட்டம் 12.03.2021 அன்று தொடங்கப்பட்டது. மாணவர்களிடையே "இந்தியாவின் சுதந்திரப் போராட்டம்" என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டியில் மொத்தம் 22 மாணவர்கள் பங்கேற்றனர்.

## நீர்வாழ் உயிரின ஆரோக்கியத்திற்கான மாநில அளவிலான பரிந்துரை ஆய்வகம்

மகளிர் தினம் மற்றும் அறிவியல் தினம் (08.03.2021) அன்று நீர்வாழ் உயிரின ஆரோக்கியத்திற்கான மாநில அளவிலான பரிந்துரை ஆய்வகத்தில் கொண்டாடப்பட்டது. மாணவ, மாணவியருக்கு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.









### இ. மீன் வளர்ப்பு காப்பகம் மற்றும் தொழிற்பயிற்சி இயக்ககம்

- “உலக மகளிர் தினம்” 08.03.2021 அன்று கொண்டாடப்பட்டது.
- இந்தியாவின் 75வது சுதந்திர தின விழாவினை முன்னிட்டு, தண்டி யாத்திரை அணிவகுப்பை நினைவுப்படுத்த 12.03.2021 அன்று கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டி நடத்தப்பட்டது.




### 4. 3.2.விளையாட்டு நிகழ்ச்சிகள்

### தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் விடுதி நாள் கொண்டாடப்பட்டது

2021 மார்ச் 5 ஆம் தேதி விடுதி நாள் கொண்டாடப்பட்டது. அனைத்து மாணவர்களும் நான்கு அணிகளாக பிரிக்கப்பட்டனர். வாலிபால், கைப்பந்து, எறிபந்தாட்டம், கபடி மற்றும் மரபு விளையாட்டுகள் போன்ற பல விளையாட்டுகள் மாணவர்களுக்கு நடத்தப்பட்டன. முழு நிகழ்வையும், முதல்வர், முனைவர். பா. சுந்தரமூர்த்தி ஏற்பாடு செய்தார். முழு நிகழ்வையும் உதவி உடற் கல்வி இயக்குநர், முனைவர். த. நடராஜன் மற்றும் விளையாட்டு செயலாளர், திரு.பா.பார்த்திபன் ஆகியோர்கள் ஒருங்கிணைத்தார்கள்.




74வது மாநில அளவிலான நீச்சல் போட்டியில் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவர் பங்கேற்பு 74வது மாநில அளவிலான நீச்சல்போட்டி 2021 மார்ச் 6 மற்றும் 7ம் தேதிகளில் சென்னை வேளச்சேரியில் உள்ள அரசு நீச்சல் குளத்தில் நடத்தப்பட்டது. இப்போட்டியில் இரண்டாம் ஆண்டு பயிலும்திரு எஸ். விஹரிஷ்பாண்டியன் இந்த போட்டியில் பங்கு பெற்று தனது திறமையை வெளிப்படுத்தினார். நிகழ்வையும் உதவி உடற்கல்வி இயக்குநர் முனைவர். த.நடராஜன் மற்றும் விளையாட்டு செயலாளர் திரு.பா.பார்த்திபன் ஆகியோர்கள் ஒருங்கிணைத்தார்கள்.

தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், ஆண்டு விளையாட்டு விழா மற்றும் போட்டிகள் நடத்துவது பற்றி ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

விளையாட்டு விழா நடத்துவதற்கு முதல் கட்டமாக ஆலோசனை கூட்டம் மார்ச் 12ஆம் தேதி நடத்தப்பட்டது. கூட்டத்தில் கல்லூரியின் முதல்வர் முனைவர். பா. சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமை ஏற்றினார். மாணவர்களுக்கு விளையாட்டு போட்டிகள் பங்கு பெறுவதும் அதன் நோக்கங்களும் பற்றி உரையாற்றினார் மேலும், மாணவர்களை பாராட்டினார். இக்கூட்டத்தில், மாணவர் மற்றும் மாணவிகளை நான்கு அணிகளாக பிரிக்கப்பட்டது. இந்த நான்கு அணிகளும் மாணவர்களுடைய பிரதிநிதிகள் முன்பு பிரிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் எந்தவிதமான விளையாட்டை நடத்துவது என்று ஆலோசிக்கப்பட்டது. இதில் செஸ் கேரம், கைப்பந்து மற்றும் தடகளம் போன்ற போட்டிகளை நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இந்த நிகழ்வினை, முனைவர். த.நடராஜன் மற்றும் விளையாட்டு செயலாளர் திரு.பா.பார்த்திபன் ஆகியோர்கள் ஒருங்கிணைத்தார்கள்.




### ஆ. டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரி

பொன்னேரி, டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமானது மாணாக்கர்களுக்கு தேவையான பல்வேறு வெளி மற்றும் உள்விளையாட்டு அரங்கங்களையும் வசதிகளையும் நிரம்பப் பெற்றுள்ளது. வெளிவிளையாட்டுகளை பொறுத்தவரை கைப்பந்து, கால்பந்து, மட்டைப்பந்து (கிரிக்கெட்), கூடைப்பந்து, எறிபந்து (Throwball), கபடி போன்றவைகளும், உள்விளையாட்டுக்களான இறகுபந்து, மேசைபந்தாட்டம் (Table tennis) மேலும், சதுரங்கம் (Chess), சுண்டாட்டம் (Carrom board), ஆகியவையும் தடகளத்திற்கென தனியாக நீளம்தாண்டுதல், உயரம் தாண்டுதல் மற்றும் 100மீஓட்டத்திற்கான நேரானதடம், 200மீஓட்டத்திற்கான வட்டத்தடம் போன்ற வசதிகளுடன், ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனித்தனியாக குண்டு எறிதல், தட்டுஎறிதல் மற்றும் ஈட்டி எறிதல்வசதிகளும் என அனைத்து விளையாட்டு வசதிகளும் உள்ளன.

### (2020–2021) ஆண்டு நிறுவப்பட்ட விளையாட்டு வசதிகள்:

மேற்சொன்ன விளையாட்டு வசதிகளில் கபடி, கைப்பந்து (பெண்கள்) மற்றும் நீளம் தாண்டுவதற்கான குழி ஆகியவை இந்த ஆண்டில் துவங்கப் பெற்ற புதிய வசதிகளாகும்.

### 2020–2021 கல்வியாண்டில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகள்:

நமது மாணவ–மாணவியர்கள் நம்மிடம் உள்ள அனைத்து விளையாட்டு வசதிகளையும் தினந்தோறும் நன்கு பயன்படுத்தி அவர்களின் திறமைகளை வளப்படுத்திக் கொண்டனர்.

மேலும் அவர்களின் விளையாட்டு ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டு விளையாட்டு நாளுக்கான வகுப்புக்களுக்கிடையேயான பல்வேறு போட்டிகளும், அதேபோல் விடுதி நாளுக்கென குழுக்களுக்கிடையேயான, கைப்பந்து, கால்பந்து, (கிரிக்கெட்) மட்டைப்பந்து, எறிபந்து (Throwball) கபடி போன்றவைகளும், உள்விளையாட்டுக்களான இறகுபந்து, மேசைபந்தாட்டம் (Table tennis) மேலும், சதுரங்கம் (Chess), சுண்டாட்டம் (Carrom board), ஆகியவையும், தடகளத்திற்கென தனியாக நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல் மற்றும் 100மீ ஓட்டத்திற்கான நேரான தடம், 200மீ ஓட்டத்திற்கான வட்டத்தடம் போன்ற வசதிகளுடன், நடத்தப்பட்டன. மாணவ–மாணவிகளும் அதில் சிறப்பாக பங்கேற்று அவர்களின் திறமையை வெளிப்படுத்தினர்.

எதிர்பாராத விதமான கொரோனா தொற்றின் காரணமாக கல்லூரியின் விளையாட்டு நாள் நடத்த முடியவில்லை.

### பங்கேற்றப் போட்டிகள்:

முதலாம் ஆண்டு மாணவன், செல்வன் நவீன்குமார் (2020–2021) நமது மத்திய விளையாட்டு மற்றும் இளையோர் அமைச்சகத்தின் கீழ்கயுகம், இராஜஸ்தானால், தேசிய அளவில் நடத்தபட்ட 2021–ல் கலந்துகொண்டு தங்கப் பதக்கத்துடன் முதல் பரிசும், போட்டியில் வெண்கல பதக்கத்துடன் மூன்றாவது பரிசும் பெற்று சாதனைப் புரிந்துள்ளார்.

### இ.டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தலைஞாயிறு–

### ஒருங்கிணைந்த கல்லூரி மற்றும் விளையாட்டு தினம்

ஒருங்கிணைந்த கல்லூரி மற்றும் விளையாட்டு தினம் 08.03.2021 அன்று மாணவர்களால் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் மாணவர்களின் திறனை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது. இக்கல்லூரி கலைநிகழ்ச்சிகளில் முதலாம் ஆண்டு (2020–21) மாணவர்கள் முதல் இடத்தையும், மூன்றாம் ஆண்டு (2018–19) மாணவர்கள் இரண்டாம் இடத்தையும் பிடித்தனர். விளையாட்டு போட்டிகளை பொறுத்தவரை மூன்றாம் ஆண்டு (2018–19) மாணவர்கள் முதல் இடத்தையும், இரண்டாம் ஆண்டு (2019–20) மாணவர்கள் இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.









### 4.3.3. நாட்டு நலப்பணி திட்ட நடவடிக்கைகள்:

#### 1. பொன்னேரியில் உள்ள டாக்டர். .எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் – வளாகத்தை சுத்தம் செய்தல் (3.03.2021)

வளாகம் மற்றும் விடுதி வளாகத்தின் பாதுகாப்பு மற்றும் தூய்மையை உறுதி செய்வதற்காக, நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் குழு முனைவர். ப. அகிலன் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் 03.03.2021 அன்று வளாகத்தை சுத்தம் செய்யும் நிகழ்ச்சியை நடத்தியது. இந்நிகழ்ச்சியில் அனைத்து நிறுவன மாணவர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். வளாகத்தில் உள்ள களைச் செடிகளை அகற்றும்திட்டம் கவனம் செலுத்தியதால், ஊர்வன மற்றும் சேகரிக்கப்படும் கழிவுகளில் இருந்து கரிம மற்றும் கனிமப் பொருட்களைப் பிரித்தெடுப்பது குறித்த பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மாணவர்களுக்கு முன் ஆலோசனை வழங்கப்பட்டது. பாதுகாப்பு கருதி அனைத்து மாணவர்களுக்கும் கையுறை வழங்கப்பட்டது. துப்புரவுத்திட்டம் வளாகம் முழுவதும் உள்ள நெகிழிக் கழிவுகளை அகற்றுவதை உறுதி செய்தது. சேகரிக்கப்படும் கழிவுகள் மக்கும் மற்றும் மக்காத குப்பை என பிரிக்கப்பட்டு ஒரே இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. பேரூராட்சி பணியாளர்கள் வந்து வளாகத்தில் உள்ள அனைத்து கழிவுகளையும் அகற்றினர். விடுதியின் பாதுகாவலர் மற்றும் துணை பாதுகாவலர் விடுதி வளாகத்தில் துப்புரவு பணிகளை கண்காணித்தனர். இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் திரு. ரா. வேல்முருகன், நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் மற்றும் உதவிப் பேராசிரியர், ஒருங்கிணைத்தார்.





**2. பொன்னேரியில் உள்ள டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மற்றும் திருவள்ளூர் மாவட்டம் மீன்வளத் துறை, இணைந்து 26.03.2021 அன்று பழவேற்காட்டில் "ஸ்வீப்"நிகழ்ச்சியை நடத்தியது.**

பொன்னேரியில் உள்ள டாக்டர். எம்ஜி ஆர் மீன்வளக் கல்லூரிமற்றும் ஆராய்ச்சிநிறுவனத்தின்நாட்டுநலப்பணி திட்ட மாணவர்கள் குழு மற்றும் மாநில மீன்வளத் துறை ஆகியவை இணைந்து 26.03.2021 அன்று பழவேற்காட்டில் "*முறையான வாக்காளர் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்புத் திட்டத்தை* [SVEEP]" நடத்தியுள்ளன. SVEEP 06.04.2021 அன்று 'வரவிருக்கும் தேர்தலில் 100% பொதுமக்கள் வாக்களித்தல்' என்ற பொருளில் மாணவர்களின் பேரணியாக ஏற்பாடு செய்யப்பட்டது. முனைவர். ப. அகிலன் மற்றும் திருவள்ளூர் மாவட்ட மீன்வளத்துறை உதவி இயக்குநர், திரு. அஜய் ஆனந்த், பழவேற்காட்டில் இருந்து மீனவப்பிரதி நிதிகளுடன் இணைந்து பேரணியைத் தொடங்கி வைத்து, தலைமை வகித்தனர். பொன்னேரியில் உள்ள எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவர்கள் கோவிட்–19 முன்னெச்சரிக்கையுடன் முகமூடி அணிந்து, சானிடைசர் உபயோகித்து இந்திய குடிமக்கள் வாக்களிப்பதில் உள்ள பொறுப்புகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த பேரணியில் தீவிரமாக பங்கேற்றனர். விழிப்புணர்வு பேரணி பழவேற்காடு பேருந்து நிலையத்தில் இருந்து தொடங்கி, பழவேற்காட்டின் மீன் இறங்குதுறையில் நிறைவடைந்தது. நிகழ்ச்சியின் முடிவில் மீன் வளத்துறை உதவி இயக்குநர், திரு. அஜய் ஆனந்த் வாக்களிக்கும் விழிப்புணர்வு பலூன்களை வெளியிட்டார். முழு நிகழ்ச்சியையும் நாட்டு நலப்பணி திட்ட அதிகாரி, திரு. ரா. வேல்முருகன் திட்டமிட்டு ஒருங்கிணைத்தார்.

**ஆ. டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தலைஞாயிறு**

**இரத்த தான முகாம்**

இக்கல்லூரியில் 08.01.2021 அன்று இரத்த தான முகாம் நடத்தப்பட்டது. இக்கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் 15 பேர் தன்னார்வலர்கள் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர். இரத்த தானம் செய்தவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.



**கடல் ஆமைகளின் நடமாட்டத்தை கண்காணித்தல்**

பூம்புகார், தொடுவை மற்றும் சின்னாங்குடி கடற்கரைகளில் கடல் ஆமைகளின் நடமாட்டத்தை கண்காணித்து அவற்றின் முட்டைகளை சேகரிப்பதற்காக 04.03.2021 மற்றும் 05.03.2021 அன்று முகாம் நடத்தப்பட்டது. இதில், 21 இளநிலை நான்காம் ஆண்டு மாணவர்கள் (2017-18 ஆண்டு) மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் கலந்து கொண்டு கடல் ஆமைகளின் நடமாட்டத்தை கண்காணித்தனர்.

**வாக்காளர் விழிப்புணர்வு பிரச்சாரப் பேரணி**

நாகப்பட்டினம் மீன்வளத்துறை, வனத்துறை மற்றும் கடலோர காவல்படை இணைந்து 04.03.2021 அன்று நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தில் மீன்வர்களிடையே சட்டமன்ற தேர்தலில் 100% வாக்களிப்பதற்காக விழிப்புணர்வு ஏற்படத்த பேரணி நடத்தினர். இப்பேரணியில் நமது கல்லூரி சார்பாக 36 மாணவர்கள் (2019 - 20ஆண்டு) மற்றும் ஒரு உதவிப் பேராசிரியர் கலந்துகொண்டு மீனவர்களுக்கிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.



**மீன்வளப்பட்ட மேற்படிப்பு நிலையம், வாணிஞ்சவாடி, சென்னை**

**1. சென்னை ECR இல் "கடற்கரையை சுத்தம் செய்யும்" நிகழ்ச்சியில் மாணவர்கள்**

மீன்வள உயிரி தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் பயிலும் தொழில்நுட்பத்தில் இளங்கலை (உயிரி தொழில்நுட்பவியல்) மாணவர்கள், இந்திய சுற்றுச்சூழல் அறக்கட்டளை (EFI) ஏற்பாடு செய்த "கடற்கரையை சுத்தம் செய்யும்" நிகழ்வில் பங்கேற்றார்கள். சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள பனையூர் கடற்கரையில் 26.12.2021 அன்று காலை 7 மணி முதல் 9 மணி வரை நடந்த நிகழ்ச்சியில் மொத்தம் 31 மாணவர்கள் பங்கேற்றனர்.

**தேசிய சேவை திட்டம்: வளாகத்தை சுத்தம் செய்யும் செயல்பாடு**

தேசிய சேவை திட்ட மாணவர் தன்னார்வலர்கள், மீன்வள முதுகலை பட்டமேற்படிப்பு நிறுவன வளாகத்தை 15.02.2022 மற்றும் 22.02.2022 அன்று சுத்தம் செய்யும் நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்தனர். மொத்தம், 29 மாணவர்கள் வளாகத்தை சுத்தம் செய்வதில் பங்கேற்றனர்.

# விருதுகள் மற்றும் மரியாதைகள்

# 5 விருதுகள் மற்றும் மரியாதைகள்

1. முனைவர். சு.பாலசுந்தரி, முதல்வர், டாக்டர். எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தலைஞாயிறு வேளாண் அறிவியல் தமிழ்ச் சங்கத்தின் அறிவியல் தமிழ்ச் சிறப்பு விருதையும், புதுதில்லியின் க்ரிஷி விக்யான் சங்கத்திலிருந்து சிறந்த பெண் விஞ்ஞானிக்கான விருதையும் பெற்றார். தொழில்நுட்பங்களை வணிக மயமாக்கியதற்காக தமிழ்நாடு டாக்டர். ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் பாராட்டு விருதையும் பெற்றுள்ளார்.

2. முனைவர். என்.மணிமேகலை, முதல்வர், மீன்வள பொறியியல் கல்லூரி, நாகபட்டினம் எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகத்தின் சிறந்த ஆராய்ச்சி கட்டுரைக்கான விருதைப் பெற்றார்.

3. முனைவர். ச. ஆதித்தன், பேராசிரியர் மற்றும் தலைவர், மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி, உயிரியல் மற்றும் சுற்றுச்சூழல் ஆராய்ச்சிக்கான சங்கத்திலிருந்து (SBER) சிறந்த ஆசிரியருக்கான விருதைப் பெற்றார்.

4. முனைவர். ஆ. உமா, பேராசிரியர் மற்றும் தலைவர், டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரி காப்புரிமை பெற்ற தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கான பாராட்டு விருதையும், மற்றும் சிறந்த ஆராய்ச்சியாளர் விருதையும் தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றார். மேலும், வேளாண் அறிவியல் தமிழ்ச் சங்கத்தின் சிறந்த பிரபலமான கட்டுரைக்கான விருதையும் பெற்றுள்ளார்.

5. முனைவர். ந.ஜெயகுமார், இணை பேராசிரியர் மற்றும் தலைவர், டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தலைஞாயிறு, தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சிறந்த ஆசிரியர் விருதைப் பெற்றார்.

6. முனைவர். பா.கணேசன், உதவிப் பேராசிரியர், மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி, உலக ஆராய்ச்சியாளர்கள் சங்கத்திலிருந்து FWRA சக உறுப்பினர் என்ற சான்றை பெற்றார்.

7. திரு.எம்.முருகானந்தம், உதவிப் பேராசிரியர் மற்றும் முனைவர். இரா.ஷாலினி, உதவிப் பேராசிரியர், மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி, வேளாண் அறிவியல் தமிழ்ச் சங்கத்தின் சிறந்த ஆய்வுக் கட்டுரைக்கான விருதைப் பெற்றுள்ளனர்.

8. திருமதி. எஸ்.ஆக்னஸ் டேனிஏஞ்சலா, உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர், டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரி வேளாண் அறிவியல் தமிழ்ச் சங்கத்திலிருந்து சிறந்த இளம் தொழில்முறை விருதைப் பெற்றார்.

9. முனைவர். அ. சுப்புராஜ், உதவிப் பேராசிரியர், டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தலைஞாயிறு வேளாண் அறிவியல் தமிழ்ச் சங்கத்தின் சிறந்த ஆராய்ச்சி கட்டுரைக்கான விருதைப் பெற்றார்.

10. முனைவர். ப. கார்த்திக்குமார், உதவிப் பேராசிரியர், மீன்வள பொறியியல் கல்லூரி, நாகபட்டினம், ஆராய்ச்சி கட்டுரை வழங்கியதற்காக வேளாண் தமிழ் அறிவியல் கழகத்தின் சார்பாக முதல் பரிசைப் பெற்றார்.

11. முனைவர். தே.கேசவன், உதவிப் பேராசிரியர், மீன்வள பொறியியல் கல்லூரி, நாகபட்டினம், சேலத்தில் நடைபெற்ற உணவு வேளாண் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சர்வதேச மாநாட்டிலும் மற்றும் 5வது தேசிய வேளாண் அறிவியல் தமிழ் மாநாட்டிலும் சிறந்த ஆராய்ச்சி கட்டுரை வழங்கியதற்காக விருதுகளைப் பெற்றார்.

12. திரு. தெ. ஆனந்த், உதவிப் பேராசிரியர், மீன்வள பொறியியல் கல்லூரி, நாகபட்டினம் வேளாண் தமிழ் அறிவியல் கழகத்திலிருந்து சிறந்த ஆய்வுக் கட்டுரைக்கான விருதைப் பெற்றார்.

13. பொறியாளர். S. மோனிகண்டன், உதவிப் பேராசிரியர், மீன்வள பொறியியல் கல்லூரி, நாகபட்டினம், சேலத்தில் நடைபெற்ற உணவு வேளாண் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சர்வதேச மாநாட்டிலிருந்து சிறந்த ஆய்வுக் கட்டுரைக்கான விருதைப் பெற்றார்.

14. முனைவர். அ.கோபாலகண்ணன், திட்ட ஒருங்கிணைப்பாளர், முனைவர். கோ. சந்திரசேகர், பாடப்பொருள் நிபுணர் (தாவரப் பாதுகாப்பு) மற்றும் திரு. ஜெ. சதீஷ்குமார், ஓட்டுநர், கே.வி.கே, சிக்கல்

ஆகியோர் சிறந்த முறையில் பணியாற்றியதற்காக தமிழ்நாடு டாக்டர். ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்திலிருந்து விருதுகளைப் பெற்றுள்ளனர்.

15. முனைவர். இரா. சோமு சுந்தர் லிங்கம், உதவிப் பேராசிரியர், கிருஷ்ணகிரி பாரூர் வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மையம், பாரூர், சிறந்த முனைவர். படிப்பின் ஆய்வு கட்டுரைக்காக மும்பை மத்திய மீன்வளப் பல்கலைக்கழத்திலிருந்து அலிகுன்ஹி தங்கப் பதக்கம் மற்றும் ரவீந்திரநாத் க்ரோதபல்லி சர்வதேச பயண விருதையும் பெற்றுள்ளார்.

16. செல்வி. எஸ். சுபஸ்ரீ, ஆராய்ச்சி மாணவி, மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி, வேளாண் அறிவியல் தமிழ்ச் சங்கத்திலிருந்து சிறந்த ஆய்வுக் கட்டுரைக்கான விருதைப் பெற்றார்.

17. செல்வி. ஆ. வினோதினிவாஸ், ஆராய்ச்சி மாணவி, மீன்வள பொறியியல் கல்லூரி, நாகப்பட்டினம், சேலத்தில் நடைபெற்ற உணவு வேளாண் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சர்வதேச மாநாட்டிலிருந்து சிறந்த ஆய்வுக் கட்டுரைக்கான விருதைப் பெற்றார்.

18. செல்வி மு. கீதா, இளநிலை மீன்வள பொறியியல் கல்லூரி மாணவி உயிரி மருத்துவம், ஆற்றல், சுற்றுச்சூழல் உணர்வு மற்றும் பிற பயன்பாடுகளுக்கான நாவல் பொறியியல் பொருட்கள் பற்றிய சர்வதேச மாநாட்டில் சிறந்த ஆராய்ச்சி கட்டுரை வழங்கியதற்காகதிருச்சி தேசிய தொழில்நுட்பக் கழகத்திலிருந்து விருதைப் பெற்றார்.

19. செல்வன். ஜெ. ஜெரிஷ், மாதவரம், இளநிலை உணவு தொழில்நுட்பவியல் கல்லூரி மாணவர், அப்துல் கலாம் சங்கம் நடத்திய புகைப்படம் எடுத்தல் மற்றும் நினைவு உருவாக்கம் செய்தல் போட்டியில் பங்கு பெற்று முதல் இடத்தைப் பெற்றார்.

20. மாதவரம் இளநிலை உணவு தொழில்நுட்பவியல் கல்லூரி மாணவிகளான செல்வி. பா. ஐஸ்வர்யா, கவிதை–மூத்தோர் பிரிவில் முதலிடமும், செல்வி. எம். ராகினி கவிதை–மூத்தோர் மற்றும் ஓவியம்–மூத்தோர் பிரிவில் இரண்டாம் இடமும், செல்வி. எஸ்.சினேகா, எழுத்து போட்டியில் முதலிடமும் பெற்றுள்ளனர். இந்த போட்டிகளானது டாக்டர். ஏ.பி.ஜே.அப்துல் கலாமின் பிறந்தநாளை முன்னிட்டு மாவீரர் அப்துல் கலாம் சங்கத்தின் சார்பாக இணையவழி வாயிலாக நடத்தப்பட்டது.

21. செல்வி. மு. காவியா, இளநிலை உணவு தொழில்நுட்பவியல் கல்லூரி மாணவி, மாதவரம் அண்ணாசாஹேப் டாங்கா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், உலக உணவு தினம் 2020அன்று நடத்தப்பட்ட காய்கறி அலங்காரம் செய்தல் போட்டியில் 2வது இடத்தைப் பெற்றுள்ளார்.

22. மாதவரம் இளநிலை உணவு தொழில்நுட்பவியல் கல்லூரியின் மாணவிகள் அக்கல்லூரியின் சார்பாக உலக வாழவிடத் தினத்தை முன்னிட்டு இணையதளம் வாயிலாக நடத்தப்பட்ட சுவரொட்டி போட்டியில், செல்வி. ப. ஐஸ்வர்யா, வி. கீர்த்தி, எம். ராகிணி மற்றும் மு.சோனிகா ஆகியோர் முதல் இடமும், செல்வி. மா. தமிழரசி, பி. சௌபர்னிகா மற்றும் எம். கஸ்தூரி ஆகியோர் இரண்டாம் இடமும் மற்றும் செல்வி. மு. பிரியதர்ஷினி, ஜெ. ஜாஸ்பின் ஜெனிஷா மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

23. மாதவரம் இளநிலை உணவு தொழில்நுட்பவியல் கல்லூரியின்மாணவமாணவிகள் அக்கல்லூரியின் சார்பாக உலக மீனவர் தினத்தை முன்னிட்டு இணையதளம் வாயிலாக நடத்தப்பட்ட சுவரொட்டி போட்டியில் செல்வன். பி. மோகன கார்த்திக் மற்றும் எம். சந்துரு ஆகியோர் முதல் இடமும், எம். பிரியதர்ஷினி, எஸ்.தமிழரசி, ப.சௌபர்னிகா மற்றும் S. கஸ்தூரி ஆகியோர் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

24. இளநிலை உணவு தொழில்நுட்பவியல் கல்லூரியின் மாணவி ப.சௌபர்னிகா கலசலிங்கம் ஆராய்ச்சி மற்றும் கல்வி நிலையம், விருதுநகர் சார்பாக உலக உணவு தினத்தையொட்டி நடைபெற்ற புகைப்படம் எடுத்தல் போட்டியில் முதலிடத்தை பெற்றார்.

25. இளநிலை உணவு தொழில்நுட்பவியல் கல்லூரியின் மாணவி எம். ஸ்னேகா காந்திகிராம கிராமப்புற நிறுவனம் நடத்திய நியூட்ரிஃபிட் போட்டியில் மூன்றாம் இடம் பெற்றார்.

26. திருமதி.எலசி அம்மாள், அக்கரைப்பேட்டை, நாகப்பட்டினம், சிறந்த முறையில் உலர் மீன் கருவாடு தயாரிப்பதால், தூர்தர்சன் பொதிகை சார்பாகமாநில அளவில் சிறந்த சுய உதவிக் குழு மகளிர் விருதைப் பெற்றார்.

27. திரு. ஜி. சண்முகசுந்தரம், கீழ்வேளூர் தொகுதி நாகப்பட்டினம், மதிப்பு கூட்டப்பட்ட மீன் பொருட்கள் தயாரித்து ஏற்றுமதி செய்தமைக்காக தூர்தர்சன் பொதிகைசார்பாக மாநில அளவில் சிறந்த தொழில்முனைவோர் விருதைப் பெற்றார்.

28. திரு.கே. சம்பந்தம், சீர்காழி, இயற்கை வேளாண்மை முறைகளுக்காக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சிறந்த விவசாயிக்கான விருதைப் பெற்றார்.

29. டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தலைஞாயிறு, வேளாண் அறிவியல் தமிழ்ச் சங்கத்தின் சிறந்த தொகுதி கல்லூரிக்கான விருதைப் பெற்றது.

# சிறப்பு விருந்தினர்கள்

# 6 சிறப்பு விருந்தினர்கள்

1. பொன்னேரி அரசு மருத்துவமனை டாக்டர். அனுரத்னா, தலைமை மருத்துவ அதிகாரி, 12.02.2020 அன்று பொன்னேரி டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை பார்வையிட்டார்.

2. திரு.பிரவீன் பி. நாயர், ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சியர் அவர்கள், நாகப்பட்டினம் 12.09.2020 அன்று நாகப்பட்டினம், சிக்கலில் உள்ள கே.வி.கே. வேளாண் அறிவியல் நிலையத்தை பார்வையிட்டார்.

3. திரு. என். அழகப்பன், முதன்மை நம்பக அலுவலர், சென்னை மற்றும் திரு. ஜி. கார்த்திக், எம். புரட்சிதாசன் அகாடமி, பொன்னேரி ஆகியோர் 22.09.2020 அன்று பொன்னேரி டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை பார்வையிட்டார்.

4. டாக்டர். வினோத், எஸ். ரவீந்திரன், மாநில ஒருங்கிணைப்பாளர், கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம், 24.09.2020 அன்று பரக்கையிலுள்ள வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மையத்தை பார்வையிட்டார்.

5. திரு. டி. நிர்மல் ராஜ், கள ஒருங்கிணைப்பாளர், தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை, 29.09.2020 அன்று பொன்னேரி, டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை பார்வையிட்டார்.

6. திரு. ஸ்ரீ சிவராம் ஸ்வாமி, துணைப் பொது மேலாளர், கொச்சி கப்பல் கட்டும் தளம், 15.10.2020 அன்று இராமநாதபுரத்திலுள்ள மீன்பிடி தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தை பார்வையிட்டார்.

